# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 322 புரட்டாதி 30ஆம் நாள் வியாழக்கிழமை 17 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## போர்க்குற்றங்கள் தொடர்பில் சாட்சிகள், ஆதாரங்கள் இருந்தால் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்

### உதயனுக்கு வழங்கிய செவ்வியில் ரணில் பதில்

போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சியங்கள், ஆதாரங்கள் இருந்திருந்தால் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருப்பார்கள். நாம் இதுவரையில் செய்திருப்பவை என்று சொன்னால், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான செயலகம் ஒன்றை அமைத்திருக்கின்றோம். இழப்பீட்டுக்கான அலுவலகத்தையும் அமைத்திருக்கின்றோம். இதனுடாகவேனும் சாட்சிகளும், ஆதாரங்களும் கிடைத்தால் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். அதேநேரம் இதுபோன்ற வழக்குகள் தாமதமாகவதாகத் தெற்கிலும் எம் மீது விமர்சனங்கள் உள்ளன - என்று தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில்.



21

## சிறிரங்காவை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஒக். 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்காவை கைது செய்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடகப் 25

### தமிழ் அரசியல் கட்சிகளின்

# கோரிக்கைகளை ஏற்கார் கோத்தா!

### விமல் வீரவன்ச அழுத்தம் திருத்தம்

கொழும்பு, ஒக். 17

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார். 23

## தேர்தல் தொடர்பில் 673 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 17

அரச தலைவர் தேர்தல் சட்ட மீறல் சம்பவங்களுடன் தொடர்புடைய 673 முறைப்பாடுகள் கடந்த ஒரு வாரத்தினுள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக் 03

## தேர்தலை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் களத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 17

இலங்கையின் 8ஆவது அரச தலைவர் தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்றையதினம் கொழும்பை வந்தடைந்தனர். 03

### மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த

## ராஜபக்சாக்களின் கும்பலை ஆதரிக்கப்போகின்றீர்களா?

### பொன்சேகா பகிரங்கக் கேள்வி

கொழும்பு, ஒக். 17

'மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வாழ்க்கை நடத்திய ராஜபக்ச கும்பலிடமா மீண்டும் நாட்டைக் கையளிக்கப் போகின்றீர்கள்?' இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற 23

## கோத்தாவுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஒக்.17

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வவுனியாவில் போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியாவில் கடந்த 970 நாள்களாகத் தொடர் போராட் 23

## யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் தளம் திறப்பு

### மைத்திரி, ரணில் கூட்டமைப்பினர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

பலாலி வானூர்தி நிலையம் பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு இன்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. தமிழகத்தின் சென்னையிலிருந்து 9.55 மணிக்குப் புறப்படும் வானூர்தி, காலை 11 மணிக்கு பலாலியை வந்தடையும்.

வானூர்தி நிலையத் திறப்பு விழாவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்றைய நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

(விரிவு 10ஆம்,11ஆம் பக்கங்களில்)

## இராணுவத் தளபதியை முன்வைத்து கோத்தாவின் பரப்புரை தவறானதே

### சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளேன் என்கிறார் தேர்தல்கள் ஆணையாளர் தேசப்பிரிய

கொழும்பு, ஒக். 17

தேர்தல் பரப்புரை விளம்பரத்தில் தற்போதைய இராணுவத் தளபதியின் ஒளிப்படங்கள், அவரின் கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டமை தவறானது - என்று தெரிவித்தார் தேர்தல்கள் 23

## பலாலி வானூர்தி நிலையத்துக்கு எதிராக சிலர் இன்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் இன்று திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் சிலர் அதற்கு எதிராகப் போராட்டம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இலங்கையின் 5ஆவது பன்னாட்டு வானூர்தி நிலையமாக யாழ்ப்பாணம் வானூர்தி நிலையம் இன்று காலை 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. குறித்த பகுதியில் தமது நிலங்கள் விடுவிக்கப்படாமல் 03

## யாழ். மாற்றுக் குடிதண்ணீர் திட்டத்துக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி

கொழும்பு, ஒக். 17

யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவுசெய்ய உருவாக்கப்படும் 3.6 பில்லியன் பெறுமதியுடைய மாற்று குடிதண்ணீர் திட்டத்துக்கு அமைச்சரவை 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## தவறஞ்சன் டனுஷாந்

(யா/தந்தைசெல்வா தொடக்க நிலைப்பள்ளி
தெல்லிப்பழை)



2019 ஆம் ஆண்டு
தரம் : 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 163 புள்ளிகளைப்
பெற்றமையையிட்டு

எங்கள் செல்லமகன் தவறஞ்சன் டனுஷாந் புலமையில் பரிசு பெற்றதால் பூரிப்போடு வாழ்த்துகின்றோம். தமிழ் கற்று புலமைப் பரிசு புள்ளி 163 ஐப் பெற்றீர்............ வாழ்த்துகின்றோம். வாழ்த்துகின்றோம். வாழ்க்கைப் பாதையின் கல்விச்சாலையில் மாணவனை வழி நடத்திய அனைத்து **ஆசிரிய** பெருந்தகைகளுக்கும் இரு கரம் கூப்பி நன்றி கூறுகின்றோம்.

நன்றி.... நன்றி.... நன்றி...

வாழ்த்தி நன்றி கூறும்
அப்பா, அம்மா,
தங்கை, அப்பம்மா, அம்மம்மா, மாமன்மார்,
அத்தைமார், சித்தாமார், சித்திமார், அப்பப்பா,
பெரியப்பா, பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், தம்பி.

Congratulations Congratulations

(CS 28735) (13.17)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## தரம் 06 மாணவர் அனுமதிக்கான விண்ணப்பம்

கோரல் - 2020

**2020**ஆம் ஆண்டு தரம்**06** இல் இணைய தகுதியுள்ள மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்ப படிவங்களை கல்லூரியின் மாணவர் நலன்புரிச் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**இம் மாணவர்களுக்கான பாடசாலையால் வழங்கப்படும் மேலதிக சலுகைகள்**

**01.** எமது கல்லூரியில் விசேடமாக நடைமுறைப்படுத்தும் புலமைப் பரிசில் நிதியத்தின் புலமைப்பரிசில் தரம் **06** தொடக்கம் **13** வரை மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும். **(J.C.C Edu. Care Trust)**

**02.** தரம் **06** இல் இருந்து விசேட கணினிப் பயிற்சி

**03.** இலவச கரம், சதுரங்கம், மேசைப்பந்து பயிற்சி

**04.** இலவச கராத்தே தற்காப்பு கலைப்பயிற்சி

புலமைப்பரிசில் பரீட்சையில் **110** புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுமதி விசேட பரீட்சையில் தெரிவு செய்யப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 30.10.2019**

**அதிபர்**

C11482(16/17)

**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

நல்லின தென்னம் நாற்றுக்களும், குறுகிய காலத்தில் பயன்தரக்கூடிய நாற்றுக்களும் விற்பனைக்குண்டு. **077 659 2044**

AC49516(37)

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 16.10.2019 | 2649 | பச்சை |

கடகம்

வெற்றி இலக்கங்கள்: 02 12 19 52

வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=

17.10.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**கோடீபதி கப்ருக**

R 05 32 42 69

3 5 1 9 7

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 143,853,543/-

சீட்டிழுப்பு வாரம்: 508
திகதி: 2019 ஒக்டோபர் 15
வர்ணம்: இளஞ்சிவப்பு
செவ்வாய்

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**அத கோடிபதி** ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 763
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.10.16

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,976,080/-

வெற்றி இலக்கங்கள்: 01 02 62 76 B

விசேட வெற்றி இல. 7943

அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 ... 0114 825 825

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

சீட்டிழுப்பு இல.: 3249 திகதி: 2019.10.16 புதன்கிழமை

ஊதா

SATURDAY FORTUNE

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் |
|---|---|---|
| 03 25 42 53 R | 72 | 65,306,740/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**சம்வர்தன வாசனாவ**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு வாரம் ▶ 288
சீட்டிழுப்பு திகதி ▶ 16.10.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| Y | 09 56 61 | 09 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 45, 466, 080/=

18.10.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

**Dialog MEGA அதிஷ்டம்**



ஈஸ்வரி கருணைநாதன்
மட்டக்களப்பு

# 24வது கோடீஸ்வர வெற்றியாளர்

இதுவரை வெற்றியீட்டியுள்ள
வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| கோடீஸ்வரர்கள் | 24 |
| 10 இலட்ச வெற்றியாளர்கள் | 203 |
| இலட்சாதிபதிகள் | 1160 |

இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,769,232/-

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் பிரமாண்டமான பரிசு குவியல்
#121# டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

Dialog
an axiata company
www.dialog.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி





எமது நீதிமன்ற உத்தியோகத்தர்
**தெ.பிரதாப்** அவர்களின் பாசமிகு
தந்தையார்
**சின்னத்தம்பி தெய்வேந்திரன்**
அவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மாவட்ட நீதிபதி, பதிவாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்**
**மாவட்டநீதவான் நீதிமன்றம், முல்லைத்தீவு**

## இதய அஞ்சலி

### சிவத்திரு. காசிநாதர் சிவபாலன்



எங்கள் தேவஸ்தானத்தில் 1978 முதல் பிரதம லிகிதராகவும் இன்று வரை சிவத்தமிழ்ச்செல்வி சைவத் தமிழ் ஆய்வு நூலகத்தின் நூலகராகவும் அரும்பணியாற்றிய சிவ நெறித் தொண்டரின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெறத் துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாக சபை**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

C37752(16/17)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 10 . 1929



மறைவு
28 . 09 . 2018

### திருமதி பாக்கியம் தற்பரானந்தம்
(ஓய்வுபெற்ற அதியர்)

திதி: புரட்டாதி மாத தேய்பிறை திருதியை

எங்கள் அன்புத்தெய்வம் நீங்கள் எமைவிட்டுச் சென்று
ஓராண்டு ஓடி மறைந்ததம்மா
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
தேடுகின்றோம் உங்கள் அன்பை......
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**மகள்மார் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள்**

## மரண அறிவித்தல்

### எமிலியானஸ்பிள்ளை அன்ரனி ஜெயரட்ணம்



ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எமிலியானஸ்பிள்ளை அன்ரனி ஜெயரட்ணம் கடந்த (15.10.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எமிலியானஸ்பிள்ளை ஞானம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் சின்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அகிலாண்டதேவியின் அன்பு கணவரும் அலோசியஸ், லோரன்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிலுக்காவின் (ஜேர்மனி) அன்பு மாமாவும் அனு, லௌகா,லியாஆகியோரின் பேரனும் ஜெகநாதன், நீற்றாராஜகுமாரி, ஆரோக்கியநாதன் ஜெயராஜா காலஞ்சென்ற பிரான்சிஸ் ஜெயபாலன் மற்றும் பத்திமாமலர், வித்தியானந்தராஜா, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்பு சகோதரனும் வர்ணகுலசிங்கம், சந்திரகுமார் (வசந்தம் பல்பொருள் வாணிபம், சுன்னாகம்), தயாரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயநாதன் (சுவிஸ்), பிரமிளாதேவி, கௌசல்யாதேவி காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் அருந்தவமலர் (சாந்தா), வசந்தகுமாரி, அழகேஸ்வரி, சிவநந்தினி (பிரான்ஸ்) காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் தயானந்தன் (சுவிஸ்), கிருபாகரன் (சுவிஸ்) காலஞ்சென்ற திரேசம்மா, யோகராஜா, டெய்சி, வவி, விக்னராஜா, றுபீனா, சுகிர்தராஜன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதி ஆராதனைகள் இன்று (17.10.2019) வியாழக்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று ஏழாலை கிழக்கு இசிதோர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்று ஏழாலை கிழக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS28431(16/17)

**தகவல்: குடும்பத்தினர்**

## பொன்மொழிகள்

- தன் காலில் நிற்க எது உதவுமோ அதுவே கல்வி.
- உண்மையைப் போன்ற தவம் எதுவும் இல்லை.
- மன்னிப்பதே ஆற்றல் மிக்க ஆயுதம்!
- ஏழை மீது இரக்கம் வைப்பவன் கடவுளுக்குக் கடன் கொடுக்கிறான்.
- உண்மையே கடவுள்.
- பிறருடைய நற்குணங்களைப் பாராட்டுங்கள்.
- எளிய வாழ்க்கை நிம்மதிக்கு வழி வகுக்கும்!
- எதைப் பார்த்தாலும் நல்ல எண்ணத்தோடு பார்க்க வேண்டும்.
- வாய்மையே மனதைத் தூய்மைப்படுத்த வல்லது.

## மரண அறிவித்தல்



### இளையதம்பி மனோன்மணி

அராலியைப் பிறப்பிடமாகவும் அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மனோன்மணி கடந்த (15.10.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் கனகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும் தில்லையம்பலத்தின் அன்புச் சகோதரியும் ஈஸ்வராம்பிகை குகனேஸ்வரி, ஈஸ்வரன், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் பாலராசா, சாந்தகுமார், டயானா, பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பவிசாளினி, பவிசாளன், கிஷானி, சுஜீவன், வேஸ்வினி, ஜஸ்வினி, சியானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2019) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூனாவடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 205 1454**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### இராமசாமிஐயர் சிவஞானசுந்தரஐயர்
(பத்திரிகை விற்பனை முகவர்)

கெருடாவிலை பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமிஐயர் சிவஞானசுந்தரஐயர் நேற்று (16.10.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமிஐயர் வள்ளியம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரக்குருக்கள் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்ஷினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜதீஸ்வரக்குருக்கள் (பிரதம குரு, நா/ வெயிலுகந்த விநாயகர் ஆலயம்), மேகிலா (கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் உமாசுதன், பிரியலஷ்சுமி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சோமஸ்கந்தமூர்த்தி ஐயர் (கெருடாவில) அவர்களின் அன்புச் சகோதரனும், கணேசமூர்த்திஐயர் (கெருடாவில)அவர்களின் சிறிய தந்தையும் லோகநாயகி, மங்கையற்கரசி, பத்மாவதி காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரக்குருக்கள், ஆனந்தலிங்கம் மற்றும் கலாஜோதி, பத்மரஜனி, பானுமதி ஆகியோரின் மைத்துனரும் சிவனேசக்குருக்கள், விஜயரத்தினம்ஐயா காலஞ்சென்ற மகேஸ்வரக் குருக்கள் மற்றும் தவமலர், முரளிதரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2019)வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். CS28431(16/17)

**33, அரசடிப்பிள்ளையார் வீதி,**
**நாயன்மார்கட்டு, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 283 5559**

## சிரிப்பே மருந்து

சிரிப்புஎன்பதுமனிதனோடுகூடப்பிறந்த ஒரு உணர்வின் வெளிப்பாடு. இது ஒரு ஆரோக்கியமான மனிதனிடமிருந்து பலவிதமானசந்தர்ப்பங்களிலும்இயல்பாக வெளிப்படக் கூடிய ஒன்று. சிரிப்பு மனதையும், உடலையும் வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும். சிரிக்கும் போது உடலில் 300 தசைகள் அசைகின்றன. உடலிலும், மனதிலும் உள்ள அழுத்தங்களும், கவலைகளும் வெளியேறுகின்றன.

குறிப்பாக முகத்திலுள்ள தசைகளும், நெஞ்சுத் தசைகளும் பலம் பெற்று ஆரோக்கியத்தைத் தருகின்றன. சிரிக்கும் போது ஆழமாக மூச்சை இழுக்க முடிவதால் உடல் கூடிய ஒட்சிசனை உள்வாங்கிக் கொள்கிறது. நோயெதிர்ப்புச் சக்தி உடலில் அதிகரிக்கிறது.

சிரிப்பு என்பது மாந்தர்களிடம் மட்டுமல்லாமல், மிருகங்களிடமும் காணப்படுகிறது.

பலர்குழுமியுள்ளஇடத்தில்ஒருவர்சிரித்தால்அதைப்பார்த்துபலர்சிரிக்கவாய்ப்புண்டாகும். "சிரிப்பு" என்பது பல வித ஒலிகளுடன்மகிழ்ச்சியைதெரிவிப்பதாகும்.

இது நகைச்சுவையை கூறும் போதோ அல்லது கேட்ட போதோ வாய்விட்டுச் சிரித்துமகிழ்ச்சியைவெளிப்படையாகக் காட்டுவதாகும்.

### தேர்தல்...

குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 6 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 650 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

அத்துடன் நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் நேற்று மாலை வரையான 24 மணி நேரத்தில் 85 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### தேர்தலை...

இலங்கையின் 8ஆவது அரச தலைவரைத் தெரிவுசெய்யும் தேர்தல் அடுத்த மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் 120 பிரதிநிதிகள் இலங்கைக்கு வரவுள்ளனர். இவர்கள் இலங்கையின் அனைத்து மாவட்டத்திலும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். நேற்றையதினம் 10 பேர் முதல் கட்டமாக இலங்கையை வந்தடைந்தனர். (ம)

### பலாலி...

உள்ளவர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ம-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனங்கற்கண்டு சாப்பிட்டால் இந்த பிரச்சினையெல்லாம் ஓடியே போய்விடும்



இது ஒரு சுத்திகரிக்கப்படாத அல்லது தூய்மைப்படுத்தப்படாத சர்க்கரை ஆகும். கரும்பு மற்றும் பனை மரத்திலிருந்து இது தயாரிக்கப்படுகிறது. எனவே தான் இதை கற்கண்டு என்றும் பனங்கற்கண்டு என்றும் அழைக்கின்றனர். சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மிகுந்த இனிப்பு சுவையுடன் இருக்கும். ஆனால் பனங்கற்கண்டில் குறைந்த அளவு இனிப்பு சுவை இருப்பதால் நமது உடலுக்கு மிகவும் பாதுகாப்பானது. நமக்கு ஏற்படும் சின்ன சின்ன உடல் உபாதைகளுக்கு இதை வீட்டில் பயன்படுத்தலாம்.

இதில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன. இதில் உள்ள சத்துக்கள் உங்களுக்கு ஏற்படும் ஆஸ்துமா, அனிமியா, மூச்சுப் பிரச்சினை, இருமல், சளி, இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக பிரச்சினை போன்றவற்றிற்கு பயன்படுகிறது. சரி வாங்க இனி இதை பயன்படுத்துவதால் என்னென்ன அற்புதங்கள் கிடைக்கும் என்பதை பார்ப்போம்.

அந்த காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் இந்த பனங்கற்கண்டை சளி மற்றும் இருமலுக்கு பயன்படுத்தினர். மேலும் இது தொண்டைக் கரகரப்பு, சளியை வெளியேற்றுதல் மற்றும் இருமலை குறைதல் போன்றவற்றை செய்கிறது. இதற்கு இதை நீங்கள் வாயில் போட்டு அந்த உமிழ் நீரை முழுங்கினால் போதும்.

சிறிது பனங்கற்கண்டு, பாதாம் பருப்பு மற்றும் சீரகம் சேர்த்து இரவில் படுப்பதற்கு முன் சாப்பிட்டு வந்தால் உங்கள் நினைவாற்றல் அதிகரிக்கும். மேலும் கண் பார்வையும் அதிகரிக்கும்.

உங்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்த பனங்கற்கண்டை பாதாம் மற்றும் மிளகுத் தூளுடன் சேர்த்து வாரத்திற்கு 2 முறை சாப்பிட்டால் போதும் உங்களை எந்த நோயும் அண்டாது.

உங்களுக்கு எப்பொழுதும் சோர்வாக இருப்பது மாதிரி தோன்றுகிறதா? அதற்கு 1/2 டேபிள் ஸ்பூன் பசு மாட்டு நெய்யுடன் சிறிது பனங்கற்கண்டு மற்றும் சிறிது நிலக்கடலை சேர்த்து சாப்பிட்டால் போதும் மிகவும் சுறுசுறுப்பாக மாறிவிடுவீர்கள்.

தீராத சளி பிரச்சினை இருந்தால் அதற்கு 2 பாதாம் பருப்பு, 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு, 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத் தூள் பொடி சேர்த்து மிக்ஸியில் போட்டு பொடி பண்ணி பாலுடன் கலந்து குடித்தால் போதும் உங்கள் சளி பிரச்சினை காணாமல் போகும்.

2 டேபிள் ஸ்பூன் வெங்காய ஜூஸ் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் பிரச்சினை சரியாகும். இன்னும் ஏன் 'வெயிட்' பண்ணுரிங்க இப்போதே இந்த மருத்துவ குணம் வாய்ந்த கற்கண்டை பயன்படுத்தி உங்கள் உடல் உபாதைகளிலிருந்து விடுபடுங்கள்.

உங்கள் வாய் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் சீரகம் மற்றும் பனங்கற்கண்டை வாயில் போட்டு மென்று தின்றால் போதும் உங்கள் வாய் துர்நாற்றம் காணாமல் போகும்.

தொண்டைக் கட்டிக் கொண்டு பேச முடியாமல் கஷ்டப்படுகிறீர்களா? 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத்தூள், 1/2 டேபிள் ஸ்பூன் நெய் மற்றும் 1/2 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டை வலி குணமாகும்.

# இளமையிலேயே கொடிய நோய் தாக்காமல் இருக்க உடற்பயிற்சி அவசியம்

நலமான வாழ்க்கையை விரும்புவதாக இருந்தால் நீங்கள் உடற்பயிற்சி செய்வதை தவிர்க்கவே முடியாது. இளமையிலேயே உயிருக்கு உலை வைக்கும் இதய நோய், சர்க்கரை நோய், உயர் கொழுப்பு, உயர் குருதி அழுத்தம், கான்சர், எலும்புகளை பலமிழக்க செய்தல் போன்ற கொடிய நோய்களை வேரறுப்பதில் தினமும் உடற்பயிற்சி செய்வதை தவிர வேறு எந்த மாற்று வழியும் இல்லை.

இன்றைய அவசர யுகத்தில் உடல் ஆரோக்கியமாக இருக்கும் வரை பலரும் உடற்பயிற்சியை அலட்சியப்படுத்தி உடல் நலம் கெட்டபின் தான் அதன் தேவையை உணர்கிறார்கள்.

உடற்பயிற்சி செய்வதற்கு தேவையான சக்தி என்னிடம் இல்லை என்று சொல்பவர்களுக்கு தெரியாத ஒன்று. எளிய உடற்பயிற்சிகளை அவர்கள் முதலில் செய்யத் தொடங்கினால் விரைவில் அவர்கள் உடல் வலிமையுறுவதை உணர முடியும்.

அதிகாலையில், வெறும் வயிற்றில் தான் எளிய பயிற்சிகளை செய்ய வேண்டும். ஏனெனில் காலையில் தான் அதிக கலோரிகள் தொடர்ந்து எரிக்க முடியும். இதனால் கொழுப்பு விரைவில் கரையும்.


## விற்பனைக்கு உண்டு


**மோட்டார் சைக்கிள்கள்**

| | | |
|---|---|---|
| NP BGP-XXXX | Scooty Pep + | TVS |
| NP BHU-XXXX | RAYz | YAM |
| NP BGA-XXXX | Discover 100 | Bajaj |
| NP BGQ-XXXX | Pleasure | Hero |
| NP BHX-XXXX | Pleasure | Hero |
| NP BFL-XXXX | Pleasure | Hero |
| CP BHS-XXXX | Pleasure | Hero |
| NP BHS-XXXX | Pulsar Rs | Bajaj |
| NP BHB-XXXX | Pulsar Rs | Bajaj |
| NP BGN-XXXX | FAZ | YAM |
| NP BHE-XXXX | FAZ | YAM |
| NP BGC-XXXX | CT1 | Bajaj |
| NP BHW-XXXX | ALPHA | YAM |
| NP BGQ-XXXX | Wego | TVS |
| NP BFW-XXXX | Wego | TVS |
| NP BHK-XXXX | Wego | TVS |
| NP BFY-XXXX | Pulsar Ns 200 | BAJ |
| NP BFY-XXXX | Pulsar 180 | BAJ |
| NP BHR-XXXX | Pulsar 200 | BAJ |
| NP BHC-XXXX | Pulsar 150 | BAJ |
| NP BFY-XXXX | Hornet | HONDA |
| NP BHX-XXXX | Fasino | YAM |
| NP BGN-XXXX | Scooty Pep + | TVS |
| NP BHW-XXXX | Ray - ZR | YAM |
| NP BHU-XXXX | R15 | YAM |
| NP BHY-XXXX | DIO | HON |
| NP BGP-XXXX | DIO | HON |
| NP BHL-XXXX | DIO | HON |
| NP BGB-XXXX | DELUXE | HERO |
| NP BHS-XXXX | DELUXE | HERO |


தொடர்புகளுக்கு : மேனகாந் 077 060 8074, 077 364 4409


TRADE FINANCE & INVESTMENTS PLC.
No- 233, Stanley Road, Jaffna
021 221 9997, 021 222 1898


## உணர்வுகள்




## அழகிய படங்கள் வரைய கற்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளாஸ்ரிக் அரைத்து கொடுக்கப்படும்

பாவிக்கப்பட்ட, கழிவு பிளாஸ்ரிக் வகைகள் அனைத்தும் மீள் சுழற்சிக்கு உகந்தவாறு அரைத்து தூளாக கொடுக்கப்படும்.

**0779561525** (C/11481)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021493 1111

## மரண அறிவித்தல்

C11485(16/17)

### திருமதி சுந்தரலிங்கம் புனிதவதி

அராலி தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் புனிதவதி அவர்கள் கடந்த **(15.10.2019)** செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, நாகம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் சுந்தரலிங்கத்தின் (அப்பன்), பாசமிகு மனைவியும் சுசீந்திரன், கரிகரன், ஆதித்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதர்சிகாவின் (வத்தளை புனித சென் அன்ரனீஸ் கல்லூரி) பாசமிகு மாமியாரும் சந்திரசேகரமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற கொங்கேஸ்வரன், ஞானவதி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தட்சாயினியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை சுன்னாகம் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (18.10.2019) வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.




**தகவல்: குடும்பத்தினர்.**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**
**077 045 8328/ 077 363 1845**

## மரண அறிவித்தல்

### மாதவர் கோவிந்தர்

*(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)*



அன்னை மடியில் 27.07.1938 ஆண்டவன் அடியில் 16.10.2019

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மூளாய் தெற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாதவர் கோவிந்தர் (16.10.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாதவர் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பெரியதம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர், சடாச்சடதேவி, தங்கம்மா, சின்னம்மா மற்றும் இராசம்மா, தெய்வானைப்பிள்ளை (மலேசியா), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, ஆனந்தவடிவேல், சாரதாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் விஜயலக்சுமி (லண்டன்), விஜயகாந்தன் (பிரான்ஸ்), விஜயகுமாரி (சுவிஸ்), புவனேஸ்வரி, விஜயமலர் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசபை, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவராசா (லண்டன்), சுகுணா (பிரான்ஸ்), சிவராசா (சுவிஸ்), குணசீலன் (ஆசிரியர் - கோட்டக் கல்வி அலுவலகம், சங்கானை), மதிஅழகன் (ஆசிரியர் - யா/வட்டு இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் சஞ்ஜிபன் (லண்டன்), சந்துஜன் (லண்டன்), சபிசன் (லண்டன்), அபிசனா (பிரான்ஸ்), அஜந்தா (பிரான்ஸ்), அபிஷன் (பிரான்ஸ்), நிவேதா (சுவிஸ்), நிலான்(சுவிஸ்), நிலானி (சுவிஸ்), சுஜானி (மாணவி, யா/யாழ்ப்பாணக்கல்லூரி), சுஜாருகன் (மாணவன் - யா/ யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூளாய் தெற்கு,**
**சுழிபுரம்.** (CS 28739)(14.17)

**தகவல் : மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**077 611 1277**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தெய்வேந்திரன்




வதிரி சிங்ககிரி இரத்தினவாசம் என்ற முகவரியைச்சேர்ந்த சின்னத்தம்பி தெய்வேந்திரன் (துரை) கடந்த (15.10.2019) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்திவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் மூன்றாவது மகனும் காலஞ்சென்றவர்களான சிவபுண்ணியம் செல்வாம்பிகை தம்பதிகளின் மருமகனும் ஜெகதாம்பிகையின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரன், புவனேந்திரன், மற்றும் மகேந்திரன், செல்லப்பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் குமாரராசன் (கொழும்பு பிறைன்ஸ் முகாமையாளர்), தெய்வாம்பிகை, தெய்வராசன் ஆகியோரின் மைத்துனரும் வைகுந்தன், சித்திராங்கி (ஆசிரியர், யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), பிரமிளா (ஆசிரியர்- முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), பிரதாப் (நீதவான் நீதிமன்றம் , முல்லைத்தீவு). ஆகியோரின் அன்புத்தந்தையும் கிருசாந்தன் (பிரதேச செயலகம்-பருத்தித்துறை), சுதர்சன் (மாவட்ட செயலகம் முல்லைத்தீவு), சோபிதா, சசீரா( மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகர்சன், ஜினோஜா, வைஷ்ணிகா கிஷாணன், அபிஷாந், ஹரிஸ், பிரகீதன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2019) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இரத்தின வாசம், வதிரி** **தகவல்: குடும்பத்தினர் 077 699 7195**

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 03 . 1952 மறைவு 16 . 10 . 2019

### சைவத்திரு காசிநாதர் சிவபாலன்

(பிரதம லிகிதர் - தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் நூலகர் - சைவத்தமிழ் ஆய்வு நூலகம் தெல்லிப்பழை)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பதியைப்பிறப்பிடமாகவும் தெல்லிநகர் துர்க்கையம்மனின் சந்நிதானத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சைவத்திரு காசிநாதர் சிவபாலன் நேற்று (16.10.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் சிவகாமசுந்தரி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் (வட்டக்கச்சி, கல்மடு) சரோஜினிதேவி (கோண்டாவில்), ஈஸ்வரிதேவி (அச்சுவேலி) மற்றும் சிவகடாச்சம் (கடாபி-மட்டுவில்), சிவஞானசுந்தரம் (திருக்கணிதம்), கிருபாதேவி (இடைக்காடு) ஆகியோரின் சகோதரரும் புஸ்பகாந்தி, தவராஜா, காலஞ்சென்ற தவரத்தினம் மற்றும் மனோன்மணி, விமலினி காலஞ்சென்ற சண்முகானந்தம் ஆகியோரின் மைத்துனரும் அரவிந்தன், அனுஷா, அமுதா, அஜந்தன், சத்தியேந்திரன் சர்வநாதன் விஸ்ணுகா, திலீபன் அபிராமி, ஆரணி, தாரணி, மயூரதன், பிரசன்னா, பிரவீணா, பிரதீபா, பிரபூர்ணா, பிரணவி, நிரோஜினி, தர்ஷினி ஆகியோ ரின் பெரியப்பாவும் வள்ளிநாயகி, ஜெகதீஸ்வரன், யோககிரிநாதன், தயாழினி, உமா, சுகிதா, சுதன், சுரேகா, சதீசன், சேந்தன், வினோஜா, லம்போதரன், யோகா நந்தன், சிவசுதன், நந்தகுமார், குமணன், ஸ்ரீரமணன் ஆகியோரின் மாமாவும் அபிநயா, ருஷாணி, விதுஷன், தேனுகா, திலக்ஷன், திஷாணி, சங்கீதன், சயாணி, கினோஷன், கஜீவன், லேனுஷா, லக்ஷாயினி, பிரியங்கா, தானுகா, தாணிகா, தஜிகா, சபிநயா, ஜதுஸ்த்திகா, அஸ்வின், யஸ்வினா, வாரனா, லக்ஷனா, நிகித்தா, ஹனித்தா, ஜெய்றந், கேஷகி, அகிஷாந், ஜோதிஷா, காசிநாதன், சைந்தவி சுருதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2019) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடைக்காடு கலட்டித்தோட்டம் சோதிவைரவர் கோவிலடியிலுள்ள அன்னாரின் மருமகன் ஸ்ரீரமணன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 102 9133** **தகவல் : மருமகன் -ஸ்ரீரமணன்**

## மரண அறிவித்தல்

### கந்தையா கிருஷ்ணபிள்ளை

(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை)



மண்ணில் 27.04.1933 விண்ணில் 16.10.2019

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் தற்போது உடுவில் அம்பலவாணர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணபிள்ளை நேற்று (16.10.2019) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்பு கணவரும் மோகன்ராஜ் (லண்டன்), கவிதரன் (பிரதேச செயலகம், கரவெட்டி), ஜெயமாலா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகி (லண்டன்), பிரமிளா (வடமராட்சி கல்வி வலயம்), திருத்தணிகைநாதன் (டயலொக்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகராசா, மகாலட்சுமி, பூமலட்சுமி மற்றும் சரஸ்வதி, தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் நிலா, கம்சினி, திருபரன், சங்கரநாதன், பரணிகா, ஆரதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்பலவாணர் வீதி, உடுவில்கிழக்கு சுன்னாகம்**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்



அகில இலங்கை சமாதான
நீதவானாக சத்தியப்பிரமாணம்

## இராஜேந்திரம் சுஜீந்தன்

Pl. Fire Eng.(UK), Dip.PE
(பதில் பொறுப்பதிகாரி.
யாழ். மாநகர சபை தீயணைப்பு)

பழம் வீதி. கந்தர்மடத்தைச் சேர்ந்த யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவரும் அமரர் சி. இராசுJP அவர்களின் அன்பு பேரனுமாகிய இராஜேந்திரம் சுஜீந்தன் யாழ். மேல் நீதிமன்ற **நீதிபதி கௌரவ அ.பிரேம்சங்கர்** முன்னிலையில் 11.10.2019 அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(CS 28738)

**விநாயகர் பல்பொருள் வாணிபம்,
பழம் வீதி, கந்தர்மடம்.**

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் ச.திலீபன் அவர்களது தந்தை

**அமரர் தம்பிஜயா சந்திரன்**

அவர்கள் 14.10.2019 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(CS/28736)

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, ஆசிரியர் வட்டம்**

## உடனடி வேலை வாய்ப்பு

Wanted **பக்க வடிவமைப்பாளர்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு Corel draw, Photoshop என்பவற்றில் பக்கங்கள் வடிவமைப்புச் செய்யக்கூடிய அனுபவமுள்ள Graphical designer உடனடியாகத் தேவை (யாழ்நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

**தொடர்பு: 077 138 6661**

# அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு முடிவு

**யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின்**
**2019 ஆம் ஆண்டுக்கான உற்சவகால அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பானது 15.10.2019 அன்று மாலை 5 மணியளவில் சிறி நதியா நகைமாளிகை உரிமையாளரின் பங்குபற்றலோடு இடம்பெற்றது.**

இந் நிகழ்வில் வெற்றியாளரின் அதிர்ஷ்ட இலக்கங்கள் முறையே கலந்து கொண்ட விருந்தினர்களால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு தெரிவுசெய்யப் பட்டுள்ளது. முறையே முதலாம். இரண்டாம். மூன்றாம் பரிசுகளையும் ஐந்து ஆறுதல் பரிசில்களையும் வெற்றிகொண்ட வெற்றியாளரின் வெற்றி இலக்கங்களை நீங்கள் கீழே காணலாம். இந்த ஆண்டும் எமது உற்சவகால அதிர்ஷ்ட இலாப ரிக்கெட் விற்பனைக்காக பரிசுகளை வாரி வழங்கிய அனுசரணையாளர்கள் மற்றும் ரிக்கெட்டுக்களைப் பெற்றுக் கொண்ட பாசம் மிக்க உறவுகள் தங்கள் யாவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். தொடர்ந்தும் எமது சேவைகளோடு இணைந்திருங்கள்.

- *முதலாம் பரிசு*
  32 இஞ்சி தொலைக்காட்சியினைப் பெறும் வெற்றி இலக்கம் - **31200**
- *இரண்டாம் பரிசு*
  துவிச்சக்கரவண்டியினைப் பெறும் வெற்றி இலக்கம் - **02092**
- *மூன்றாம் பரிசு*
  **Stand Fan** இனைப்பெறும் வெற்றி இலக்கம் - **76600**

**ஐந்து ஆறுதல் பரிசுகளை பெறும் வெற்றி இலக்கங்கள்**

**01. 01354 02. 84850 03. 15045**
**04. 46584 05. 07865**

(cs.28737) (13.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





**திருமதி றஜனி சிவப்பிரகாசம்**
**(அதிபர்)**

எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றிய **திருமதி றஜனி சிவப்பிரகாசம்** அவர்கள் அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி **இலங்கை அதிபர் சேவை தரம்** III இற்கு தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டுவதுடன் மேலும் பல பதவி உயர்வுகள் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி பிரபாலினி வரதராஜன்**
(MEd,SLTS - I.)

எமது பாடசாலை ஆசிரியை திருமதி பிரபாலினி வரதராஜன் அவர்கள் தேசிய கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் சிறந்த ஆசிரியருக்கான **"குரு பிரதீபா பிரபா"** விருதினை 04.10.2019 அன்று பெற்றுக் கொண்டதையிட்டு அகமகிழ்ந்து பாராட்டுவதோடு அவர் மேலும் பல சாதனைகளைப் புரிந்து உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

Congratulations

**வாழ்த்துவோர் :— பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/ யாழ்.இந்து ஆரம்பபாடசாலை.**

(IN/11437)(11,17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன் இ.கனிஷ்ரன்** **164 புள்ளிகள்**

**செல்வி ஜெ.அபினா** **160 புள்ளிகள்**

எமது பாடசாலையைச் சேர்ந்த வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற இரு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் பரீட்சைக்குத் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

1. சு.சயந்தரன்
2. உ.சமஸ்ரியா
3. ப. டிலக்சனா
4. பி.சங்கவி

05. சு.துர்சிகா
06. தி.தீபிகா
07. யோ.தர்சன்
08. செ.சாருஜா

Congratulations

இவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

**பாடசாலை சமூகம்
யா/ போக்கட்டி றோ.க.த.க.பா**

(CS 10733)

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 26 . 07 . 1992



விண்ணில் 07 . 10 . 2019

## மகேஸ்வரன் வாகீசன்

*(A/L 2011, சென்ஜோன்ஸ் கல்லூரி, பழைய மாணவன்)*

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட
**மகேஸ்வரன் வாகீசன்**
07.10.2019 திங்கட்கிழமை அகாலமரணமான செய்தி கேட்டு ஆறாத்துயரடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**2011 யா/சென்ஜோன்ஸ் கல்லூரி
மாணவர்கள் மற்றும் நண்பர்கள்.**

(CS 28722)(14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குள்ள ராஜா



மங்களபுரம் என்ற ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரியும் இருந்தார். ராஜாவோட உயரம் நாலரை அடிதான். ஆனா அமைச்சரோ ஆறடி உயரம் இருந்தார். ராஜா குள்ளமா இருந்தாலும் அது பத்தி கவலையில்லாம இருந்தார். அவர் விருப்பத்திற்கேற்ப மந்திரி நடந்தார்.

ஒருமுறை ராஜாவும், மந்திரியும் மாறுவேஷத்துல நகர்வலம் போனார்கள். அப்போது ஒரு வீட்டில் ஒரு அப்பா, தன் பையனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார்.

"நல்லா குதிச்சு உயரமா ஆகுற வழியை பாரு. இல்லேன்னா நம்ம ராஜா போல குள்ளமா ஆயிடுவே" என்று கூறினார். இதைக் கேட்டதும் ராஜாவுக்கு கடுங்கோபம் வந்தது. மாறுவேடத்தை யாருக்கும் காட்டிக்கொடுக்கவும் விரும்பவில்லை. இருவரும் விடுவிடுவென்று அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அன்றைக்கு முழுவதும் ராஜா கோபமாகவே இருந்தார்.

மறுநாள் காலை ஊர் முழுக்க தண்டோரா போடச் சொன்னார் ராஜா. "இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், நாலரை அடி உயரத்துக்கு மேல் ஊருல ஆம்பிளைங்க யாரெல்லாம் இருக்காங்களோ, அவங்க எல்லோரும் உடனடியா ஊரை விட்டு வெளியேறணும்" என்று அறிவிப்பு வெளியிட்டார் ராஜா.

அதனால் ஊருல இருந்த எல்லா பெரியவங்களும் உடனடியா காலி பண்ணிட்டாங்க. மந்திரி ஆறடி உயரம் இருந்தாலும், மந்திரி மட்டும் காலி பண்ணாம இருந்தார். ஆனால், ராஜா பார்த்தால் திட்டுவாரேன்னு மறைந்து வாழ்ந்து வந்தார். எல்லா பெரியங்களும் வெளியே போய்ட்டதால சின்ன பசங்க சில பேரை ஒற்றர்களாகவும், அமைச்சர்களாகவும் ராஜா நியமிச்சார். ஆனா வீரர்களா இருக்க உயரமும் வேணுமே? அதனால வீரர்கள் மட்டும் கிடைக்கவே இல்ல.

இதெல்லாம் ராஜாவை எப்போ கவிழ்க்கலாம் என்று காத்துக் கொண்டிருந்த எதிரி நாட்டு ராஜாவுக்கு தெரிந்தது. அதனால் மங்களபுரம் மேல் போர் தொடுக்க போவதாக அறிவிப்பு தந்தார். அத்துடன், தனது வீரர்களோடு ஊரையும் முற்றுகையிட்டார். மங்களபுரத்தில் வீரர்கள் இல்லாததால் ராஜாவுக்கு ஒரே கவலை. இந்த நேரத்தில் ராஜாவின் முன்னால் மந்திரி அரண்மனைக்கு வந்தார்.

மந்திரியைப் பார்த்ததும் ராஜாவுக்கு சந்தோஷம். ஆனா, வெளியில அதை காட்டிக்காமல் கோபமாக பேசினார். "இப்ப ஏன் இங்க வந்தே?" என்று கேட்டார். "மன்னரே, என் கால் ரெண்டையும் பாருங்க. நான் குள்ளமா இருக்கணும் என் கிறதால அப்படியே வெட்டிக்கொண்டேன்" என்றார் அமைச்சர்.

ராஜா அப்போதுதான் அமைச்சரின் காலைப் பார்த்தார். கால் குண்டா இருந்தது. ஆனால், கால் முழங்காலை மடிச்சு சின்னதா இருப்பது போல காண்பித்திருந்தார் அமைச்சர். ராஜாவுக்குப் புரிந்தது. அமைச்சரின் நகைச்சுவையை ரசித்தார்.

உடனே வேலையில் சேரும்படி அமைச்சருக்கு ராஜா உத்தரவிட்டார். உடனடியாகக் களத்தில் இறங்கிய அமைச்சர், மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

குள்ளமான சிறுவர்களை எதிரி நாட்டு ஒற்றர்களுக்குச் சந்தேகம் வராமல் வெளியே செல்வதற்குப் பயிற்சியளித்தார். அவர்கள் மூலம் ஊரை காலி செய்துவிட்டுப்போன வீரர்களுக்கு தகவல் கொடுத்தார். வீரர்கள் எல்லோரும் பின்புறமாக அரண்மனையில் குவிந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரி நாட்டு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். அதை தாங்க முடியமால் எதிரி நாட்டுப் படையினர் ஓட்டம் பிடித்தார்கள்.

நாட்டை ஆபத்தில் இருந்து காப்பாற்றியதற்காக மந்திரிக்கு ராஜா நன்றி தெரிவித்தார். நாட்டை ஆள்வதற்குத் தேவை வீரமும், அறிவும்தான். அதை ஒழுங்காகச் செய்வதுதான் முக்கியம் என்பதை ராஜா உணர்ந்து கொண்டார்.

உடனே உயரமானவர்களுக்கு விதித்த தடையை நீக்கினார். எல்லோரும் ராஜாவை வாழ்த்தினார்கள்.




**வேலையாள் தேவை**
+ உணவு பரிமாறுபவர் + காசாளர் (பெண்கள்)
+ அப்பம் போடுபவர்
**077 465 2860** (cs.28740) (13.17)

**SAIN CITY HOTEL**
9A,33rd Lane, Wellawatta, Colombo - 06
- Budget Rooms
- Single Rooms
- Double Rooms
- Family Rooms

(CS/28734)
0713073266/ 0112364523

**பணியாளர் தேவை**
பக்க வடிவமைப்பாளர் (Photo shop)
சம்பளம் 40,000/=
அல்பம் கட்டுபவர்கள்
சம்பளம் 40,000/=
விற்பனை பிரதிநிதி
சம்பளம் 30,000/=
பழகி வேலைசெய்பவர்களும் விண்ணப்பிக்கலாம் மற்றும் விடுதி பராமரிப்பாளர்கள் சம்பளம் - 30000/=
**மூர்த்தி** டிஜிட்டல்
62/20, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
077 224 7428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆர்யாவின் படத்தில் இணையும் சாக்ஷி

'கஜினிகாந்த்', 'காப்பான்' படங்களில் இணைந்து நடித்த ஆர்யா சாயி ஷாவுக்கு காதல் மலர்ந்தது. இருவரும் அண்மையில் திருமணம் செய்து கொண்டனர். நிஜத்தில் ஜோடியான இவர்கள் தற்போது, மீண்டும் திரையில் இணைந்து 'டெடி' என்ற படத்தில் இணைந்து நடித்து வருகிறார்கள்.

'டிக் டிக் டிக்' படத்தை இயக்கிய சக்தி சவுந்தர்ராஜன் 'டெடி' படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், தற்போது பிக்பாஸ் மூலம் மிகவும் பிரபலமான சாக்ஷி அகர்வால் இணைந்திருப்பதாகப் படக்குழுவினர் அறிவித்துள்ளனர். இவர்களுடன் சதீஷ், கருணாகரன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். டி.இமான் இசை யமைக்கும் இந்த படத்துக்கு யுவா ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

நேரே பார்த்தால் கோபம் தலைகிழே பார்த்தால் சாந்தம்!



முக்கியத்துவம் இல்லாத இடத்தில் மீண்டும் மீண்டும் முகம் காட்டல் முட்டாள் தனமானது

## படித்ததில் பிடித்தது



ஒரு புலி வேடனைத் துரத்திக்கொண்டு போயிற்று. வேடன் அருகில் இருந்த மரத்தில் ஏறிக் கொண்டான். அதற்கு முன்பே, மரத்தின் மீது ஒரு கரடி இருந்தது. புலி கரடியிடம் கூறிற்று:
இவ்வேடன், எமது மிருக குலத்துக்கே பகைவன்;
இவனைக் கீழே தள்ளி விடு என்றது.
இருக்கலாம் ஆனால், இவன் நான் இருந்த மரத்தை அண்டியதால் என்னிடம் சரண் புகுந்தவன் ஆகிறான்....
சரண் அடைந்தவனைக் கைவிட மாட்டேன் இவ்வாறு சொல்லிவிட்டு கரடி உறங்கிற்று.
சற்று நேரம் கழித்து புலி வேடனிடம் கூறிற்று;
"எனக்கு பசியாக இருக்கிறது. நீ அந்தக் கரடியைக் கீழே தள்ளிவிட்டால், நான் அதை உண்டு பசியாறி உன்னை விட்டு விடுகிறேன்.
வேடன் கரடியைத் தள்ளிவிட்டான், கரடியோ மரத்தின் கீழ்க் கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு விழாமல் தப்பி மேலே ஏறிக் கொண்டது.
அப்போது புலி கரடியிடம் சொன்னது. இந்த மனிதன் நன்றிகெட்டவன். சரண் அடைந்தவனைக் காப்பாற்று வேன் என்ற உன்னையே தள்ளிவிட்டான். அவனை இப்பொழுதே தள்ளிவிடு என்றது..... அதற்கு கரடி சொன்னது:
எவனோ ஒருவன் தன் ஒழுக்கத்தினின்று வழுவினான் என்பதற்காக, நான் என் தர்மத்தைக் கைவிட இயலாது.
இன்னமும் அவன் சரண் புகுந்தவனே.
அவனைத் தள்ளுவது அறத்தினின்று நான் தவறியது ஆகும் என்று கூறி வேடனைக் கீழே தள்ள மறுத்து விட்டது.
நல்ல மனிதர்கள் எந்தச் சூழ்நிலையிலும் எதுக்காகவும்..... யார் எப்படி நடந்தாலும் தன்னுடைய குணத்தை மாற்றிகொள்ளமாட்டார்கள்..

இனியவன் @MuhammadAarif_7

எவ்வித கூச்சமுமின்றி உரிமையாய் அப்பாவிடம் காசு கேட்டதை போல்,

அப்பா எம்மிடம் கூச்சமின்றி கேட்கும்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் போதும்.!

ஊர்க்காவலன்™ @oorkkavalaan


...ஒரு மூலையில் ஒரு"கருப்பு வெள்ளை"
...ரை வாழ்க்கை
...மாகத்தான்' இருந்தது....

புகழ்@mekalapugazh

"உன்னோடு மனுஷன் பேசுவானா.."
என்பது நீண்ட வாதத்தின் கடைசியில் சொல்ல ஒன்றுமில்லாமல் தோற்றுப்போனவனின் கடைசி ஆயுதம்.

சிலந்தி™@nandhu_twitts

கொஞ்சநாள் போகட்டும் என்று நினைக்கும் போது..
மீதி நாளும் போய்விடுகிறது..!!






கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

கைப்பேசி அழைப்பை எடுக்காமல் இருப்பதற்கு மனப் பிரச்சினை மட்டும் காரணம் இல்லை,

பணப் பிரச்சினையும் காரணமாக இருக்கும்!!







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வறுமையை ஒழிக்க.....

வறுமையை ஒழிக்க
சிறுவயதில் அனுபவிக்கும் வறுமை
அனுபவத்தையும் கஷ்டத்தையும்
கற்றுக் கொடுக்கும் பாடம்
அவை எம் வாழ்வில்
உயர்வைக் காட்டும் படிகள்
வறுமையில் வாடும் சிறுவர்கள்
சிறிய வயதில் பெரிய பெரிய
ஏக்கங்களையும் தாக்கங்களையும்
தாங்கும் சக்தியைக்
கொண்டு விடுவார்கள்
உண்ண உணவு
உடுக்க உடை எதுவும் அவர்கள்
ஆசைப்படி கிடைப்பதில்லை
கல்வி கற்றிட முழு வாய்ப்பும்
அவர்களை அணுகுவதில்லை
ஏனோ தானோ எல்லாம்
அப்படியும் இப்படியும்
நாள்களை நகர்த்திக்
கொண்டே செல்லும்
இந்த வறுமை என்னும் கொடுமை
அவர்கள் பாதையில்
தடைக் கல்லாக இருந்து விடுகிறது
அந்தப் பிஞ்சு உள்ளங்கள்
நலிந்து போகாமல்
காப்பது எப்படி என்பதை
கொஞ்ச நேரம் மனிதன்
ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்
அவர்களை ஊக்கப் படுத்த
என்ன என்ன வழிகள் உண்டோ
செய்து கொடுத்துவிட்டால்
வளரும் சிறுவர்கள்
முன்னேறி விடுவார்கள்
அவர்கள் பற்றிக்கொள்ள
ஒரு சிறிய வாய்ப்பு
கிடைத்தாலே போதும்
ஏற்றத்தைக் காண எள்ளளவும்
தயங்க மாட்டார்கள்
வறுமை என்னும் ஆழ்கடலில்
சிக்கித் தவிக்கும் அவர்களுக்கு
சக மனிதர் செய்யும் உதவிகள்
மிகப் பெரிய உதவியாகும்
தாங்கள் முன்னேற தருணம்
எங்கே எப்போது என்று
ஏங்கித் தவிக்கும்
அவர்களை கொஞ்சம்
தூக்கி விட்டால் போதும்
துடிப்புடன் எழுந்து
தேவைகள் தேடி தேடி
தாமும் மற்றவர்கள் போல
வாழ முனைந்து விடுவார்கள்
ஏன் என்றால்
அவர்கள் பட்ட அடி அவர்களை
வேகமாக முன்னேற செய்யும்
அவர்களிடம்
கல்வி என்ற செல்வமும்
கரைபுரண்டு ஓடிவிட்டால்
கண்டு கொள்வோம்
அறிஞர்களை கலைஞர்களை
ஆராய்ச்சியாளர்களை
பண்பட்ட ஆசிரியர்களை
ஆகவே வறுமையின்
கொடுமையை ஒழிக்க முயலுவோம்
அல்லாடும் சிறுவர்களை
அரவணைத்துக் காத்திடுவோம்
பிறர் பிள்ளைக்கு ஊட்டி வளர்த்தால்
தன் பிள்ளை தானே வளரும்
என்பது முது மொழி
வளரும் குழந்தைகளை
வறுமையில் இருந்து காக்க
அயராது முயன்றிடுவோம்
அவர்கள் முன்னேற்றம் கண்டு
அகமகிழ்ந்து வாழ்ந்திடுவோம்

# வறுமையை இல்லாதொழிக்க கரம் கொடுப்போம்!



வறுமை ஒழிப்பு நாள் ஆண்டு தோறும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி பன்னாட்டு ரீதியில் கடைபிடிக்கப்படுகிறது. உலக வங்கியின் தரவுகளின்படி 1.4 பில்லியன் மக்கள் மிகவும் வறுமைக்கோட்டின் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்றார்கள். இவர்களின் நாள் வருமானம் 1.25 டொலர் ஆகும். பன்னாட்டு ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வறுமை காரணமாக உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், பசிக் கொடுமையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை 1992ஆம் ஆண்டு வறுமை ஒழிப்புத் தினத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

'வறுமைக்கு எதிரான குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் வேண்டுகோள்', 2009ஆம் ஆண்டின் பன்னாட்டு வறுமை ஒழிப்பு நாளின் தலைப்பாகும். இந்நாள் முதன் முதலாக 1987ஆம் ஆண்டு பிரான்சின் பாரிஸ் நகரில் கடைப்பிடிக்கப்பட்டது.

பசி, வறுமை, வன்முறை, பயம் என்பவற்றுக் பழியானோரைக் கௌரவிக்கும் வகையில் சுமார் பத்தாயிரம் மக்கள் 'டொர்கேட்ரோ'வின் மனித உரிமைகள் மற்றும் விடுதலை சதுக்கத்தில் ஒன்று கூடினர். இவர்கள் உலகளாவிய ரீதியில் வறுமை நிலை ஒழிக்கப்படவேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர். வறுமை நிலை காரணமாக உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு தினத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்துக்குக் கீழ் வாழும் மக்களை ஏழ்மை நிலையில் அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என வரைவிலக்கணப்படுத்தலாம். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே வறுமை நிலை அளவு சார்ந்து மதிப்பிடப்படுகின்றது. தீவிர வறுமை நிலை என்பது நாளொன்றுக்கு 1.25 டொலர்களுக்கும் குறைவான தொகையில் ஒருவர் வாழ்க்கை நடத்துவது என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். பொதுவாக வறுமை நிலை உணவு, சுத்தமான நீர், உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், சமூக வாய்ப்புக்கள், மனித அரசியல் உரிமைகள், பிற சமூகங்களுடன் தொடர்புகள் அற்ற அல்லது மட்டுப் படுத்தப்பட்ட ஒரு நிலையைக் குறிக்கின்றது.

உலகில் தற்பொழுது நிலவும் பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக முன்னேறிய நாடுகளில் நிலவும் பொருளாதாரச் சூழல் முன்னேற்ற இலக்குகளை எட்டவதில் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.



உலக நாடுகள் இராணுவத் தளபாடங்கள் வாங்கும் செலவில் ஒரு சதவீதத்தை ஒதுக்கினால் கூட உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க வழி செய்து விடலாம் எனத் திட்டமிடப்பட்டது. எனினும் அனைவருக்கும் கல்வி என்பது உலகளாவிய ரீதியில் இன்றுவரை கனவாகவே உள்ளது. வசதிபடைத்தவர் மற்றும் ஏழைகளுக்கு இடையேயான இடைவெளி வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது.

அபிவிருத்தியடையாத 48 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, உலகின் முதல் மூன்று பணக்காரர்களின் சொத்து மதிப்பை விட குறைவு என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக பணக்காரர்களில் 20 சதவீதம் பேர் உலகின் மொத்த வளங்களில் 86 சதவீதத்தைக் கைப்பற்றியுள்ளனர். மீதமுள்ள 80 சதவீத மக்களுக்குக் கிடைப்பது வெறும் 14 சதவீதம் மட்டுமே.

ஏழ்மைக்கு முக்கிய காரணமாக ஊழல் உள்ளது. வறிய நாடுகளின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ள ஊழலை வளர்ந்த நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அதிகாரிகளை வளைக்கவும், ஒப்பந்தங்களைக் கைப்பற்றவும் முறைகேடான வழிகளில் பணத்தைச் செலவிடும் இந்த நிறுவனங்கள் ஏழை நாடுகளின் குடிமக்க ளின் வரிப்பணத்தைத் தெரிந்தே சுரண்டு கின்றன. குற்றங்கள் அதிகரிக்க வறுமையும் ஒரு காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. வறுமையும், ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த சமூகத்தில், வன்முறையையும், குற்றங்களையும் தவிர்க்க முடியாது.

முன்னைய நிலைகளுடன் ஒப்பு நோக்கும்போது ஆசியாவின் வறுமை ஒழிப்பு ஓரளவு முன்னேற்றம் இருந்த போதிலும் கூட ஆபிரிக்க நாடுகளில் நிலமை மிகமிக மோசமாகவே இன்று வரை காணப்படுகிறது.

2008ஆம் ஆண்டு உலக வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில் "உலக நாடுகளை பீடித்திருக்கும் நிதி நெருக்கடிகளால் மேலும் 10 கோடி மக்கள் வறுமையில் தள்ளப்படலாம்" என்று அச்சம் தெரிவித்திருந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தொடரும் இருட்டடிப்புகள்

போர்க் களத்தில் என்னவும் நடக்கலாம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்களின் சடலங்கள் அவர்களின் உறவினர்களுக்குக் கிடைக்க முடியாத அளவுக்கு சிதைவ டைந்திருக்கலாம். இதனால்தான் காணாமல் போனவர்கள் என்று சொல்லப்படுபவர்களின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின்அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச.

கொழும்பில்சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் கோத்தபாய ராஜபக்ச.

கடந்தகால விடயங்களைக் காவிக்கொண்டு செல்வதற்கு வடக்கு– கிழக்கு மக்கள்விரும்பவில்லை. அவர்களுக்கு முக்கிய பிரச்சினைகள் உள்ளன. கல்வி, அபிவிருத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில்தான் அவர்கள் கரிசனை கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார் கோத்தபாய ராஜபக்ச.

இறுதிப்போரின்போது பல அப்பாவித் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு – கிழக்கில் பல்வேறு போராட்டங்கள் இன்றளவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தமிழர்களின் போராட்டத்தை அவர்களின் கோரிக்கையை பன்னாட்டு ஊடகங்களின் முன்னால் மீண்டும் ஒருதடவைஇருட்டடிப்புச்செய்யமுனைந்துள்ளார் இந்த அரசதலைவர் வேட்பாளர்.

கொழும்பு அரசால் நியமிகப்பட்ட பரணகம ஆணைக்குழு, தமிழர்கள் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்என்றஉண்மையைஏற்றுக்கொண்டுள்ளது. பகிரங்கப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் கோத்தபாயவின் கருத்து முன்பின் முரணானது, உண்மைக்குப் புறம்பானது என்பது மலையில் ஏற்றிவைத்த தீபம் போன்று வெளிப்படையானது.

அதேநேரம் பன்னாட்டுச் சமூகங்களும், கோத்தபாயவும் ஒரு விடயத்தைத் தெட்டத்தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் உறவினர் பலர், இறுதிப் போரின்போதுபடையினரின்கரங்களில்உயிருடன் ஒப்படைக்கப்பட்ட தமது உறவினர்கள் எங்கே? என்ற கோரிக்கையை முன்வைத்தே போராடுகின்றனர். இவ்வாறான நிலையில், கோத்தபாயவின் கருத்துபைத்தியக்காரத்தனமேதவிரவேறொன்றும் இல்லை.

2015ஆம் ஆண்டுநடைபெற்றஅரசதலைவர்தேர்தலின்போது தமிழர்களின் வாக்குகளே மைத்திரியின் வெற்றியைத் தீர்மானித்தன. இந்த அரசதலைவர் தேர்தலிலும் அவ்வாறான ஒரு நிலைப்பாடே இருக்கப்போகின்றது. இந்த நிலையில் கோத்தபாயவின் இத்தகைய கருத்துக்கள் அவரின் அரசியல் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதாக இருக்காது. குறிப்பாக தேர்தல் காலமான இக்காலத்தில், இறுதிப்போர்குறித்தஇருட்டடிப்புக்களால்கோத்தபாய சிறுபான்மை மக்களிடம் இருந்து வெகுதொலைவில்தான் செல்வார்.

இத்தகைய கருத்துடைய ஒருவர் அரசதலைவராகுவதைதமிழர்கள்ஒருபோதும்விரும்பமாட்டார்கள் என்பது அவருக்குப் புரியட்டும்.



# புதிய மைல்கல்

## யாழ்ப்பாணத்தின் பன்னாட்டு வானூர்தித் தளம்

■ ந.லோகதயாளன்

இலங்கையின் பன்னாட்டு வானூர்தி நிலையமான யாழ்ப்பாணம் வானூர்தி நிலையம் இன்று காலை மீண்டும் புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்படுகின்றது.

பலாலி வானூர்தி நிலையத்தை பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரம் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை, 2014ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, அப்போதைய இந்தியத் துணைத் தூதுவர் மகாலிங்கத்திடம் முதன் முதலாக விடுத்தார். இந்திய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றது.

2015ஆம் ஆண்டு திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்திய அரசு இணக்கம் தெரிவித்து அதற்கான உத்தேச செலவு மதிப்பீட்டையும் மேற்கொண்டது. இந்தப் பணிகள் இரகசியமாக நகர்த்தப்பட்டன. இரு அரசு தொடர்புபட்ட பணிகள் என்பதனால் நீண்டகாலம் இரகசியம் காக்க முடியவில்லை.

அரசுகள் மட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டாலும், கொழும்பு அதிகாரிகள் இதற்கு முட்டுக்கட்டை போட்டனர். தெற்கில் முட்டுக்கட்டை போடப்பட்டதன் நோக்கம் தெற்கின் பொருளாதாரம் நலிவடைந்து வடக்கு பொருளாதாரம் அபிவிருத்தி அடையும் என்பதாலேயே.

வடக்கிலும் அப்போதிருந்த மாகாண சபையின் முதலமைச்சர் இதனை விரும்பவில்லை. பகிரங்கமாக இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்தார். பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்தியை நாம் விரும்பவில்லை என்று வழமை போன்றே தனது அபிவிருத்தி எதிர்ப்பை தெரிவித்தார். மாகாண சபையை பகைத்து பணியை முன்னெடுக்க இந்தியா தயக்கம் காட்டியது. முதல்வரின் கருத்து ஒட்டுமொத்தக் கூட்டமைப்பின் கருத்தா என்று இந்தியா நாடி பிடித்தது. அப்போது முதல்வர் கூட்டமைப்பு இடையே உச்சக்கட்டப் பனிப்போர் ஆரம்பமாகியிருந்தது. இது கூட்டமைப்பின் கருத்து அல்ல என்பதனை இந்திய உறுதி செய்தது.

கூட்டமைப்பு இந்தியாவிடம் மட்டுமன்றி ரணில் விக்கிரமசிங்கவிடமும் வானூர்தி நிலைய அபிவிருத்திக்கு கடும் அழுத்தம் கொடுத்தனர். இந்திய அரசு பலாலி வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்ய இலங்கை அரசு ஒப்புதல் வழங்கியது. இதனையடுத்து இந்தியா அதற்கான ஆயத்தப் பணிகளை முன்கொண்டு சென்றது.

அபிவிருத்திக்கான பணியை முன்னெடுத்து இந்தியாவுக்கான வானூர்திச் சேவையை ஆரம்பிக்க 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி சென்னை வானூர்தி நிலையப் பணிப்பாளர் தீபக் சாஸ்திரி தலைமையில் ஓர் குழு பலாலி வானூர்தி நிலையம் வந்து ஆய்வில் ஈடுபட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், வடக்கு முதலமைச்சர், வானூர்தி நிலைய அபிவிருத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942 இல் பிரிட்டிஷ்காரர்களால் ஆரம்பிக்கப்பட்ட பலாலி வானூர்தித் தளத்தில் இருந்து 1947ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி இந்தியாவுக்கான முதலாவது வானூர்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. போர் காரணமாக 1978ஆம் ஆண்டு இந்தியாவுக்கான சேவை நிறுத்தப்பட்டது. 41 ஆண்டுகளின் பின்னர், பலாலி வானூர்தித் தளம், யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் தளமாக தரம் உயர்த்தப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகின்றது.





அமைக்கப்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறை

என்னும் பெயரில் அந்தப் பகுதி மக்களின் நிலம் முழுமையாக இராணுவம் அபகரிக்கும் சாத்தியமே உள்ளது என்று அறிக்கை விடுத்தார்.

இருப்பினும் அருகில் உள்ள குறுகிய நிலத்துடன் மட்டும் இந்தியாவுக்கான சேவையை ஆரம்பிக்க முடியும் என தீபக் சாஸ்திரி தலைமையிலான குழு அறிக்கையிட்டது. இந்தியாவின் முழுமையான நிதிப் பங்களிப்பில் பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்தி மேற்கொள்ளும் நோக்கில் இந்திய அரசால் மாதிரி வரைபடம் மட்டுமன்றி மாதிரி உருவமும் தயார் செய்யப்பட்டது. இதற்காக மாத்திரம் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா இந்திய மதிப்பிலான பணமும் செலவு செய்யப்பட்டது. அனுமதிக்காக இலங்கை சிவில் வானூர்தி சேவை கட்டுப்பாட்டு அலுவலகத்துக்கு சமர்ப்பித்த வேளையில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது.

பலாலி வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்து யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி சேவைகளை மேற்கொண்டால் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தின் வருமானத்தில் வீழ்ச்சியடைவதோடு அதனை அண்டித் தொழில் புரியும் தெற்கின் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்படும் என காரணம் காட்டி பணிக்கு தடை விதிக்கப்பட்ட தோடு இந்தியா இதற்கான பணியை மேற்கொள்வதனால் முழுமையாக எமது வருமானம் இழக்கும் எனவும் தெற்கு அதிகாரிகள் அறிக்கையிட்டனர்.

2017ஆம் ஆண்டும் நிறைவடைந்து 2018ஆம் ஆண்டிலும் பணி முன்னெடுக்கும் சாத்தியம் அற்றே காணப்பட்டது. இலங்கை சிவில் வானூர்தி சேவை அதிகாரிகளை திருப்திப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டது. ரணில் ஆட்சியைத் தொடர கூட்டமைப்புத் தேவைப்பட்டது. கூட்டமைப்போ பலாலியில் பன்னாட்டு வானூர்தி நிலையம் வந்தே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. இதனால் பலாலி வானூர்தி நிலையம் பன்னாட்டு வானூர்தி நிலையமாக மாற்றப்படும் அதேநேரம் இரத்மலான வானூர்தி நிலையமும் பன்னாட்டு வானூர்தி நிலையமாக மாற்றப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. சில வரையறைகளையும் முன்வைத்து பணியை தொடர அனுமதிக்குமாறு சிவில் வானூர்தி நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகளை கோரினார்.

சிவில் வானூர்தி நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தாலும் இந்திய அரசின் நிதியில் முன்னெடுத்தால் தமது பிடி தளர்வடையும் எனக் கருதினர். வேறு வழியின்றி முதல் கட்டமாக இலங்கை அரசின் பணத்திலேயே வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாக தரம் உயர்த்தும் பணியை (தற்போது இடம்பெற்றவை) மேற்கொள்வது எனவும் இரண்டாம் கட்டமாக இடம்பெறும் பெரிய அபிவிருத்திக்கு இந்திய அரசின் உதவியை பெறவும் ரணில் அரசு இணக்கம் தெரிவித்தது. அதற்கான ஆணையை வழங்கினார். ஏனெனில் அந்தளவுக்கு கூட்டமைப்புரணில்அரசுக்குத் தேவைப்பட்டது. இந்தக் காலத்தில்தான் கிழக்கு மாகாணத்தில் இருந்து சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த பலர் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்குப் படையெடுத்தனர். யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகம், அத்தனை அபிவிருத்தியும் வடக்கில் தற்போது பன்னாட்டு வானூர்தி நிலையம்கூட யாழ்ப்பாணத்தில் மட்டுமே அமைகின்றது. போரினால் அழிவடைந்த மாகாணத்தில் வடக்கும் கிழக்கும் உள்ள நிலையில் இந்தியா கிழக்கை விட்டு வடக்கை மட்டும் பார்ப்பது ஒரு கண்ணை பார்ப்பதுபோல் உள்ளது என்று சுட்டிக்காட்டினார். இதனால் வேறு வழியின்றி மட்டக்களப்பு வானூர்தி நிலையம் தொடர்பிலும் இந்தியா பேச ஆரம்பித்தது. இந்த நிலையிலேயே ஏக காலத்தில் இரத்மலானை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு வானூர்தி நிலையங்கள் பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரம் உயர்த்தப்பட்டன. இலங்கையின் 5ஆவது பன்னாட்டு வானூர்தி நிலையம் என்ற பெயரை யாழ்ப்பாணம் வானூர்தி நிலையம் பெற்றுக்கொண்டது.

பலாலியில் முதன் முதலாக இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் சிறிய ரக வானூர்திகள் இறங்கி ஏறும் நோக்கில் பிரிட்டன் படைகளால் அமைக்கப்பட்டது. 359 ஏக்கர் நிலத்தில் வானூர்தி நிலையம் அமைக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ம் திகதி முதல் இந்தியாவுக்கான சேவையும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவுக்கான சேவை ஆரம்பித்த நிலையில் ஈழத்தில் இடம்பெற்ற ஈழ விடுதலைப் போராட்டங்கள் வலுப்பெற்ற காலத்தில் வானூர்தி நிலையம் இராணுவ மயப்பட்டது. 1985ஆம் ஆண்டு இலங்கை அரசால் மேலும் 646 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டு வானூர்தி நிலையம் மற்றும் இராணுவ முகாம்கள் விரிவாக்கப்பட்டன.



பழைய வானூர்தி நிலையம்

இந்தக் காலத்திலேயே 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட மறுநாள் இந்தியாவில் இருந்து இந்தியப் படைகள் எந்நவித நுழைவு விசைவும் இன்றி இங்கு வந்திறங்கினர். இதன் பின்னர் இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் இடம்பெற்ற காலத்தில் ஈ.பீ.ஆர்எல்.எப் மற்றும் ஈ.என்.டி.எல்.எப் இணைந்து தமிழ் இளைஞர்களை கட்டாய இராணுவ பயிற்சிக்காக பிடித்துச் சென்ற சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆயிரக் கணக்கான இளையோர்; இதே வானூர்தி நிலையம் ஊடாக 1989ஆம் ஆண்டு கொழும்புக்குத் தப்பியோடினர். அதற்கு இலங்கை அதிகாரிகள் சிலர் துணைபுரிந்தனர். இருப்பினும் அப்போது இரு வழிப் பயணத்துக்காக 3 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டபோதும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இளையோரிடம் 5 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டது.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த நிலையில் அந்தப் பகுதி மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வெளியேறினர். இதன் பின்னர் முழுமையாக வான் படையினர் கட்டுப்பாட்டுக்குள் பாலாலி வானூர்தித் தளம் சென்றது.

இந்த நிலையிலேயே 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் முதல் 2.26 பில்லியன் ரூபா செலவில் முதற் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று, யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையமாக திறந்து வைக்கப்படவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பும் யோகாசனமும்

கொடிகாமம், ஒக்.17

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன், வாசிப்பும் யோகாசனமும் கச்சாய் பொது நூலகத்தில் தினமும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறும். மனவளக்கலை யோகா துணைப் பேராசிரியர் திருமதி அ. சரோஜா பயிற்சிகளை வழங்குவார். இதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என்று கச்சாய் பொது நூலக நூலகர் அறிவித்துள்ளார். (க-159)

## கர்நாடக வகுப்பில் இணைந்து கற்கலாம்

*இளங்கலைஞர் மன்றம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் கர்நாடக சங்கீத வகுப்புக்களை இலவசமாக நடத்திவருகின்றனர். விரும்பிய மாணவர்கள் இணைந்து கற்க முடியும் என்று மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். வட இலங்கைச் சங்கீத சபையின் பாடத்திட்டத்துக்கு அமைவாக இவை கற்பிக்கப்பட்டுவருகின்றன.

சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8.30 தொடக்கம் முற்பகல் 9.30வரை இந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அனுபவமுள்ள இசை ஆசிரியரால் கற்பிக்கப்படும் இந்த வகுப்புக்களில் இணைந்து பயன்பெற விரும்பும் மாணவர்கள் வயது வேறுபாடின்றியும் பால் வேறுபாடின்றியும் கலந்துகொள்ளமுடியும்.

இதுதவிர, வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய நுண்கலை வகுப்புக்கள் இந்த நாள்களில் பிற்பகலில் நடைபெற்று வருகின்றன. மேலதிக தகவல்களை நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# தொன்மையான இந்து ஆலயங்களை ஆவணப்படுத்தும் வருடாந்த மாநாடு

யாழ்ப்பாணம், ஒக்.17

ஈழத்தில் இந்து சமயத்தின் தொன்மையையும், இந்து ஆலயங்களையும், அவற்றின் வரலாற்றுப் பெருமையோடு சான்றுகளின் ஊடாக மீட்டெடுக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்படும் ஆய்வு மாநாடு இந்த வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

“ஈழத்து இந்துக் கோயில்கள் - தொல்பொருள்களும் இலக்கிய மரபுகளும்” எனும் தொனிப்பொருளில் இந்த வருட ஆய்வு மாநாடு நாளையும், நாளை மறுதினமும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஆய்வு மாநாட்டின் தொடக்க வைபவமும், ஆய்வரங்க நிகழ்வுகளும் கொழும்பு - 04, லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள எ.வி.எஸ். மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் இடம்பெறும். ஆய்வு மாநாட்டின் பொது அரங்க நிகழ்வுகள் கொழும்பு - 04 இல் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் மாலை 4 மணிக்கும் இடம்பெறும்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் மாநாட்டில், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் .இ. இரவீந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாநாட்டின் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக வேந்தரும், இந்துப் பண்பாட்டு நிதியத்தின் தலைவருமான பேராசிரியர் சி. பத்மநாதனும், சிறப்புரையை வடோடரா, இந்திராகாந்தி தேசிய, கலாசார நிலையத்தின் பிராந்திய இயக்குநர் கலாநிதி ஐஸ்வரியா வாரியாரும் நிகழ்த்துவர். ஆய்வு மாநாட்டின் பொது அரங்க நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் கொழும்பு, சின்மயாமிஷன் வணக்கத்துக்குரியசுவாமிகுணாதீதானந்த சரஸ்வதி ஆகியோர் முன்னிலையில், பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் அமைச்சின் கண்காணிப்புப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கலந்து கொள்வார். நிகழ்வில் நாட்டியாஞ்சலி, நூல் வெளியீடு, விருந்தினர் மதிப்பளிப்பு, கருத்துக்களம், மாணவர் மதிப்பளிப்பு, ஆய்வரங்கம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (க)

## சம்பள உயர்வை அடுத்து சட்ட அலுவலர் பதவிக்கு 19 பேர் விண்ணப்பித்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.17

வக்குமாகணத்திணைக்களங்களில் நிலவும் சட்ட அலுவலர் வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில், அந்த வெற்றிடத்துக்கு 19 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 3 சட்ட அலுவலர் வெற்றிடத்துக்கு சட்டத்துறையை பூர்த்தி செய்து 3 ஆண்டுகள் கடந்த சட்டத்தரணிகளிடம் இருந்து முதல் இரு தடவைகள் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

முதன்மை அலுவலருக்கு சுமார் 70 ஆயிரம் ரூபாவும், ஏனைய இருவருக்கு தலா 60 ஆயிரம் ரூபாவும் சம்பளம் வழங்கப்படுவதோடு, வாகன வசதிகள் உள்ளிட்ட சலுகைகளும் அறிவிக்கப்பட்டபோதும் எந்தவொரு சட்டத்தரணியும் விண்ணப்பிக்கவில்லை.

தற்போது மேலதிக அனுமதிகள் பெறப்பட்டு மாதச் சம்பளம் படிகளுடன் சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரமாக அதிகரிக்கப்பட்ட நிலையில், வடக்கில் இருந்து 10 தமிழ் சட்டத்தரணிகளும், மேலும் இரு முஸ்லிம் சட்டத்தரணிகள் ஆகியோருடன் 7 சிங்களமொழி சட்டத்தரணிகளும் விண்ணப்பித்துள்ளனர்.

அதேநேரம் தெற்கைச் சேர்ந்த 7 சட்டத்தரணிகளில் சில மூத்த சட்டத்தரணிகள் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்ட அலுவலர்கள் இன்மையால் கடந்த 5 ஆண்டுகளாக திணைக்களம் சார் சட்ட நடவடிக்கைகளும் சட்டமா அதிபர் திணைக்களம் சென்று அங்குள்ள அலுவலர்கள் மூலம் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதால் சாதாரன வழக்குகள் கூட நீண்டகாலமாக காலம் தாழ்த்தும் நிலைமையே காணப்பட்டது.

இந்த நிலையில் கிடைத்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வுக்கு ஆளுநர் அனுமதி பெறப்பட்ட நிலையில், விரைவில் நேர்முகத் தேர்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)



### பாசையூரில்
## வலை திருத்தும் மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம் பாசையூரில் அமைக்கப்பட்ட வலை திருத்தும் மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ. ஆனல்ட்டால் கடந்த திங்கட்கிழமை இந்த மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் தேசிய ஒற்றுமைப்பாடுகள் மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மண்டபம் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரசபை அலுவலர்கள், கடற்றொழில் சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள், அப் பகுதி பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம், இருபாலை கோப்பாய் ஆசிரியக் கலாசாலை வீதியில் இருந்து திறப்புக் கோர்வையுடன் ஒரு தொகை பணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆசிரியக் கலாசாலையில் மாணவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அடையாளம் காட்டி கோப்பாய் ஆசிரியக் கலாசாலையில் பெற்றுக் கொள்ளுமாறு ஆசிரியக் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-422)

## கைக்குண்டுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றசாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் கைக்குண்டுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இராசாவின் தோட்டம் பகுதியில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்தார் என்று யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைக் கைது செய்யும்போது அவரது உடமையில் இருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-37)

# பொலிஸ் தடுப்பிலிருந்து தப்பிச் சென்றவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.17

ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றசாட்டில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, அங்கிருந்து தப்பிச் சென்ற இளைஞன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருளைத்தமது உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றசாட்டில் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் கடந்த மாதம் 30ஆம் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பொலிஸ் நிலைய சிறைக்கூடக் கதவின் பூட்டு சரியாகப் பூட்டாததால், அதனைத் திறந்து குறித்த நபர் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்தார். சம்பவத்தை அடுத்து பொலிஸ் அலுவலர்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

தப்பிச் சென்ற நபர் கடந்த இரு வாரங்களாகத் தேடப்பட்டு வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலியில் அங்காடி அமைக்கப்பட்டால்
# நில உரிமையாளர்களுக்கே முன்னுரிமை வழங்கவேண்டும்

மாவட்டச் செயலரும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.17

பலாலிப் பிரதேசத்தில் யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் அருகே எதிர்காலத்தில் அங்காடி அமைக்கப்படுமானால், அந்த நிலத்தின் உரிமையாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்என்பதில்நாமும்திடமாகவுள்ளோம்என்று யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் நா. வேதநாயகன்தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்பன்னாட்டுவானூர்தி நிலையம் தரம் உயர்த்தப்பட்டு இன்றுதிறக்கப்படவுள்ளநிலையில், வானூர்தி நிலையத்தில்வரிவிலக்கு விற்பனை நிலையங்கள் , பன்னாட்டு பொருள் விற்பனைக் கூடங்களுடன் நாணய மாற்றுநிலையம், உணவகம் எனப் பல விற்பனைக் கூடங்கள் அமைக்கப்படக்கூடும்.

இவ்வாறுகுறித்தவிற்பனைக்கூடங்கள் அமைக்கப்படும் போது, வர்த்தகர்களை மேலும் வளர்த்து விடும் செயல்பாடுகளோ அல்லது அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் அன்றி, வானூர்திநிலையத்துடன் கூடிய நிலங்களின் உரிமையாளர்களை இனம் கண்டு அவர்களுக்கே சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

மாறாக தென்பகுதியினருக்கோ அல்லது செல்வாக்கு மிக்கவர்களுக்கோ வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறக் கூடாது என்று வானூர்தி நிலையத்தை சூழவுள்ள நில உரிமையாளர்கள் ஓர் நியாயமான கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

"தாம் இன்றும் வீடு வாசல் இன்றி வாடகைவீடுகளில்அலையும்நேரம் படையினர்அந்தப்பகுதியைப் பாதுகாப்பு வலயம் என்னும் பெயரில் அபகரித்து வைத்துள்னர். குடாநாட்டின் சில பண் முதலைகள் அல்லது செல்வாக்கின்அடிப்படையில்தமது நிலங்களில் வானூர்தி நிலைய கடைத்தொகுதிகள்அமைக்கமுயல்கின்றனர்"என்றுஉரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சிவில் வானூர்தி நிலையக்கட்டுப்பாட்டுஅதிகாரசபையின்கவனத்துக்குக்கொண்டுசெல்லப்படும். அதேநேரம் பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்திநிலையம்ஆரம்பிக்கப்பட்டதும், அந்தப் பிரதேசத்தில் உள்ள நில உரிமையாளர்களை இனம் கண்டுகொள்வது இலகுவானதாக அமையும். அதன்பால் அந்த நில உரிமையாளர்களே வர்த்தக நிலையத் தொகுதியை அமைப்பதற்கு விரும்பம் கொண்டால், அவர்கள் மாவட்டச் செயலகத்தில் தமது பதிவுகளைமேற்கொள்ள முடியும். அந்த தரவுகளின் அடிப்படையில்நாம்ஓர் முயற்சியை மேற்கொள்வோம்.

இந்தமுயற்சியின்மூலம்30ஆண்டுகளாகதமது நிலத்தின் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிட்டுமானால்அது வரவேற்கத்தக்கது.

அதேநேரம்வானூர்திநிலைய அங்காடி அமைப்பதனால் பெருந்தொகைப்பணச்செலவும்ஏற்படும். அது தொடர்பிலும் முயற்சியாளர்கள் கவனம் செலுத்தி வர்த்தக நிலையத்தை அமைக்க விரும்பும் நில உரிமையாளர்கள்காணியின்ஆவணத்தைக் காண்பித்து உரித்தை உறுதி செய்து பதியும் பட்சத்தில் அடுத்த கட்டத்துக்கு முயற்சிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (க-105)

## பரிசளிப்பு நிகழ்வும் திறன்வகுப்பறை திறப்பும்

தென்மராட்சி, ஒக்.17

யாழ்ப்பாணம் மிருசுவில் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வும், திறன் வகுப்பறை திறப்பும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குஇடம்பெறவுள்ளன.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும்நிகழ்வில்முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவனும் வடக்கு மாகாண திறைசேரி முதன்மைக் கணக்காளருமான வே. கலைச்செல்வன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய திட்டமிடல் அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ல. லிங்கேஸ்வரன், வித்தியாலய பழைய மாணவர்சங்ககனடாக்கிளையின்செயலாளர்வே. கருணாகரன், மதிப்புறு விருந்தினராக தென்மராட்சிக்கல்விவலயசமூக விஞ்ஞானபாடசேவைக் கால ஆசிரிய ஆலோசகர் சி. நாகராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-9)

## தனிநாயகம் அடிகளாரின் நினைவரங்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்நடத்தும்தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின்நினைவரங்கம்எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை4மணிக்குயாழ்ப்பாணம்திருமறைக்கலாமன்றகலைத்தூதுகலையகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், தண்ணீர்த்தாங்கி எதிரில் உள்ளதனிநாயகம்முற்றத்தில் அமைந்துள்ள அடிகளாரின்திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் இடம்பெறும்.

நிகழ்வின் தொடக்கவுரையைசங்கத்தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் ஆற்றுவார். "இயற்கையால் எழிலுறும் இலக்கியங்களும் இலக்கியங்களால் உயிர்ப்புறும் இயற்கையும்" என்ற பொருளில் சியன தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் துணைவியூர் சி. கேசவன் நினைவுப் பேருரை ஆற்றுவார்.

சிறப்பு நிகழ்வாக தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த விவாதச் சுற்றுப் போட்டியின்திறந்தபிரிவுக்கான இறுதிப் போட்டி நடைபெறும்.

"இனியும் இவ்வினம் உய்யும் வழி உண்டு இல்லை' என்ற பொருளில் நடைபெறவுள்ள விவாதப் போட்டியில் தேசக்கவி புதுவை இரத்தினதுரையின்பெயரால் அமைந்த அணியும் மகாகவிஉருத்திரமூர்த்தி பெயரால் அமைந்த அணியும்பங்கேற்கவுள்ளன. வெற்றி பெற்றோருக்கான வெற்றிக் கேடயத்தை தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்கவுள்ளார். (க)

## வடக்கு மாகாணத்துக்கு பதில் ஆளுநர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.17

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் அவரது செயலாளர் எஸ். சத்தியசீலன் உள்ளிட்டோர் 10 நாள்கள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளவுள்ளதால், அவருக்குப் பதில் கடமையாக வட மேல் மாகாண ஆளுநர் பேசல ஜெயரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

லண்டனில் இடம்பெறும் நிகழ்வொன்றில் பங்கேற்க, வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்டஜவர்நாளைலண்டன்பயணமாகவுள்ளனர்.

லண்டனில் நாளை மறுதினம் தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் இடம்பெறும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக, படி விடுமுறை பெற்றுச் செல்லும் இவர்கள், எதிர்வரும் 23 முதல் 29 வரை தனிப்பட்ட விடுமுறையில் கனடாவுக்கும் செல்லவுள்ளனர்.

இவ்வாறு 10 நாள்கள் விடுமுறையில் வெளிநாடு செல்லவுள்ளதால், ஆளுநரின் வெற்றிடத்துக்கு, பதில் ஆளுநராக வடமேல் மாகாண ஆளுநர் நிய மிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் ஆளுநரின் செயலாளரான எஸ். சத்தியசீலனின் இடத்துக்குப் பதில் கடமைக்காக வரதீஸ்வரன் நியமிக்கப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

## நகர சபை உறுப்பினர்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா நிதி

சாவகச்சேரி, ஒக்.17

சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர்களுக்கு, அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் அடுத்த வருட உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்க சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

சபையின் அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் தவிசாளரால் குறித்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிதிச் சபை வட்டாரத்தில் அவசியமெனக் கருதும் அபிவிருத்தி வேலைகளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

அபிவிருத்தி தவிர்ந்த வாழ்வாதாரம் போன்ற வேலைத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப் பட மாட்டாது. அவசியமெனக் கருதும் வீதிகளின் பெயரை உடனடியாக வழங்க வேண்டும்.

கடந்த வருடம் உறுப்பினர்களுக்கு வட்டார அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. மின் விநியோகத்துக்காக ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதி அனைத்து உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

தென்மராட்சி பிரதேசத்தில்

## வீடமைப்புத்திட்டத்துக்கு மேலும் 53 பேரின் விவரங்கள்

சாவகச்சேரி, ஒக்.17

தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியமர்வு அமைச்சின் வீடமைப்புத் திட்டத்துக்குமேலும்53பேரின்விவரங்கள்பிரதேசசெயலகத்துக்குகிடைத்துள்ளது. பிரதேசத்தில் இவ்வருடம் 293 குடும்பங்களுக்கு [illegible] தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான குடியிருப்புகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவற்றில் முதல் கட்டமாக 176 குடும்பங்களுக்கும், இரண்டாம்கட்டமாக164 குடும்பங்களுக்கும் பட்டியல் அனுப்பப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் மிகுதியான 53 குடும்பங்களுக்கான பெயர்ப் பட்டியல் [illegible] செயலகத்துக்கு வந்துள்ளதை [illegible] குடியிருப்பாளர்களுக்கு குடியிருப்புக்கள் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் 4 ஆயிரத்து 843 குடும்பங்களுக்கு குடியிருப்புக்கள் தேவையான நிலையில் 293 குடியிருப்புகளே இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக நிரந்தர குடியிருப்பற்ற குடியிருப்பாளர்கள் [illegible] தெரிவித்தனர். (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவாடு பதனிடுவதற்கான கட்டடம் குருநகரில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

குருநகரில் அமைக்கப்பட்ட மீன், கருவாடு உப்பிட்டு பதனிடுவதற்கான கட்டடம் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் ஆனல்ட் கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரசபை அலுவலர்கள் கடற்றொழில் சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள், அந்தப் பகுதி பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையால், தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்கும் பணியகத்தால் ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கட்டட அமைப்புக்காகக் கோரப்பட்ட 33.0 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில், முதற்கட்டமாக விடு விக்கப்பட்ட 6.2 மில்லியன் நிதி உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது என்று மாநகர முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

## தரம் – 6 அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 6 மாணவர்களுக்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவத்தை பாடசாலை நேரத்தில் இலவசமாகப் பெற்று முழுமைப்படுத்தி எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## நீர்வடிகட்டிகள் கையளிப்பு

சாவகச்சேரி, ஒக்.17

தென்மராட்சி பிரதேசத்தில் வாழும் சிறுநீரக பாதிப்புக்கு உள்ளான 25 பேருக்கு நேற்று நீர்வடிகட்டிகள்(பில்டர்)வழங்கப்பட்டன.

பிரதேச செயலக இடர் முகாமைத்துவ அலகினரின் வேண்டுகோளுக்கு இணங்க வேள்ட் விசன் லங்கா நிறுவனத்தால் பிரதேச செயலகத்தில் வைத்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

அண்மையில் பிரதேசத்தில் உள்ள தனன்களப்பு, மறவன் புலவு, வரணி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கு வேள்ட் விஷன் நிறுவனத்தால் நீர்வடிகட்டிகள் வழங்கப்பட்டன. (ஐ-9)



## யாழ். மாநகர முதல்வரை சந்தித்த பிரிட்டன் தூதர்

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயருக்கும், இலங்கைக்கான பிரிட்டன் தூதுவருக்கும் இடையேகடந்ததிங்கட்கிழமை சந்திப்பு ஒன்று நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன என்று யாழ்ப்பாணம் மாநகர மேயர்அனுப்பியுள்ளசெய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மக்கள்எதிர்கொள்ளும்பொருளாதாரநிலமைகள்தொடர்பில் தூதுவர்வினாவினார். வானூர்திச் சேவைகளும், கடல் போக்குவரத்துச் சேவைகளும் பொருளாதாரத்தில் உயர்வை ஏற்படுத்துமா என்று வினாவினார். அதற்குப் பதிலளித்த மேயர், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வானூர்திச் சேவைகளும், ஆரம்பிக்கப்படவுள்ள கடல்ப்போக்குவரத்துச்சேவைகளும் நிச்சயம் எமது மக்களின்பெரும்முன்னேற்றத்தை ஏற்படுத்தும். அதனால் அவற்றை விரைவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் மக்களின்எண்ணப்பாடுகள்தொடர்பாகத் தான் அறிந்துள்ளேன். குறிப்பிட்ட ஒரு வேட்பாளர் தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்என்றும்அவதானிக்க முடிகின்றது. அது தொடர்பில் தங்களின் கருத்து என்னஎன்றுதூதுவர்கேட்டார்.

அதற்குப் பதிலளித்த மேயர், நீண்டகாலப் போரை எதிர்கொண்ட எமது மக்கள் கடந்த அரசின் காலப்பகுதியில் எதிர்கொண்டபிரச்சினைகள், உள்ளிட்ட விடயங்களை இன்னும் மறக்கவில்லை. அவர்களின் மனதில் இவை இன்றும் தாக்கங்களைச் செலுத்துகின்றது. மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். மக்களைஇந்தமுறை வழமையை விட அதிகளவில் விழிப்புணர்வூட்டி வாக்களிக்கச் செய்ய வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் அனுப்பியுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நிதி நிறுவனத்தில் பெரும் நிதி மோசடி

### 3 மாதங்களின் பின் ஒருவருக்கு பிணை இருவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணத்தில்இயங்கும்நிதி நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சுமார்11கோடிரூபா முற்பணம் வழங்கிமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு வழக்கில் இரண்டாவது சந்தேக நபரான, நிறுவன அலுவலர் சுமார் 3 மாதங்களின்பின்னர்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் நிதி நிறுவனத்தின் முகாமையாளராகப் பணியாற்றியவரான முதலாவது சந்தேக நபரையும் பணத்தை மோசடியாகப் பெற்றவரான 5 ஆவது சந்தேகநபரையும் தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்று உத்தரவிட்டது.

இந்தவழக்குயாழ்ப்பாணம்நீதி மன்றில்நீதிவான்ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணம் கிளை முகாமையாளர், அலுவலர் மற்றும் பணத்தைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர் ஆகிய மூவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அத்துடன், மூன்றாம், நான்காம் சந்தேக நபர்களான பெண் அலுவலர்கள் இருவரும்மன்றில்முன்னிலையாகினர்.

நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், அலுவலர் மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்ட வர்த்தகர் ஆகியமூவர்சார்பில்முறையே சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், வீரகத்திப்பிள்ளை கௌதமன், ந.சிறிகாந்தா ஆகியோர் முன்னிலையாகினர்.

இரண்டாவது சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வீரகத்திப்பிள்ளை கௌதமன், “இந்த வழக்கின் விசாரணைகள்நிறைவுற்றநிலையில் இரண்டாவது சந்தேகநபர் மோசடியில் நேரடித் தொடர்பற்றவராகக் காணப்பட்டுள்ளார். அதனால் அவரை பிணையில் விடுவிக்க வேண்டும்” என்று மன்றுரைத்தார்.

விண்ணப்பத்தை ஏற்ற நீதிவான், இரண்டாவது சந்தேக நபரை 50 ஆயிரம்ரூபா காசுப் பிணை மற்றும் தலா 50 ஆயிரம்ரூபாபெறுமதியானஇரண்டு ஆள் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

முதலாவது மற்றும் 5ஆவது சந்தேக நபர்களை எதிர்வரும் 30ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், வழக்கை அன்றைய தினம் வரை ஒத்திவைத்தார்.

**பின்னணி**

யாழ்ப்பாணம்நகரில்நீண்டகாலமாக இயங்கிவரும் நிதி நிறுவனம் ஒன்றால், மாதகலைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு சுமார் 10 கோடி ரூபா பணம் மீற்றர் வட்டிக் கணக்கில் மோசடியாக வழங்கப்பட்டது.

அதனை நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணம் கிளை முகாமையாளர், அடகுப்பிரிவு அலுவலர்கள் இணைந்து தங்க நகை அடகுமீதான முற்பணம் என்று கணக்குக் காட்டியுள்ளனர்.

எனினும் நிதி நிறுவனத்தின் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணையில் வர்த்தகருக்கு வழங்கப்பட்ட முற்பணத்துக்கு உரிய நகைகள் அடகுப் பிரிவிடம் இருக்கவில்லை. அது தொடர்பில் கணக்காய்வுப் பிரிவால், நிதி நிறுவன முகாமைத்துவத்துக்கு அறிக்கையிடப்பட்டது.

சுமார் 6 மாதங்கள் இந்தப் பணம் தனிநபர் ஒருவருக்கு எந்தப் பொறுப்பும் பெறப்படாமல்மோசடியாகவட்டிக்குவழங்கப்பட்டுள்ளது என்று கணக்காய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. அது தொடர்பில் உரிய பணம் மற்றும் வட்டி அடங்கலாக சுமார் 11 கோடி ரூபா பணத்தை வர்த்தகரிடமிருந்து மீளஅறவீடுசெய்யுமாறுயாழ்ப்பாணம் கிளை முகாமையாளருக்கு நிதி நிறுவனத்தின் முகாமைத்துவம் கால அவகாசம் வழங்கியிருந்தது.

எனினும் உரிய காலத்துக்குள் பணம் மற்றும் வட்டியை மீள அறவீடு செய்வதற்கு கிளை முகாமையாளர் தவறிவிட்டதால், அவருக்கு எதிராக கொழும்பு பெரும் நிதி மோசடிகள் பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு நிதி நிறுவனத்தின் முகாமைத்துவம் முறைப்பாடு வழங்கியது.

அதனடிப்படையில்விசாரணைகளைமேற்கொண்டபெரும்நிதி மோசடிகள் பொலிஸ் விசாரணைப் பிரிவு, யாழ்ப்பாணம் கிளை முகாமையாளரைக் கைதுசெய்தது. முகாமையாளரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த மாதம் முற்படுத்தினர்.

மேலும்அடகுப்பிரிவில்பணியாற்றிய ஆண் அலுவலர் ஒருவரும், பெண் அலுவலர் இருவரும்பெரும்நிதிமோசடிகள் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில்பெண் அலுவலர்கள் இருவருக்கும் பிணை வழங்கிய நீதிமன்று ஆண் அலுவலரை விளக்கமறியலில் வைத்தது. (க-37)

## யாழ். இந்துக் கல்லூரியில் புதிய அதிபர் கடமையேற்பு



யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக செந்தில்மாறன் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கல்லூரியின்அதிபர்ச.நிமலன்இலஞ்சஆணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதனை [illegible] அதிபர் [illegible] (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி கடற்பிரதேசங்களில் பெரும் முதலீட்டு திட்டங்கள்

*10 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடும் யாழ். முதலீட்டாளர்*

*கிளிநொச்சி, ஒக்.17*

*கிளிநொச்சிமாவட்டத்தின்கீழானபூநகரிபிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை - வினாசியோடை - பரமன் கிராய் ஆகிய கடற்கரை பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் 200 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பை வழங்க கூடிய இரு கடற்கரை முதலீட்டு திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கானமுதற்கட்டமாக 10 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட யாழ்ப்பாணம் முதலீட்டாளர் ஒருவர் இரு பசுமைச் சூழல் சுற்றுலா கருத்திட்டங்களை முன்வைத்துள்ளார்.*

இதில் அல்பா அன் ஒமேகா டெவலப்பேர்ஸ் பிறைவேட் லிமிடெட் மற்றும் அல்மிறல்ரி முதலீட்டு பிறைவேற் லிமிடெட் என்ற இரண்டு முதலீட்டுத் திட்டங்களும் பூநகரி கௌதாரி முனையில்பல்வேறுபன்முகபேண்தக அபிவிருத்திகளை முன்னிறுத்தி பயன்படுத்தப்படாதகடற்கரைவளங்களை முழு அளவில் பயன்படுத்த முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம்முதலீட்டாளர்முதற்கட்டமாக 10 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை முதலிடவுள்ளார். அத்துடன் பூநகரி பிரதேச செயலர் இரண்டு முதலீட்டுத் திட்டங்க ளுக்குமாக 96 ஏக்கர் காணிகளை நீண்ட கால பயன்தரு நோக்கில் வழங்க முன்வந்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக மேற்படி பயன்தருஇருமுதலீட்டுதிட்டங்களுக்கான முன்னோக்கு விடயங்களை முழு அளவில் முன்னெடுப்பதற்காக கடற்றொழில்நீரியல்வளத்திணைக்கள கிளிநொச்சி உதவிப் பணிப்பாளர் ந.ஶ்ரீறஞ்சன், வடமாகாண சுற்றுலாப் பணியகத் தவிசாளர் பேராசிரியர் கே.தேவராஜா, கௌதாரி முனைவிநாயகர்கடற்றொழிலாளர் கூட்டுறவுச்செங்கசெயலாளர்ம.சிந்துசன்ஆகியோரதுமுன்அனுமதிகள் பூநகரி பிரதேச செயலருக்குக் கிடைக்கப்

பெற்றுள்ளன. விரைவில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, தொல்லியல்திணைக்களம்மற்றும்கரையோரப்பேணல்திணைக்களத்தின் அனுமதியை மாவட்டச் செயலர் பெற்று வழங்குவதற்கும் தயாராக உள்ளனர்.

இதேவேளை மேற்படி இரு கருத்திட்டங்களுக்குமான அனுமதியைப் பூநகரி பிரதேசக் செயலர் இவ்வாண்டு 2019 நவம்பர் மாதத்தில் அனுமதிக்கும் பட்சத்தில், நான்கு ஆண்டுகளில் பூநகரி கௌதாரிமுனைப் பிரதேசம் நேரடியாக 200 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும்.

அதேநேரம் மீனவர்கள், விவசாயிகள் கைத்தொழில்வினைஞர்கள் எனமறைமுகவேலையாள்கள்150 பேர் பயனடையும் பெரிய கருத்திட்டமாக முன்னெடுக்கப்பட வுள்ளது.

விரைவில் இதற்கான அனுமதி பூநகரிப் பிரதேச செயலரிடம் இருந்தும் மாவட்டச் செயலரின் காணிப்பயன்பாட்டுக் குழுவில் இருந்தும் கிடைக்கும் பட்சத்தில், பயன்தரு சுற்றுலா தளம்உருவாவதுடன்பூநகரிபிரதேச சபைக்கும் வருடாந்த வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக பூநகரிப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (க-50)

## மன். மாவட்டத்தில் இம்முறை 89,403 பேர் வாக்களிக்கத் தகுதி

மன்னார், ஒக்.17

மன்னார்மாவட்டதேர்தல்தொகுதியில்76வாக்கெடுப்பு நிலையங்களில் 89 ஆயிரத்து 403 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இறுதியாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களித்தவர்களை விடத் தற்போது 3 ஆயிரத்து 309 பேர் மேலதிகமாக வாக்களிக்கத்தகுதிபெற்றுள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மன்னார் மாவட்ட தேர்தல் தொகுதிக்கான உதவி ஆணையாளர் ஜனிற்றன் தெரிவித்ததாவது

மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும். இந்த முறை அரச தலைவர் தேர்தலில் 4 ஆயிரத்து 9 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தற்போதுவாக்குச்சீட்டுக்கள்அனைத்தும்மன்னாருக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கான வாக்காளர் அட்டைகள் 18ஆம் திகதி தபால் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும். மன்னார் மாவட்டச் செயலகத்தின் தேர்தல் திணைக்கள அலுவலகத்தில்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதபால்திணைக்கள அதிகாரிகளிடம் அவை ஒப்படைக்கப்படும். எதிர்வரும் 25ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக இந்த முறை மன்னார் மாவட்டதில் சிறப்பு முறைப்பாட்டுநிலையம்மன்னார்மாவட்டசெயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது 24 மணி நேரமும் செயற்பாட்டில் இருக்கும்- என்றார். (எ-60)

## சின்னப்புதுக்குள இளைஞர் கொலை சந்தேகத்தில் ஒருவர் நேற்றுக் கைது!

வவுனியா, ஒக்.17

வவுனியாவில் கடந்த வாரம் காணாமல் போயிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்றுச் சந்தேக்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாசின்னப்புதுக்குளத்தைச்சேர்ந்தகேதீஸ்வரன் சுவேந்திரபிரகாஸ் (வயது27) என்ற குடும்பத்தலைவர் கடந்த10ஆம்திகதிசடலமாகமீட்கப்பட்டார்.கள்ளிக்குளம் காட்டுப் பகுதியில் அவரது சடலம் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தது.

முச்சக்கரவண்டிச்சாரதியானஅவர்வவுனியாநகருக்குச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

இதுதொடர்பாகஓமந்தைமற்றும்வவுனியாப்பிராந்தியப் பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். விசாரணைகளின் அடிப்படையில் நேற்று ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் பிரிவில் உள்ள சிறப்புப் பொலிஸ் பிரிவால் இந்த நபர் மஸ்கெலியவில்வைத்துக்கைதுசெய்யப்பட்டார்என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)

## நூலகங்களின் வாசகர்களுக்கு இலவச அங்கத்துவம்

முல்லைத்தீவு, ஒக் 17

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுநூலகங்களின் வாசகர்களுக்கு இலவச அங்கத்துவம் வழங்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், ஒலுமடுஆகியபொது நூலகங்களின் வாசகர்களுக்கேஅங்கத்துவம்வழங்கப்படவுள்ளதாக பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

அந்தந்தப் பொது நூலகங்களில் உரிய படிவத்தைப் பெற்று அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளுமாறும்அறிவிக்கப்பட்டுள்ளது.

வாசகர்களிடையே வாசிப்புத் திறனை அதிகரிக்கும் நோக்குடனும் நூலகங்களில் அங்கத்தவர்களின் எண்ணிக்கையைஅதிகரிக்கும் நோக்குடனும் இந்த நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டது. (ஐ-9)

நானாட்டான் பிரதேசத்தில்

## கால்நடைகளின் மேய்ச்சல் நிலத்தில் விவசாய நடவடிக்கை முன்னெடுப்பு

*தவிசாளர் பரஞ்சோதி குற்றச்சாட்டு*

நானாட்டான், ஒக்.17

கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக தெரிவு செய்யப்பட்ட பகுதியில் சிலர் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நானாட்டான் பிரதேச சபைத்தவிசாளர்தி.பரஞ்சோதிகுற்றச்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலின் பெயரில் மற்றும் நானாட்டான் பிரதேச செயலகத்தால் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக கட்டயடம்பன் பகுதி அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் பெரும்போக விவசாயம் செய்யவென்று அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நானாட்டான் பிரதேசத்துக் கால்நடைகளுக்கு ஒழுங்கான மேய்ச்சல் நிலம் இல்லாததால்கால்நடைகளும்அவற்றைப் பராமரிக்கும் பண்ணையாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன. நானாட்டான் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட கட்டையடம்பன் பகுதியில் மேய்ச்சல் நிலம் இனங்காணப்பட்ட போதும் பிற திணைக்களங்களும் அதில் சம்பந்தப்பட்டமையால் அவை முழுமைபெறாமல் இருக்கிறது.

ஆனால் தற்போது மேய்ச்சல் நிலமாக இனங்கானப்பட்ட பகுதியில் பெரும் போக நெற்செய்கைக்கான அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகிறது

சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் கால்நடைகளும் பண்ணையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும் -என்றார். (ஐ-213)



## டெங்கு விழிப்புணர்வாக வவுனியாவில் வீதி நாடகம்

வவுனியா, ஒக்.17

டெங்கு விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகம் வவுனியா புதுக்குளம் சந்தியில் நேற்று நடைபெற்றது.

வவுனியா புதுக்குளம் கனிஷ்ட மகா வித்தியாலய ஆசிரியர்களின் நெறியாள்கையில், ஆரம்பப் பிரிவு மாணவர்கள் நாடகத்தை அரங்கேற்றினர்.

டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான காரணம், மற்றும் நுளம்புகளை எவ்வாறு அழித்தொழிப்பது தொடர்பாக நாடகத்திலும் காட்சிகள் இடம்பெற்றன.

மாணவர்கள் "டெங்கு நுளம்புகளை அழிப்போம்" என்ற பதாதைகளைத் தாங்கியவாறு வீதி நாடகத்தைப் பார்வையிட்டனர். (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கவும் மாட்டோம் மன்னிக்கவும் மாட்டோம்

## சீறுகிறார் சிவாஜி

*யாழ்ப்பாணம், ஒக். 17*

*இறுதிப் போரில் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களை இரக்கமின்றி சுட்டுப்படுகொலை செய்த ராஜபக்ச குடும்பத்தை தமிழ் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். இந்த அராஜகங்கள் தொடர்பாக பன்னாட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளியான ராஜபக்ச குடும்பம் தண்டிக்கப்பட வேண்டும். நீங்கள் மன்னிக்கக் கூடிய குற்றத்தை செய்யவில்லை என்பதை பசில் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று அரச தலைவர் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.*

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யாழ். பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரர் பசில் ராஜபக்ச கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பதை தமிழர்களால் மறக்க முடியாது. ஆனால் இரு சமூகத்தினரும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு மற்றும் போர்க்குற்றத்தில் பிரதான குற்றவாளி முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய எனப் பலரும் கூறி வருகின்றோம். இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் போர்க்குற்றம் என்பவற்றுக்கு அவரே முழுப்பொறுப்பு. மறக்காவிட்டாலும் மன்னியுங்கள் என்று பசில் ராஜபக்ச கூறுகின்றார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினரான இருந்த கஜேந்திரகுமார் பசில் ராஜபக்சவுடன் தொடர்பு கொண்டு சரணடைவது தொடர்பில் தெரிவித்திருந்தார். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பலரை ஈவிரக்கமின்றி சுட்டுப் படுகொலை செய்த ராஜபக்ச குடும்பத்தை தமிழ் மக்கள் இன்றும் மன்னிக்க மாட்டார்கள். பன்னாட்டு விசாரணை ஊடாக குற்றம் புரிந்த அனைவருக்கும் தண்டனை கிடைக்கவேண்டும். அதற்காகவே நாம் இன்று வரை போராடி வருகின்றோம். மன்னிக்கக்கூடிய குற்றத்தை செய்யவில்லை என்பதை ராஜபக்ச குடும்பமே புரிந்துகொள்ள வேண்டும். மகிந்தவின் மகன் குட்டிச்சால்வை என்று அழைக்கப்படும் நாமல் யாழ்ப்பாணத்தில் வந்து இரண்டு வருடத்தில் தீர்வு தருவது என்று கூறுகின்றார். நாமல் தான் அவ்வாறு கூறுகின்றார் என்று பார்த்தால் முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரனும் மிக விரைவில் தீர்வு என்கின்றார். இவர்கள் எல்லோரும் எந்த அடிப்படையில் மிக விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றார்கள் என்று தெரியவில்லை. தென்னிலங்கை அரசின் அரைகுறை வாக்குறுதிகளால் நாம் தொடர்ந்தும் ஏமாறமுடியாது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச எனக்கு தேர்தலில் மக்கள் வாக்களிப்பார்களா என்று எள்ளி நகையாடும் வகையில் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவருக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எமது மக்கள் நினைத்தால் பலதும் செய்வார்கள். நடைபெறவுள்ள தேர்தலில் குறிப்பாக வடக்கு மக்கள் என்ன செய்வார்கள் என்பதனை பொறுத்திருந்து பாருங்கள். அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் கோத்தபாயவை வடக்கில் மூன்றாம் நிலைக்குத் தள்ளும் நிலைமையே உருவாகும். நாட்டில் எந்தப் பாகத்திலும் கோத்தபாய முன்னுக்கு வந்தாலும் வடக்கில் கோத்தபாய முதலாவது அல்லது இரண்டாவது இடத்தைப் பிடிக்கவே முடியாது.

நான் அரச தலைவர் தேர்தல் போட்டியில் இருந்து ஒரு வாரத்துக்குள் விலகவேண்டும் என ரெலோக் கட்சியினர் கோரியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். எனக்கு அவ்வாறான கோரிக்கை எதுவும் எழுத்து மூலம் கிடைக்கவில்லை. தேர்தல் போட்டியிலிருந்து விலகமாட்டேன் என்பதை நேற்றுமுன்தினம் சங்கிலியன் பகுதியில் ஆரம்பித்த பரப்புரை நடவடிக்கைகள் ரெலோக் கட்சியினருக்கு உணர்த்தியிருக்கும். எனது தேர்தல் அறிக்கை தமிழீழத்தின் தலை நகரான திருகோணமலையில் மிகப் பிரமாண்டமாக இன்று வெளியிட்டுவைக்கவுள்ளேன். அதில் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பில் இடம் பெற்ற அனுபவங்களை வைத்து தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை தெரிவிக்கவுள்ளேன்.

தமிழ் மக்களின் கோரிக்கை தொடர்பில் வடக்கிலுள்ள தேசியக் கட்சிகளில் 5 கட்சிகள் ஒன்றிணைந்து பேரம் பேச முயற்சி எடுத்துள்ளதை வரவேற்கின்றேன். எனினும் அவர்கள் பேசி எந்தவொரு தரப்புடனும் இணக்கப்பாடு ஏற்படாது விட்டால் என்ன முடிவு எடுக்கப்போகின்றீர்கள் என்பதை இப்போதே தெளிவாகக் கூறிவிடுவதும் நல்லது. பிரதான வேட்பாளர்களுடன் இணக்கப்பாடுகள் எவையும் காணாது விட்டால் ஏதோவொரு தரப்புக்கு ஆதரவு தெரிவியுங்கள் எனக் கோரப் போகிறீர்களா?, தேர்தலைப் புறக்கணிக்க கோரப்போகிறீர்களா?, பொது வேட்பாளராக இறங்கியுள்ள என்னை ஆதரிக்கப்போகின்றீர்களா? என்பதை இப்போதே தீர்மானியுங்கள் - என்றார். (ஒ,5,ரி1)

## யாழ். பல்கலை பேரவைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

கொழும்பு, ஒக். 17

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். குலேந்திரன் சிவராம் பேரவை உறுப்பினராக இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம்செய்யப்பட்டிருக்கிறார்.

உடனடியாக செயற்படும் வகையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்ட இந்த நியமனம் தொடர்பான அறிவித்தல் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்துக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்தின் பிரிவு 444(1) க்கு அமைவாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் பேரவைக்கு பதவிவழி உள்வாரி உறுப்பினர்களாக நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஒன்று அதிகமாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமிக்கப்படுவது வழமையாகும். கடந்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாணப்பல்கலைக் கழக பேரவையில் இருந்த 14 உள்வாரி உறுப்பினர்களுக்கு ஈடாக 15 வெளிவாரி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் இந்த வருட முற்பகுதியில் இந்து கற்கைகள் பீடம் புதிதாக உருவாக்கப்பட்டதன் காரணமாக உள்வாரியாக அதன் பீடாதிபதி உள்வாங்கப்பட்டதனால் அதனைச் சமப்படுத்தும் வகையில் புதிதாக வெளிவாரி உறுப்பினர் ஒருவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்திருக்கிறது. (ஒ,5)

## அதிகாரப் பகிர்வுக்காக மட்டுமே ஐ.தே.கவுக்கு சம்பந்தன் ஆதரவு

*சு.கவின் பேச்சாளர் வீரகுமார தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 17

அதிகாரப்பகிர்வின் ஊடாக நாட்டை பிளவு படுத்துவதற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளிப்பதாக சுதந்திர கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் நாட்டில் ஒற்றுமையையே எதிர்பார்க்கின்றோம். அதுவே எமது இலக்காகும். கூட்டமைப்பு அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசமைப்பு மற்றும் அதிகார பகிர்வுக்கான யோசனைகள் ஆகியவற்றிலேயே கவனம் செலுத்தியிருக்கிறது. தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் ஏதேனுமொரு காரணத்தைக் கூறிக் கொண்டு ஏதாவதொரு தரப்பு ஆதரவளிக்கும். இந்த நிலைமையை மாற்றியமைக்குமாறு வடக்கு மற்றும் கிழக்கு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.17

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் செயன்முறைப் பரீட்சைக்கான செயலமர்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள முத்துதம்பி மகா வித்தியாலயத்தில் இன்று முதல் நான்கு தினங்களுக்கு தினமும் மாலை 4 மணிக்கு செயலமர்வு நடைபெறும்.

இந்த வருடம் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் செயலமர்வில் பங்கேற்க முடியும் என்று பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் தெரிவித்துள்ளது. (க-105)

## தாயகம் நம்பிக்கை நிதியத்தால் 150 மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஒக்.17

தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. வண்ணை ஸ்ரீ லக்ஷமி நாராயண மண்டபத்தில் வைத்து உதவிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 65 மாணவர்களுக்கும், யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] வித்தியாலயத்தைச் சேர்ந்த 85 மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு சீருடைகள், பாதணிகள், கற்றல் உபகரணங்கள், ஈருருளிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயகம் நிறுவுநர் எஸ்.வி.சிறிதரன் மைதிலி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சின்மயா மிசன் சுவாமிகள் யாக்கிரத் சைத்தன்ய கலந்து கொண்டார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச தலைவர் தேர்தலில்
# சிறுபான்மையினர் வாக்களிக்காவிட்டாலும் கோத்தபாயவினுடைய வெற்றி நிச்சயமே!
## விமலவீர திஸாநாயக்க எம்.பி சொல்கின்றார்

கொழும்பு, ஒக். 17
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறுபான்மை மக்கள் வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் கோத்தபாய வெற்றிபெறுவது நிச்சயம் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பன்னாட்டுச் சமூகத்துக்கே சவாலாக இருந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் நிலையான சமாதானத்தை தோற்றுவித்து பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டு சாதனை படைத்தவர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.
அதே வழியில் நின்று செயற்படுவதற்கான சிறந்த அரச தலைவர் வேட்பாளரை எமது பொது மக்கள் முன்னணி களத்தில் இறக்கியிருக்கின்றது. அவருக்கு நாட்டில் உள்ள அனைத்து இன மக்களும் இணைந்து வாக்களிப்பதே எமது எதிர்கால நல்வாழ்வுக்கான அத்திபாரமாக அமையும். கூட்டு அரசு நாட்டில் ஆட்சி புரிந்த கடந்த நான்கரை ஆண்டுகளில் சிறுபான்மைச் சமூகத்துக்கு என்ன நன்மைகள் கிட்டியுள்ளன என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக முஸ்லிம் தலைமைகள் இந்நாட்டில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு கடந்த நான்கரை வருடங்கள் பெற்றுக் கொடுத்தது என்ன என்பதை நான் பகிரங்கமாக கேட்க விரும்புகின்றேன். வட -கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறுபான்மைச் சமூகத்தினர் கடந்த 2005 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் மிகக் குறைந்தளவு வாக்குகளையே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கினார்கள். இருந்த போதிலும் அவர் அமோக வெற்றி பெற்றார். அவ்வாறு வெற்றிபெற்றவர் சிறுபான்மைச் சமூகத்தினரை வெறுத்து ஒதுக்கவில்லை. நாட்டில் இன மத பேதமின்றி பெரிய அபிவிருத்தி புரட்சியை ஏற்படுத்தினார்.
எதிர்வரும் அரசதலைவர் தேர்தலின்போது கோத்தபாய ராஜபக்ச சிறுபான்மையினர் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அமோக வெற்றி பெறுவது நிச்சயம். எனவே அவரது வெற்றியின் பங்காளர்களாக சிறுபான்மைச் சமூகம் மாறவேண்டும் - என்றார். (ம)

## வருடாந்த பரிசளிப்பு விழா

கரணவாய்,ஒக்.17
செம்பியன்பற்று அ.த.க பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
அதிபர் க.கணேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக மருதங்கேணிப் பிரதேச செயலகக்கணக்காளர். சுதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-108)

## மர்ம வாகனத்தால் மட்டக்குளியில் பதற்றநிலை

கொழும்பு மட்டக்குளி பகுதியில் சாரதியின்றி நீண்ட நேரம் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தினால் பதற்ற நிலை ஏற்பட்டது.
குறித்த வாகனத்தில் வெடிகுண்டு இருப்பதாக போலியான தகவல்கள் பரப்பப்பட்டமையினால் இந்த நிலை ஏற்பட்டது.
முகத்துவாரம் இந்து கல்லூரிக்கு அருகில் இன்று முற்பகல் குறித்த வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, குண்டு செயலிழக்கும் படையினர் உட்பட அதிரடி படையினர் சோதனையிட்டனர்.
எனினும் அவ்வாறான எந்தவொரு பொருள்களும் மீட்கப்படவில்லை.
இதேவேளை கம்பகா பகுதிகளிலும் வெடிகுண்டு புரளி பரப்பப்பட்டமையினால் மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

## வடக்கு மாகாணத்தில் இன்று இடியுடன் மழைக்கு சாத்தியம்

யாழ்ப்பாணம், ஒக். 17
வடக்கு மாகாணத்தில் பரவலாக 100 மில்லிமீற்றர் அளவுக்கு மழை பெய்வதற்கு சாத்தியம் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்து ள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
மத்திய, சப்ரகமுவ, தென், வடமேல், மேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் காலையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.
மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.
நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தெற்கு அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 10 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வரை காணப்படும் - என்றுள்ளது. (ம)

## மட்டக்குளி வெடிகுண்டு புரளி பொலிஸ் தலைமையகம் விளக்கம்!

கொழும்பு, ஒக். 17
கொழும்பு, மட்டக்குளியில் நேற்றுப் புதன் கிழமை காலை ஏற்பட்டிருந்த திடீர் பதற்ற நிலை குறித்து பொலிஸ் தலைமையகம் விளக்கமளித்துள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு வாகனம் ஒன்று அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.
நேற்றுக் காலை பாடசாலைக்கு மாணவர்களை அழைத்துச் சென்ற பெற்றோர் இதுகுறித்து அச்சமடைந்தனர். வாகனத்தில் வெடி குண்டு நிரப்பப்பட்டுள்ளதாகவும் வதந்திகள் பரவின.
இதன்காரணமாக இன்று காலை அந்தப் பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.
தேவாலயம் மற்றும் அதற்கு அருகில் அமைந்துள்ள பாடசாலைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம், சந்தேகத்துக்குரிய வாகனம் அல்லவென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இயந்திரக் கோளாறு காரணமாகவே வாகனம், உரிமையாளரால் அந்தப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். வாகனத்தின் உரிமையாளர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து இதுகுறித்து விளக்கம ளித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ.5)

## மைத்திரியின் தற்போதைய அரச இல்லத்தை அவருக்கே வழக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 17
அரச தலைவர் மைத்திரிபாலவின் தற்போதைய இல்லத்தை, ஓய்வின் பின்னரும் அவருக்கே வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதற்காக அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது.
மஹகமசேகர மாவத்தையிலுள்ள உத்தியோகபூர்வ இல்லமே அவருக்கு இவ்வாறு வழங்கப்படவுள்ளது. அரச தலைவர் செயலகத்தில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் இந்த அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அபிவிருத்தித் திட்டங்கள் நேற்றுத் தொடக்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
கல்லுண்டாயில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டம், ஐ வீதித் திட்டம் என்பன தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலர் வே.சிவ ஞானசோதியால் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.
கல்லுண்டாயில் முதல் கட்டமாக 50 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 30 வீடுகளும் அமைக்க அனுமதி வழங்கப்பட்டன. முதல் கட்டமாக அமைக்கப்பட்டுவரும் வீடுகளை அமைச்சின் செயலர் வே.சிவ ஞானசோதி மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஐ வீதித் திட்டத்தில் மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ள வீதிகளின் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. செட்டியார்மடம் சங்கானை வீதி, பன்னாலை கீரிமலை வீதி, ஏழாலை கட்டுவன் வீதி ஆகியவற்றின் மறுசீரமைப்புப் பணிகளே ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினைகளை அறியமுற்படாதவர் கோத்தா

## அவரை தமிழர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்கிறார் சிறிநேசன்

மட்டக்களப்பு, ஒக். 17

வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினை என்னவென்று இதுவரையில் அறிந்துகொள்ள முடியாத ஒருவரை, தமிழ் மக்களுக்கு எவ்வித அநீதியுமே இந்த நாட்டில் இடம்பெறவில்லை, அனைத்துமே ஊகத்தின் அடிப்படையில் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் என்று சொல்லும் ஒருவரை எமது மக்கள் எவ்வாறு நம்பமுடியும் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்.

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகள் சம்மந்தமாக ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்குப் பகுதிகளில் காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் இறுதிப்போரின்போது சரணடைந்தவர்கள் அல்லது ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவிடம் கேள்வியெழுப்பும் போது அது ஒரு போலியான குற்றச்சாட்டு, அவ்வாறான ஒரு விடயமே இடம்பெறவில்லை, இவையெல்லாம் ஊகத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டவை என்று குறிப்பிட்டு ள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களால் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவே எமது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்ற விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

அவ்வாறு அவர்களால் நிய மிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையைக் கூட அவர் இதன் போது மறுதலிக்கின்றார். இவ்வாறு இந்த நாட்டில் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் எதுவுமே இடம்பெறவில்லை என்பது போல் கருத்துக்களை வெளியிடும் இவரை தமிழ் மக்கள் எவ்வாறு நம்புவது என்கின்ற விடயம் மக்கள் மத்தியில் கேள்வியாக இருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு என்கின்ற பிரச்சினைகளைத் தவிர வேறு எந்தப் பிரச்சனைகளுமே கிடையாது என்று அவர் குறிப்பிட்டுள்ளமையானது அவர் எமது முக்கிய பிரச்சினையான அரசியல் தீர்வு தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டில் உள்ளார் என்பதையும், எமது பிரச்சினைகள் தொடர்பில் எதுவுமே அறியாதவராக இருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டினையுமே காட்டுகின்றது.

அத்துடன் ஒரு வேட்பாளர் என்பவர் தற்துணிவுடன் அனைத்துக் கேள்விகளுக்கும் தானே பதில் வழங்கக் கூடியவராக இருக்க வேண்டும். ஆனால் கோத்தபாய சில கேள்விகளுக்கு அவரது அண்ணனையும், சில கேள்விகளுக்கு வேறுநபர்களையும் பதில் வழங்க எதிர்பார்க்கின்றார். இவ்வாறானவர் தன்னிச்சையான முடிவெடுத்து இயங்கும் திராணி கொண்டவராக எவ்வாறு செயற்படுவார்?

கோத்தபாயவின் பதில்கள் ஒரே ஒரு விடயத்தை மாத்திரம் மையப்படுத்துவதாகவே இருக்கின்றன. இராணுவத்தைப் பலப்படுத்தல், புலனாய்வுப் பிரிவினைப் பலப்படுத்தல், குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலுள்ள இராணுவத்தினரை விடுவிப்பது இவ்வாறு இவரது சிந்தனைகள் எல்லாம் இராணுவமயப்படுத்தப்பட்ட சிந்தனையாகவே இருக்கின்றது. புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினை தொடர்பில் எவ்வித கருத்தும் சொல்ல அவர் விரும்பவில்லை. நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் பேசுவதாக இல்லை, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அவர் பேசுவதாகவும் இல்லை. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு இராணுவம் தொடர்பாக மாத்திரம் அவர் சிந்திக்கின்றார் என்றால் அவரது சிந்தனை ஜனநாயக சிந்தனையில் இருந்து முழுக்க முழுக்க விடுபட்டு இராணுவ சிந்தனையோடு இருப்பதையே காட்டுகின்றது. இந்த நாட்டின் அனைத்து தரப்பினதும் பிரதிநிதியாக இருப்பதை விடுத்து அவர்சார்ந்தஒருகுழுவுக்குதலைமை தாங்கும் ஒருவராக இருப்பது போலவே அவரின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் எங்களில் சிலர் தங்களின் சுயநலன்களுக்காக செயற்படுகின்றார்கள். கடந்தகாலங்களில் வெள்ளைவான் கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் வாய்கிழியக் கதைத்தார்கள். அதுமட்டுமல்லாது அழிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டி மக்களின் வாக்குகளைப் பெற்று தற்போது முழுமையாகத் தலைகீழாக மாறி அடிவருடி அரசியலை மேற்கொள்கின்றார்கள். இவர்கள் எமது மக்களை ஏமாற்றி தங்களின் உழைப்புவாத அரசியலை மேற்கொள்வதற்கு அக்கறையாக இருக்கின்றார்கள்.

இருக்கக்கூடிய ஜனநாயக சூழ்நிலையைக் குலைத்து விட்டு நாங்கள் மீண்டும் ஒரு பயங்கரமான சூழலுக்குள் வாழப் போகின்றோமா என்பது பற்றி எமது மக்கள் சிந்திக்க வேண்டும். இது தொடர்பில் எமது மக்கள் சரியான முடிவினை எடுப்பார்கள் - என்றார். (ம)

---

*எரிவாயு*

# அதிக விலையில் விற்பனை செய்பவருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஒக். 17

சமையல் எரிவாயுவை அதிக விலையில் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நுகர்வோரின் முறைப்பாடுகளை கவனத்தில் கொண்டு கூடுதலான விலைக்கு சமையல எரிவாயுவை விற்பனை செய்யும் வர்த்தகர்களை முற்றுகையிடுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகரித்த விலையில் எரிவாயுவை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்களை 1977 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கமுடியும்.

எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டிருந்த பொழுதும் விலையைக் குறைக்காமல் தொடர்ந்தும் அதிக விலையில் எரிவாயுவை விற்பனை செய்வது குற்றமாகும் என்று அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி நள்ளிரவு முதல் 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 251 ரூபாவாலும் 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 95 ரூபாவாலும் 2.3 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 289 ரூபாவாலும் குறைக்கப்பட்டிருந்தது. (ஒ.5)

---

# வற் வரியை குறைக்க நடவடிக்கை கோத்தா

கொழும்பு, ஒக். 17

சீரான வரி அறவீட்டு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தி, வற் வரியை 8 சதவீதம் வரையில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் அரசதலைவர்வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேயிலைஉற்பத்தியாளர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதேமேற்கண்டவாறுகூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைமுறையில் உள்ள வரி அறவீட்டு முறைமை, அனைவருக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. முன்னையஆட்சியில்குறைக்கப்பட்டிருந்த பெறுமதி சேர்க்கப்பட்டவரியை,இந்த அரசு 15 சதவீதம் வரையில் அதிகரித்துள்ளது.

அதேநேரம் வெவ்வேறு பெயர்களில்வரியை அறவிட்டு, மக்களை மேலும் அழுத்தங்களுக்கு உள்ளாக்குகிறது. இந்த நடைமுறை மாற்றப்பட வேண்டும்.

சீரான வரி அறவீட்டு முறைமையை பின்பற்றினால், பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் அளவை 8 சதவீதம் வரையில் குறைக்க முடியும் என்றார். (ஒ.5)

---

# வாக்கு எண்ணும்பணி தாமதமடைய வாய்ப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

அரச தலைவர் தேர்தலின் இறுதி முடிவுகளை நவம்பர் 18ஆம் திகதி நண்பகலுக்கு முன்னர் வெளியிட எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அந்த ஆணைக்குழுவின்தலைவர் மகிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்குச்சீட்டு அதிக நீளமானது என்பதால், வாக்குகள் எண்ணும் பணிகளுக்கு அதிக நேரம் செல்லும். தேர்தல்கள் ஆணைக்குழுவால் உறுதிப்படுத்தப்படாத தேர்தல் தொடர்பான முடிவுகளை சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ளவும்.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தலின்போது, குறைந்தது ஒரு மாகாணத்திலாவது இலத்திரனியல் வாக்களிக்கும் முறையை அறிமுகப்படுத்த வேண்டும். அதற்காக, இந்தியா மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ஒ.5)

---

# நாட்டுக்குப் பொருத்தமான தலைவர் கோத்தபாயவே

## மஸ்தான் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

கோத்தபாய ராஜபக்சவே இன்றைய சூழ்நிலையில் நாட்டுக்குப் பொருத்தமான தலைவராக விளங்குகிறார் என்று தெரிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்காதர்மஸ்தான்.

இது தொடர்பில் அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினின் ஏகோபித்த முடிவின் அடிப்படையிலும் எமது தனிப்பட்ட நிலைப்பாட்டின் அடிப்படையிலும்எமதுகட்சியின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னும் அடிப்படையில்நானும் சகநாடாளுமன்றஉறுப்பினரான பைசர் முஸ்தபாவும் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் மிகத் தெளிவாக இருக்கிறோம். நாட்டின்பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேவை நாட்டின் முதன்மைக் கட்சியான சிறிலங்காசுதந்திரக்கட்சியினராகிய எமக்கு உண்டு. எனவேதான் இன்று நாட்டுக்குப் பொருத்தமான தலைவராக விளங்கக்கூடியகோத்தபாய ராஜபக்சவைநாம்ஆதரிக்கிறோம். நான்பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னி மாவட்ட பொரும்பான்மையான மக்களின் முடிவும் இதுவேயாகும். இந்த அடிப்படையிலேயேநானும்எமதுபிரதேச சபை உறுப்பினர்களும் கோத்தபாயவை வெற்றிபெறச்செய்யும்வேலைத்திட்டத்துக்கமைய பப்புரைகளை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (ம-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால வரைவை நிராகரிப்பதாகக் கூறுவோர் ஆவணத்தில் வரக்கூடாது என்பதன் மர்மம் என்ன?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 17

புதிய அரசமைப்புக்கான இடைக்கால வரைவை நிராகரிக்கின்றோம் என்று கூறியவர்கள், அந்த விடயம் மாணவர்களின் அறிக்கையில் பொது ஆவணத்தில் இடம்பெறக் கூடாது என்று ஒற்றைக்காலில் நின்றதன் மர்மம், பின்னணி, நியாயப்பாடு எமக்குப் புரியவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் உறுப்பினர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தனது முக நூலில் பதிவிட்டுள்ளதாவது:

பல்கலைக் கழக மாணவர்களால் அழைக்கப்பட்ட தமிழ் கட்சிகள் மாகாண சபையை நடைமுறைப்படுத்தல் அதற்கு அதிகாரம் வழங்கல் உட்பட பல்வேறு ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயங்களை தீர்வு திட்ட யோசனைகளாக முன்வைத்த போதும் எமது முயற்சியால் ஓர் கனதியான அறிக்கை எட்டப்பட்டது. அறிக்கையில் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தற்போதும் அரசமைப்புச் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சி வடிவிலான இடைக்கால அறிக்கையை நாம் நிராகரிக்கின்றோம் என்று ஓர் விடயம் சேர்க்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாக இருந்தது. காரணம் குறித்த இடைக்கால அறிக்கையை அடிப்படையாக வைத்து அரசமைப்பு மாற்றம் செய்ய இங்குள்ள தமிழ் கட்சி ஒன்றும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக செயற்படுகின்றமையே ஆகும்.

இது ஆராயப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பெரும்பாலும் இருக்கவில்லை. அங்கிருந்த தமிழ் அரசு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிரசா மற்றும் புளொட் சித்தார்த்தன் ஆகியோர் தாம் இடைக்கால அறிக்கையை நிராகரிக்க மாட்டோம். அது முடிந்த விடயம் அதுபற்றி பேசத் தேவை இல்லை, என்றார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப், விக்னேஷ்வரன் ஐயா தரப்பு, ரெலோ ஆகியன தாம் எப்பவோ இடைக்கால அறிக்கையை நிராகரித்துவிட்டோம். ஆனால் அந்த அறிக்கை குப்பைத் தொட்டியில் கிடக்கின்றது. அதை பற்றி நாம் பேசுவதில் அர்த்தமில்லை என்றார்கள். பின்னர் எங்கோ இருந்து வந்த சுமந்திரன், நாம் இடைக்கால அறிக்கையை ஏற்கின்றோம். அதன் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் வரும் ஆட்சியாளர்களுடன் பேச்சு நடத்தவுள்ளோம் என்றார். அதன் பின்னர் விக்னேஷ்வரன் ஐயாவும் அந்த இடைக்கால அறிக்கையின் படி தான் பேச்சு தொடரப்பட வேண்டும் என்றார். அதன் பின்னரும் அந்த இடைக்கால அறிக்கையை நிராகரிக்கின்றோம் என்ற எவரும் எமது கோரிக்கையை ஏற்கவில்லை. நாம் அழகாக மக்களுக்கு காண்பிக்க கூட்டாட்சி, சுயநிர்ணய உரிமை, தேசம், இறைமை என்றெல்லாம் குறிப்பிட்டு விட்டு நாம் ஒற்றை ஆட்சி அடிப்படையில் தான் பேசப் போகின்றோம் என்று கூறுவது அனைத்தையும் பூச்சியத்தால் பெருக்குவதற்கு சமம். இடைக்கால அறிக்கை மட்டுமல்ல மகிந்த காலத்தில் உருவாக்கப்பட்ட ஏர்ஆர்சிபி அறிக்கையையும் நிராகரிப்பது பற்றி ஏன் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட வேண்டும் என்பது பற்றி யாழ். பல்கலைக் கழக சட்ட விரிவுரையாளர் கலாநிதி குருபரன் போதிய விளக்கம் அளித்த போதும் ஏனைய 5 கட்சிகளும் ஏற்க மறுத்துவிட்டன. அப்போது குருபரன் முன்னணியின் ¬ரிசனையை பிரதான ஆவணத்தில் குறிப்பிடாது அடிக் குறிப்பாக இட அனுமதிக்கலாம் என்று கூறிய போதும் அதையும் 5 கட்சிகளும் நிராகரித்துவிட்டன.

பின்னர் கை ஒப்பமிடும் பகுதியில் ஒற்றை ஆட்சி அடிப்படையிலான இடைக்கால அறிக்கையை நிராகரிக்கின்றோம் என்பதற்கு அமைவாக ஒப்பமிடுகின்றோம் என்று கேட்டோம் அதற்கும் 5 கட்சிகளும் மறுத்துவிட்டன. முன்னணியை குறித்த விடயத்தை எழுதி கையொப்பம் இட அனுமதிக்குமாறு பல்கலை மாணவர்கள், அங்கிருந்த சுயாதீன குழுவை சேர்ந்த மத குருக்கள் ஆகியோர் மன்றாட்டமாக கேட்டும் மற்றைய 5 கட்சிகளும் நிராகரித்து விட்டன. மாணவர்களின் இறுதி அறிக்கையில் உள்ள 75 சதவீதமான விடயங்கள் எமது போராட்டத்தால் உள்வாங்கப்பட்டவை. எமது கோரிக்கை ஏற்கப்படின் எனியும் நாம் கையொப்பம் இட முடியும்.

இடைக்காலஅறிக்கையைநிராகரிக்கின்றோம் என்று கூறியவர்கள் அந்த விடயம் மாணவர்களின் அறிக்கையில் இடம் பெற கூடாது என ஒற்றை காலில் நின்ற மர்மப்பின்னணி நியாயப்பாடு எமக்கு புரியவில்லை.

இந் நிலையில் இடைக்கால அறிக்கையை நாம் நிராகரிக்கவில்லை அதன் அடிப்படையில் தான் எதிர்காலத்தில் பேச போகின்றோம் என்பவர்களை விட அதை நிராகரிக்கின்றோம் ஆனால் அதை எழுதி கையொப்பமிட மாட்டோம் என்ற பிரகிருதைகள் தான் ஆபத்தான பேர்வழிகள்.

ஒற்றை ஆட்சி அடிப்படையிலான இடைக்கால அறிக்கையை நிராகரிப்பதாக சொல்பவர்கள் குறித்த விடயம் மாணவர்களின் அறிக்கையில் உள்வாங்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ,5)

## கோத்தாவின் தேர்தல் அறிக்கை 25ஆம் திகதி வெளியீடு

கொழும்பு, ஒக். 17

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவின் தேர்தல் அறிக்கை எதிர்வரும் 25ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்பன்பில குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அறிக்கையை இறுதி செய்யும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ,5)

## ரணில் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஒக். 17

அரசதலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவன ஊழல் மோசடி விவகாரம் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

மத்தள வானூர்தி நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பாக அவர் இதன்போது சாட்சியம் வழங்கவுள்ளார்.

இதேவேளை அரச வங்கிக் கணினி கட்டமைப்பை உருவாக்கும் போது இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்ணாண்டோவும் அதே தினம் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# ஒருமைப்பாடான கருத்துக்கள் தமிழரையே பெருமைப்படுத்தும்

## தமிழ்த் தேசிய பணிக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

ஒருமைப்பாடான கருத்து தமிழரையே பெருமைப்படுத்தும் என்று தமிழ்த் தேசிய பணிக்குழுத் தலைவர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அரசதலைவர் தேர்தலில், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழருக்கான தீர்வை முன்வைப்பது என்பது பற்றிய கலந்துரையாடலில் 5 கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் இது குமரகுருபரன் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த அடிப்படைக் கருத்துக்களை ஏற்படுத்த அனைத்துக் கட்சிகளும் பங்குபற்ற அழைக்கப்பட்டிருக்கலாம் என்றே நாம் ஆரம்பத்தில் எண்ணியிருந்தோம், எதிர்காலத்தில் முற்றான ஒருமைப்பாடு கை கூட வேண்டும்.



தமிழ் மக்கள் தம் பிரச்சினை களில் ஏதோ ஒரு வகையில் ஒருமைப்பாடு கண்ட தமிழ்க் கட்சித் தலைமைகளுக்கும் பல்கலைக்கழக மாணவர் தரப்புக்கும் பாராட்டுத் தெரிவிக்க வேண்டிய கடமைப்பாடு தமிழ்த் தேசிய பணிக்குழுவுக்கு உண்டு.

அரசதலைவர் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் அடிப்படையான கோரிக்கைகளை ஒன்றுபட்டு வலியுறுத்துவது ஆரோக்கியமானது-என்றுள்ளது. (த)

# தமிழ்க் கட்சிகளின் ஒன்றுமை தொடர்ந்து இருக்க வேண்டும்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஒக்.17

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. பல்கலைக் கழக மாணவர்கள் முயற்சியால் அரச தலைவர் தேர்தலுக்காக ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகள் எதிர்காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக 5 தமிழ்க் கட்சிகள் பொது இணக்கப்பட்டுக்கு வந்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்காகச் செயற்படும் கட்சிகள் பிரிந்து செயற்படுவது பேரினவாதச் சக்திகளுக்கும், பேரினவாதிகளுக்கும் துணைபோகும். கடந்த காலக் கசப்புகளை மறந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அனைத்துக் கட்சிகளும் இணைந்து பயணிக்க முன்வர வேண்டும். இன்று கட்சிகளாகப் பிரிந்திருப்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புதியவர்கள் அல்லர். நமக்கு நாமே பகைவர்களாகவும், எதிரிகளாகவும் பார்த்துக் கொண்டிருப்பதால் எமது பொது எதிரியான சிங்கள ஆட்சியாளர்கள் அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய தீர்வைக் கிடப்பில் போட்டு விடுவார்கள். இந்த இணக்கப்பாடு அரச தலைவர் தேர்தலுடன் நின்றுவிடாது தொடர வேண்டும். - என்றார். (எ-213)

# அதிகாரிகள் அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை

## ஆணைக்குழுத் தலைவர் மகிந்த

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் போது அரச அதிகாரிகளை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சமூக வலைத்தளங்கள் ஊடாக வேட்பாளர்களுக்குச் சார்பாக கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறும் அவர் கோரியுள்ளார். இதனை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளுக்கு சாவுத் தண்டனை

## சஜித் பிரேமதாச உறுதி



கொழும்பு, ஒக். 17

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் சாவுத் தண்டனை வழங்கப்படும் என்று புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நிட்டம்புவவில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் சாவுத் தண்டனை வழங்க வேண்டும். சாவுத் தண்டனையை அறிவித்தால் மட்டும்போதாது. அதனை நடைமுறையில் செயற்படுத்திக் காண்பிக்க வேண்டும். பயங்கரவாதத்தை முற்றாக அழிக்கஎமதுபுலனாய்வுத்துறையை நாம் பலப்படுத்த வேண்டும். இவர்களின் உதவியுடன் கைது செய்யப்படும் அனைத்து பயங்கரவாதிகளுக்கும் நாம் சாவுத் தண்டனையை வழங்குவோம்.

இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக, இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழிப்போம் என்று இவ்வேளையில் நான் உறுதியுடன் கூறிக்கொள்கிறேன். போரைநிறைவுக்குக்கொண்டு வந்த பீல்ட் மார்சல் சரத்பொன்சேகாவை நாம் எமது ஆட்சியில் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் நல்லிணக்க அமைச்சராக நியமிப்போம் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்மைப் பொறுத்தவரை நாட்டுக்கு சேவையாற்ற களமிறங்கியவுடன் நண்பர்கள், உறவுகள் என்று எதையும் நாம் கவகத்தில் கொள்ளக்கூடாது. என்றார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்கவேண்டும் என்று வலியுறுத்திய போது, ஐக்கிய தேசியக் கட்சி அதனை ஒருபோதும் ஆதரிக்காது என்று அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளராக சமன் ரத்நாயக்க

கொழும்பு, ஒக். 17

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக, சமன் சிறி ரத்நாயக்கவை நியமிப்பதற்கு, அரசமைப்புச் சபை அனுமதி அளித்துள்ளது. அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் இந்த நியம னத்துக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாக, சபாநாயகர் செயலகம் தெரிவித்துள்ளது.

சமன் சிறி ரத்நாயக்க மேலதிக தேர்தல்கள் ஆணையாளராக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. (ஒ,5)

## கோத்தபாயவுக்கு ஆதரவு முரளியின் நிலைப்பாடு இதுவே

### கூறுகிறார் மகிந்தானந்த



கொழும்பு, ஒக். 17

கோத்தபாயவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றே இலங்கை அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் கூறியதாக மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து, முரளி அரசியலில் களமிறங்கவுள்ளதாக வெளிவரும் செய்திகளின் எந்தவொரு உண்மையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'இலங்கை அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் ஒருபோதும் அரசியலுக்கு வரமாட்டார். அரச தலைவர் தேர்தலில் கோத்தபாயவுக்கு ஆதரவளிக்க வேண்டும். இலங்கை அபிவிருத்தியடைய வேண்டுமென்றால், கோத்தபாய போன்று ஒருவர் எமது நாட்டுக்குத் தலைவராக வேண்டும் என்றே அவர் கூறினார், என்றார். (ஒ,5)

## எவர் பதவிக்கு வந்தாலும்

# மக்கள், இயற்கை மீதான அடக்குமுறை தொடரும்!

### புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறிக்கை

கொழும்பு, ஒக். 17

இலங்கையின் நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவிக்கு, ஆளும் வர்க்கக் கட்சிகளில் இருந்து அதிகார நாற்காலிக்கு வருவதற்கான போட்டியே அரச தலைவர் தேர்தல். இந்தப் பதவிக்கு யார் வந்தாலும் நாட்டின் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் மோசமடைந்து காணப்படும் நெருக்கடி மிக்க வாழ்க்கை நிலைமைகள் மாறப்போவதில்லை - என்று தெரிவித்துள்ளது மாக்சிச லெனினிசக் கட்சி.

இது தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில்மேலும்குறிப்பிட்டுள்ளதாவது. இந்தத் தேர்தலின் முடிவுகளை ஊகிப்பது கடினமல்ல. இதில் வெல்லப்போவது ஆளும் வர்க்கமே. தோற்கப்போவது நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும்தான் என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

இதனையே கடந்த 41 ஆண்டுகால நிறைவேற்று அதிகார அரச தலைவர் ஆட்சிமுறையில் மக்கள் கண்டு வந்துள்ளனர். எனவே, மக்களின் பணத்தில் 500 கோடி ரூபாக்கு மேல் செலவிட்டு நடத்தப்படும் இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் எந்த அரச தலைவராலும் நாடும் மக்களும் எதிர்நோக்கும் எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என்பதே உண்மையாகும். அதனால் நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும், குறிப்பாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் தேசிய இனங்களும் இந்தத் தேர்தலில் அக்கறைப்படுவதிலும் ஆர்வம்கொள்வதிலும் எவ்வித அர்த்தமும் இருக்கமுடியாது.

வாக்களிப்புக்கும் அரச தலைவர் தேர்தலுக்கும் அப்பாலான, மக்களரசியலோடும் வெகுஜனப் போராட்டங்களோடும் மக்கள் தம்மை இணைத்துக்கொள்வதே உண்மையான மாற்றத்துக்கான வழிமுறையாகும், என்பதே புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் நிலைப்பாடாகும்.

கடந்த 41 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையும் தனியார்மயப்படுத்தலும் அந்நியப் பொருள்களின் இறக்குமதியும் பல்தேசிய கம்பனிகளின் வருகையும் நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை நாசம் செய்துள்ளன. இவற்றால் ஏற்றுமதி வீழ்ச்சி அடைந்து, இறக்குமதியும் நுகர்வும் அதிகரித்து, நாடு கடனில் மூழ்கியுள்ளது. இக்கடனால் இலங்கைக் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய்களுக்குக் கடனாளிகளாக உள்ளனர்.

எவர் பதவிக்கு வந்தாலும் மக்கள் மீதானதும் இயற்கைச் சூழல் மீதானதுமான அடக்குமுறைகளும் சுரண்டலும் தொடரத்தான் போகின்றன. அவற்றுக்கு எதிராகப் போராடும் மக்களோடு இணைந்து நிற்பதும், ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடுவதுமே உண்மையான மாற்றத்துக்கான வழிமுறையாகும்.

எனவே, தேர்தல் பரபரப்புக்களிலும், ஆளும் வர்க்கக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளிலும் கவனத்தையும் நம்பிக்கையையும் வைத்து ஏமாறாமல், உண்மையான மாற்றத்துக்கும், மக்கள் அதிகாரத்தை இந்நாட்டில் நிலை நிறுத்துவதற்குமாக தேர்தலுக்கு வெளியே நிகழும் தொடர்ச்சியான மக்கள் அரசியல் வேலைத்திட்டங்களை ஆதரித்து, புரட்சிகர இடதுசாரி சக்திகளோடு தம்மை இணைத்துக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும் என எமது கட்சி அழைப்பு விடுக்கிறது - என்றுள்ளது. (ம)

## தேர்தல் அலுவலகம் தீவகத்தில் திறப்பு

ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் அலுவலகம் யாழ்ப்பாணம் தீவகத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது தீவகம் வேலணை துறையூர்பகுதியில்இடம்பெற்றது. நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவா ளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## சு.க. அமைப்பாளர்கள் சஜித்துடன் இணைவு

கொழும்பு, ஒக். 17

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே இவ்வாறு ஆதரவு வழங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தலைமையிலான சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் சிலரே சஜித் பிரேமதாசவுடன் இணைந்து ஆதரவு வழங்கியுள்ளனர். (ஒ,5)

# தபால்மூல வாக்களிப்பு

## 78,403 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

அரச தலைவர் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 78 ஆயிரத்து 403 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 6 இலட்சத்து 39 ஆயிரத்து 515 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தபால்மூலம்வாக்களிப்பதற்கு 7 இலட்சத்து 17 ஆயிரத்து 918 விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட்டன.

இதேவேளை, அரச நிறுவனங்கள் மற்றும் இராணுவத்தில் சேவையாற்றுவோர் எதிர்வரும் 31ஆம் திகதி மற்றும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியும் தபால் மூலம் வாக்களிக்க முடியும். மாவட்ட செயலகங்கள், தேர்தல் செயலகங்கள் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றுவோர் எதிர்வரும் 4ஆம் திகதி அரச தலைவர் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்க முடியும்.

இந்தத் தினங்களில் தபால் மூலம் வாக்களிக்க முடியாதவர்களுக்கு எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி வாக்களிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போர்க் குற்றங்கள்...

உதயன் செய்தியாளர்களுக்கு நேற்று மாலை வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர். தலைமை அமைச்சர் ரணிலுடனான செவ்வி கேள்வி - பதில் வடிவில் இங்கு தரப்படுகின்றது.

**கேள்வி:** கோத்தபாய ராஜபக்ச ஒருவேளை ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வது என்கிற அச்சம் இங்கே எழுந்துள்ளது. அத்தகைய நிலை ஒன்று வந்தால் என்ன செய்வது?

**பதில்:** கோத்தபாய ராஜபக்ச அரசதலைவராக வரக்கூடாது என்பதனை நீங்கள் உறுதி செய்வதுதான் உங்கள் பணியாக இருக்கவேண்டும். உங்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் இந்த கேள்வி இருக்கிறது. நாங்கள் எல்லோரும் இதற்காகத் தான் ஒன்றிணைந்துள்ளோம். இது உங்களுக்கு மட்டுமுள்ள பிரச்சினை அல்ல.

**கேள்வி:** எங்களுக்கு எதைத் தரப்போகிறீர்கள்?

**பதில்:** இலங்கையின் குடிமக்களாக பத்திரிகையாளர்களுக்கான சுதந்திரத்தை வழங்கியுள்ளோம். இது ஒரு சுதந்திரமான சமூகம். நாம் சுதந்திரமாக வாழ்கிறோம். உங்கள் கேள்வி நான் ஒரு பத்திரிகையாளனாக எதைப் பெறப்போகின்றேன் என்பது அல்ல, யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒருவனாக, ஒரு தமிழராக எதைப் பெறப் போகின்றேன் என்பதைத்தான் நீங்கள் கேட்கிறீர்கள்.

**கேள்வி:** பத்திரிகையாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாக 2015ஆம் ஆண்டில்கூட நீங்கள் இதுபோன்ற வாக்குறுதிகளை வழங்கினீர்கள். ஆனால், 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் உதயன் மட்டும் எதிர்கொண்ட 30க்கும் மேற்பட்ட அடக்குமுறைச் சம்பவங்களில் ஒன்றுகூட உங்கள் ஆட்சியில் மீள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லையே! குற்றவாளிகள் எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. அப்படியிருக்கும்போது பத்திரிகையாளர்களான எமக்குச் சுதந்திரத்தைத் தந்ததாக எப்படி நீங்கள் கூறமுடியும்?

**பதில்:** எனக்குத் தெரிந்த வரையில் உங்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக அரச தலைவரிடம் கொண்டு செல்லப்பட்டது. சிறப்புச் செயலணி ஒன்று இது தொடர்பான விசாரணைக்கு நியமிக்கப்பட்டது. அமைச்சரவை உபகுழு ஒன்று அந்தச் செயலணியிடம் இருந்து அறிக்கையைப் பெற்றது (இது நீண்ட நாள்களுக்கு முன்னர் நடந்தது). அது விசாரணைக்காக வழங்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இந்த விடயத்தில் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சில சம்பவங்களில் சில தகவல்கள் போதாமலிருந்தன.

**கேள்வி:** உதயனைப் பொறுத்தவரை 2006ஆம் ஆண்டு படுகொலைகள், 2011ஆம் ஆண்டு எமது செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் தாக்கப்பட்டமை போன்ற சில சம்பவங்களில் குற்றவாளிகளை இலகுவில் கண்டறியக்கூடிய சூழல் இருந்தும் உங்கள் ஆட்சியிலும் அந்த வழக்குகள் ஏன் மீள விசாரிக்கப்படவில்லை?

**பதில்:** பொலிஸார் ஒத்துழைக்காமை பல இடங்களிலும் நடக்கின்றது. (சம்பவங்கள் குறித்து விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். கேள்விக்குத் தெளிவான பதிலை வழங்கவில்லை)

**கேள்வி :** தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் 2004ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பேச்சுக்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வுக்கு இணங்கி வந்தது. ஆனால், இப்போது அதே கூட்டாட்சி (சமஷ்டி) என்கிற சொல்லைப் பயன்படுத்தி ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்குத் தயங்குவதற்கான காரணம் என்ன?

**பதில்:** அப்போது கூட்டாட்சி தொடர்பான பேச்சு நடந்தது உண்மைதான். அதன் பின்னர் நாட்டுக்கு எந்தவிதத் தீங்கும் இழைக்காத, எந்தவிதப் பிரிவினையையும் கொண்டுவராத தீர்வை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதுதான் நோக்கமாக இருந்தது.

**கேள்வி:** அப்படியென்றால் கூட்டாட்சி (சமஷ்டி) என்பது நாட்டைப் பிரிவினைக்குள்ளாக்கும் என்றா கருதுகிறீர்கள்?

**பதில்:** இல்லை. அந்தப் பொறிமுறை நாட்டைப் பிரிவினைக்குள்ளாக்காது. அரசமைப்புச் சபையில் அது தொடர்பான எல்லா அம்சங்களையும் நாம் ஆராய்ந்தோம். அதில் அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட சொல் 'ஏக்கிய'. நைஜீரியா போன்ற நாடுகளில் கூட்டாட்சி பிரிவினைக்கு வழிவிட்டுள்ளது. மற்றொருபுறத்தில் ஐக்கிய ராஜ்ஜியம் (பிரிட்டன்) போன்ற நாடுகளில் ஒற்றையாட்சியின் கீழும் ஸ்கொட்லான்ட், நெதர்லான்ட் போன்ற நாடுகளில் பிரிந்து செல்லவும் வழி விடப்பட்டுள்ளது. எனவே, இறுதியில் எங்களில் சிலர் 'ஏக்கிய' என்ற சொல்தான் தமிழ் மற்றும் சிங்களத்தில் பொருத்தமானதாக இருக்கும் என்று கண்டறிந்தோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்குமே உரியது. கருத்துக்கணிப்பு ஒன்றும் நடத்தப்படவேண்டும். அரசமைப்புச் சட்டத்தின்படி அதிகாரம் அமைச்சரவைக்கும் மத்திய அரசுக்கும் மாகாண நிர்வாகத்துக்கும் வழங்கப்பட வேண்டும். அதிகாரத்தின் ஒரு பகுதி அதிகாரத்தின் இன்னொரு பகுதியுடன் மோதுவதைத் தவித்துக்கொள்ளவேண்டும். இதில் ஏற்படும் பிரச்சினைகளை அரசியல் அமைப்பு நீதிமன்றத்தில் முறையிட்டு தீர்வினைக் கண்டுகொள்ள முடியும் என்று எங்களில் சிலர் கருதினோம். மாகாண நிர்வாகமோ மத்திய அரசோ அல்லது சாதாரண குடிமகனோகூட அந்த நீதிமன்றத்தை நாடமுடியும்.

எனவே வார்த்தைகளில் தொங்கிக் கொண்டிராமல் இதுபோன்ற தீர்வுகளைக் காண்பதே எமது நோக்கமாக இருந்தது. ஆங்கில வார்த்தைகள் இப்போது பல அர்த்தங்களைக் கொண்டிருப்பதால், எமக்கு என்ன தேவையோ அவற்றை ஒன்று சேர்த்து பெற்றுக்கொள்வதே சிறந்தது. அத்தோடு மாகாணங்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான செனட் ஒன்று தொடர்பாகவும் நாம் ஆராய்ந்துள்ளோம். மொத்தத்தில் எமக்கு புதியதொரு பொறிமுறையே வேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

**கேள்வி:** நீங்கள் கண்டறிந்த அந்த 'ஏக்கிய' என்ற சொல்லின் உண்மையான பொருள் என்ன?

**பதில்:** ஒன்று! நாம் எல்லோரும் ஒன்று என்பதுதான் அதன் பொருள்.

**கேள்வி:** ஆனால், பல பொதுக் கூட்டங்களில் அதன் அர்த்தம் ஒற்றையாட்சி (யுனிட்டறி ஸ்டேட்ஸ்) என்பதாக நீங்கள் கூறியிருக்கிறீர்களே?

**பதில்:** சிலர் அப்படிப் பொருள் கொள்வர். 'ஏக்கிய' என்பது ஒன்று என்று பொருள் கொள்ளப்படும் அதேநேரம் வேறுவிதமாகவும் பொருள்கொள்ளப்படலாம். நான் ஏற்கனவே சொன்னதுபோல!

**பதில்:** அதேநேரத்தில் அரசமைப்பை நாடாளுமன்றமும் செனட்டும்தான் நிறைவேற்ற வேண்டும். அது மக்களின் கருத்துக் கணிப்பு மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும். வேறு எந்தவொரு அமைப்பாலும் அதனைச் செய்ய முடியாது. நாடாளுமன்றத்தால் மட்டுமேகூட அதைச் செய்யமுடியாது. எல்லா அதிகாரங்களும் நாடாளுமன்றத்தில் இருந்துதான் வருகின்றன. அவற்றில் சில மத்திய அரசுக்கும் மாநில நிர்வாகத்திற்கும் வழங்கப்படுகின்றன. மாகாணத்தோடு தொடர்புபட்ட விடங்கள் மாகாண நிர்வாகத்தால் மேம்படுத்தப்படும். மத்திய அரசோடு தொடர்புபட்ட விடயங்கள் நாடாளுமன்றத்தால் மேம்படுத்தப்படும். அதுதான் நாம் கருதும் பொறிமுறை. அதுதூன் நாங்கள் உண்மையில் கருதியது.

ஆனால், இங்கிலாந்தையும் வேறு சில நாடுகளையும் பார்த்த பின்னர் 'யுனிட்டறி' என்ற வார்த்தை தொடர்பில் புதிய விரிவாக்கங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். எனவே நாம் உருவாக்கிய இந்தப் பொறிமுறைதான் இங்கு பெரும்பாலான மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எம்மில் பலர் கருதினோம். அதேநேரம் 100 வீதம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.

**கேள்வி:** ஆனால், ஏக்கிய ராஜ்ஜிய மற்றும் ஒருமித்த நாடு என்கிற வார்த்தைகள் சிங்கள மக்களுக்கு ஒரு முகத்தையும் தமிழ் மக்களுக்கு மற்றொரு முகத்தையும் காட்டுவதற்கான ஏமாற்று என்று விமர்சிக்கப்படுகின்றதே?

**பதில்:** நாம் எதைச் சொன்னோமோ அது எழுத்தில் இருக்கின்றது. இங்கு பலருக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைப் புரிந்துகொள்ள முடியும். சிங்களவர்கள் மற்றைய இரு மொழிகளையும் தெரியாதவர்கள் அல்லது தமிழர்கள் மற்றைய இரு மொழிகளையும் தெரியாதவர்கள் என்கிற சூழலில் நாம் வாழவில்லை. சிலருக்கு மூன்று மொழிகளும்கூடத் தெரியும். எனவே நான் நினைக்கவில்லை நாம் அங்கே ஒரு முகமும் இங்கே ஒரு முகமும் காட்டமுடியும் என்று.

**கேள்வி:** அப்படியானால், ஏக்கிய என்பது ஒன்று என்பதை மட்டும்தான் குறிக்கும் யுனிட்டறி என்பதைக் குறிக்காது என்று உறுதியாகக் கூறமுடியுமா?

**பதில்:** ஆம்! ஏக்கிய என்றால் ஒன்றுதான். யுனிட்டறி என்பது ஒன்றைக் குறித்தால் அதற்கும் ஆம்தான். யுனிட்டறி என்பதற்கு வேறு அர்த்தமென்றால் இல்லை, ஏனெனில் இன்று ஆங்கிலேயர்கள் அதற்கு தாங்கள் விரும்பியபடி அர்த்தம் கற்பித்துக்கொண்டு செல்கிறார்கள். எனவே யுனிட்டறி என்பது ஒன்று என்பதைக் குறித்தால் ஏற்றுக்கொள்வோம். வேறு ஏதாவது அர்த்தத்தை எடுத்துக்கொண்டால் நாம் ஏற்கமாட்டோம். அதுபோன்றே கூட்டாட்சியும் பல விதங்களில் உள்ளது. சுவிஸ்சர்லாந்து வகையிலான கூட்டாட்சி முறையில் இந்தியாவால் இயங்க முடியாது. மத்திய அதிகார மையத்தை நோக்கியதாக இருப்பதாலேயே இந்தியாவில் செயற்படமுடிகின்றது.

**கேள்வி:** அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான வேட்பாளர் வெற்றி பெற்றால் புதிய அரசமைப்புத் தொடர்பான முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா?

**பதில்:** அரசதலைவர் தேர்தலில் வென்றால் மட்டும் இடைக்கால வரைவுத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியாது. அதைச் செய்வதற்கு நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறவேண்டும். தேர்தலில் எமக்கு 125 ஆசனங்களைத் தந்தால் மற்றக் கட்சிகளுடனும் சேர்ந்து இடைக்கால வரைபுத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

**கேள்வி:** ஒரு கட்சி தீர்வை முன்வைத்தால் மற்றொரு கட்சி அதனை எதிர்ப்பதுதான் இலங்கையின் வரலாறாக உள்ளது. அப்படியிருக்கையில், எதிர்வரும் தேர்தல்களின் முடிவுகள் எப்படியிருந்தபோதும், தீர்வு முயற்சிகள் தொடர்ந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை என்ன?

**பதில்:** எல்லாவற்றையும் எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்ல முடியாது. சிலர் ஏற்றுக்கொள்வார்கள். சிலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எப்படியிருந்தாலும் இறுதியில் இது தொடர்பில் முடிவெடுப்பவர்கள் மக்களே! அதற்காகத் தான் எமக்கு ஓர் உறுதியான அரசு தேவை. அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை முன்னெடுப்பதற்கு மட்டுமன்றி ஏனைய அபிவிருத்திகளை முன்னெடுப்பதிலும் பெரும்பான்மையானவர்களின் பங்களிப்புத் தேவை. இப்போது வரைக்கும் அது கிடைக்கவில்லை.

**கேள்வி:** ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உங்கள் அரசு இணங்கிக் கொண்ட தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்களைச் செய்து முடிக்கவில்லை. குறிப்பாகப் போர்க்குற்ற விசாரணைகள் தொடங்கப்படவில்லை. உங்கள் ஆட்சி முடிவுக்கு வரும் நிலையிலும் அவற்றை ஏன் செயற்படுத்தவில்லை?

**பதில்:** இப்போதும் பல வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. அவை நீதிமன்றங்களின் கைகளிலேயே உள்ளன. சில நேரம் விசாரணைகள் முடிய நீண்ட காலம் எடுக்கலாம். மகிந்தவின் காலத்திலேயே இந்த விடயங்கள் தொடங்கப்பட்டன. சாட்சிகள் இருந்தால் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

**கேள்வி:** நாம் சாதாரண வழக்குகளைப் பற்றிக் கேட்கவில்லை, போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஏன் தொடங்கப்படவில்லை என்றே கேட்கிறோம்?

**பதில்:** சாட்சிகள் இருந்தால் பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியிருப்பார்கள். நாம் இதுவரையில் செய்திருப்பவை என்று சொன்னால், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான செயலகம் ஒன்றை அமைத்திருக்கின்றோம். இழப்பீட்டுக்கான அலுவலகத்தையும் அமைத்திருக்கின்றோம். இதனுடாக சாட்சிகளும், ஆதாரங்களும் கிடைத்தால் பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பர். அதேநேரம் இது போன்ற வழக்குகள் தாமதமாகவதாகத் தெற்கிலும்எம்மீதுவிமர்சனங்கள்உள்ளன.

**கேள்வி:** ஆனால், போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காக பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளையும் கொண்ட கலப்பு நீதிமன்றங்களை உருவாக்குவதாக ஒத்துக்கொண்டிருந்தீர்களே?

**பதில்:** இல்லை, நாம் கலப்பு நீதிமன்றங்களைச் சொல்லவில்லை. ஓய்வு பெற்ற இலங்கை நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்களையே நாம் கருத்திலெடுத்தோம். இலங்கையின் சூழல்களைப் புரிந்து கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அதுதான் சரியானதாக இருக்கும்.




**கேள்வி:** பலாலியில் ஒரு பன்னாட்டு வானூர்தி நிலையத்தை உருவாக்கியதற்காக எமது நன்றிகள். அது யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தப் பெரிதும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், உங்கள் அரசுக்குப் பின்னரான காலத்திலும் இந்த நிலையம் இயங்குமா? பாதுகாப்பு போன்ற காரணங்களைக் காட்டி இது மூடப்பட்டுவிடக்கூடும் என்கிற அச்சம் நிலவுகிறதே? அப்படி நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதத்தைத் தருகிறீர்கள்?


**பதில்:** இது நாட்டின் மூன்றாவது பன்னாட்டு வானூர்தி நிலையமாகும். இந்த வானூர்தி நிலையத்தில் ஏ 320 விமானம் தரையிறங்கக் கூடியவாறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்ற அரசுகளும் இதனை உருவாக்குவதாகக் கதைத்தனர் ஆனால் அவர்களால் செய்ய முடியவில்லை. எமது அரசே இதனைச் செய்து முடித்தது.

**பதில்:** இப்பொழுது இந்தியாவிலிருந்து மட்டும் விமான சேவை நடத்தப்படும் எதிர்காலத்தில் ஏ- 320 விமானங்கள் டுபாயில் இருந்தும் விமான சேவைகள் நடாத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் சேவைகள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. யாழ்ப்பாணப் பொருளாதாரம் முன்னேறுவதனை நோக்கமாகக் கொண்டே இந்த விமானநிலையம் அமைக்கப்பட்டது. சுற்றுலாத்துறையும்மிகவேகமாகவளர்ச்சியடையும். பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டாலும் நிரந்தரமாக விமான நிலையம் மூடப்பட மாட்டாது என்பதனை என்னால் உறுதிபடக் கூற முடியும். இந்து சமூத்திரத்தின் ஒரு விமான நிலைய கட்டமைப்பாக இலங்கையை உருவாக்குவதே இந்த அரசின் கொள்கை ஆகும். யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு விமான சேவைகள் நடத்தப்படும்.

**கேள்வி:** மற்றொரு விடயம் வடக்கு இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பின்மை. இங்கிருக்கும் எல்லாப் பட்டதாரிகளுக்கும் அரசு வேலை வழங்க முடியாது. அப்படியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கும் வருகை தந்தார். அவரை, உதயன் குழுமத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் வரவேற்றார்.
உதயன் பத்திரிகை மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அது தொடர்பான ஆவணம் ஒன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

---

ருக்கும்போதும் பெரு நிறுவனங்களை உருவாக்குவது குறித்து ஏன் அரசு சிந்திக்கவில்லை?.

**பதில்:** சீமெந்து கூட்டுத்தாபனம் அமைந்துள்ள இடத்தை கைத்தொழில்பேட்டையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு வரிச் சலுகைகளை அழித்துள்ளோம். மிகக் குறுகிய காலத்தில் சுற்றுலாத்துறை மிக வேகமாக வளர்ச்சியடையும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. சுற்றுலாத்துறை வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கும். யாழ்ப்பாணத்தில் இன்னும் அதிகளவான விடுதிகள் அமைக்கப்பட வேண்டும். 4 நட்சத்திர விடுதிகள் 3 மட்டுமே யாழ்ப்பாணத்தில் உள்ளன. அவை போதாது.

**கேள்வி:** வடக்கு கிழக்கில் விகாரைகளின் உருவாக்கம் என்பது மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தைக் குலைப்பதாக உள்ளது. பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இந்த விடயத்தில் நாட்டின் தலைவர்கள் பொது மக்களுக்குக் குறிப்பாகச் சிங்கள மக்களுக்கு ஏன் உறுதியான ஒரு செய்தியை வழங்கத் தவறுகிறீர்கள்? இந்த விடயத்தை ஏன் மெல்லக் கடந்து செல்ல முயற்சிக்கிறீர்களா?

**பதில்:** இலங்கையில் மத சுதந்திரம் உள்ளது என்று நாம் சொல்லி வருகின்றோம். அதனைப் பின்பற்றுமாறு மக்களிடம் வலியுறுத்துகின்றோம். தொல்லியல் திணைக்களத்துக்குரிய இடங்கள் அதற்குரியதாகவே பேணப்பட வேண்டும். அவை எந்தத் தேவைகளுக்காகவும் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்க முடியாது.

**கேள்வி :** 2015ஆம் ஆண்டு நீங்கள் தேர்தலுக்காக வந்திருந்தபோது பல வாக்குறுதிகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கினீர்கள். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் மிக முக்கியமாகப் புதிய அரசமைப்பு என்பவற்றைநிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்தீர்கள். அவற்றில் சிலவற்றை நிறைவேற்றினீர்கள். எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லமுடியாதுதான். ஆனால் தமிழர்களின் பார்வையில் நிறைவேற்றப்பட்டவை போதுமானவையல்ல. அது பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** அதிகமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. 2, 3 இடங்களில் மட்டுமே பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் ஒன்று மன்னார். பெரியளவிலான பிரச்சினை இருப்பது வலிகாமம் வடக்கில். படையினர் எவ்வளவு காணியை வைத்திருப்பது எவ்வளவை விடுவிப்பது என்பது தொடர்பானது. இது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் விடயம். ஒவ்வொருவருடமும்சிலகாணிகள்விடுவிக்கப்படுகின்றன. ஆனால் மெதுவாகத்தான் நடக்கிறது. அடுத்துவரும் ஓரிரு வருடங்களிலும் விடுவிப்பு தொடரும். பாதுகாப்புக்காகச் சில நிலங்கள் தேவைப்படும். எஞ்சியவற்றை விடுவிப்போம்.

(ம,ஒ,எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிரங்காவை...

பேச்சாளர் நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

இதன்படி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமரசிறி குமார சேனாரத்ன, செட்டிக்குளம் முன்னாள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுகத் றொஹான் சஞ்சீவ, பொலிஸ் அத்தியட்சகர்களான ஹரிஸ் சந்திர பண்டார மற்றும் அஜித் பிரியதர்ஷன ஹேரத் ஆகியோரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறீரங்காவுக்கு எதிராக சட்டக்கோவை 298 கீழ் வழக்கு பதிவு செய்யப்படவுள்ளதாகவும் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில், ஜயமினி புஸ்பகுமார என்ற பொலிஸ் அலுவலர் உயிரிழந்தார். குறித்த பொலிஸ் அலுவலர் சிறிரங்காவின் பாதுகாப்பு அலுவராகக் கடமையாற்றியிருந்தார். சிறிரங்கா உள்ளிட்ட சிலர் மன்னார் நோக்கிப் பயணித்த போது, செட்டிக்குளம் மருத்துவமனைக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் குறித்த பொலிஸ் அலுவலர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த பொலிஸ் அலுவலரே வாகனத்தைச் செலுத்தியதாக பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிறிரங்காவே வாகனத்தைச் செலுத்தியதாகவும் பொலிஸ் அலுவலர் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கோரிக்கைகளை...

ஹொரணையில் நேற்று நடைபெற்ற பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலில் தமது ஆதரவு யாருக்கு என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் முழுமையான கவனம் செலுத்தி வருகின்றன. ஐந்து முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து 13 பிரதான நிபந்தனைகளை உள்ளடக்கிய கோவையை உருவாக்கியுள்ளன.

இந்த நிபந்தனைகள் தொடர்பில் பிரதான 3 அரச தலைவர் வேட்பாளர்களிடமும் பேச்சுகளை விரைவாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகள் தொடர்பில் ஒருபோதும் கவனம் செலுத்தமாட்டார் - என்றார். (ம-22)

## ராஜபக்சாக்களின்...

உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

'நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை சஜித் பிரேமதாஸ என்னிடம் ஒப்படைத்திருக்கின்றார். அவருடைய நம்பிக்கையைப் பூர்த்தி செய்யும் விதமாக எவ்வித இன, மத, பிரதேச பேதங்களுமின்றி நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவேன்' எனவும் அவர் உறுதியளித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி நேற்று வாரியபொல நகரில் ஏற்பாடு செய்திருந்த பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மகிந்த ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவாகுவதற்கு முன்னர் அவருக்கு மிகச் சொற்ப நண்பர்களே இருந்தனர். அப்போது நானும் அவருடைய சிறந்த நண்பர். ஒருநாள் அவர், 'தற்போது என்னுடைய சட்டைப்பையில் இருக்கின்ற இரண்டு ரூபா பல மாதங்களின் பின்னரும் அப்படியே இருக்கும்' என்று கூறினார். இதிலிருந்து அவர் அரசியல் ஊடாக மக்களின் பணத்திலேயே வாழ்க்கை நடத்தியிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது. இத்தகைய நபர்களிடமா மீண்டும் நாட்டைக் கையளிக்கப் போகின்றீர்கள்?

அடுத்ததாக தேசிய பாதுகாப்பைப் பற்றிப் பேசுகின்ற கோத்தபாய ராஜபக்ச 15 வருடங்கள் அமெரிக்காவில் வசித்தார். ஒருவர் 20 வருடங்கள் இராணுவத்தில் சேவையாற்றினால் அவர் ஓய்வூதியத்தைப் பெற்று ஓய்வுபெற முடியும். ஆனால், கோத்தபாய ராஜபக்ச இந்த விதிமுறையைப் பின்பற்றவில்லை. அவர் இன்றும் வெட்கமில்லாமல் எமது அரசு வழங்கும் இராணுவத்துக்கான ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்கின்றார்.

மகிந்த குடும்பத்தினர் இந்த நாட்டிலிருந்து கொள்ளையடிப்பதை சுனாமியின் போதிலிருந்து ஆரம்பித்தனர். தமது பெற்றோருக்கு நினைவு மண்டபம் அமைப்பதற்காகக் கொள்ளை அடித்தவர்கள் மகிந்த குடும்பத்தைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? இத்தகையவர்களிடம் இருந்து மக்கள் எதனை எதிர்பார்க்க முடியும்?

அதேபோன்று கடந்த ஆட்சியில் கொழும்பைச் சுத்தப்படுத்துவதற்கு அபான்ஸ் ஊழியர்கள் 3000 பேர் பணிபுரிகின்றனர் எனவும், அவர்களுக்கு 35 ஆயிரம் ரூபா வீதம் செலுத்தப்படுகின்றது எனவும் கோத்தபாய ராஜபக்ச காண்பித்தார். ஆனால், உண்மையில் 1,500 ஊழியர்களே பணியாற்றியுள்ளனர். எனவே, எஞ்சிய 1,500 பேருக்காக வழங்கப்பட்ட மாதாந்த ஊதியம் தலா 35,000 ரூபா கோத்தபாயவால் மோசடி செய்யப்பட்டிருக்கின்றது' - என்றார். (ம-22)

## கோத்தாவுக்கு...

டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களே இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு எமது போராட்டங்களை மழுங்கடிக்கும் நோக்குடன் பல கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. நாம் போரில் உயிரிழந்த எமது பிள்ளைகளைக் கேட்கவில்லை. போர் முடிந்த பின்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இராணுவத்திடம் கையளித்த பிள்ளைகளையே கேட்கின்றோம். மறுவாழ்வுக்கென அவர்களின் கைகளில் ஒப்படைத்த பிள்ளைகளையே கேட்கின்றோம்.

ஒவ்வொருவரும் தாம் பதவிக்கு வருவதற்காக திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். எமது பிள்ளைகள் இல்லை என்றால் 2010ஆம் ஆண்டு பரணகம ஆணைக்குழு வவுனியாவுக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட போது எமது பிள்ளைகள் இல்லை என்று கூறியிருக்க வேண்டும்.

எம்மிடம் முழுமையான ஆதாரங்கள் இருக்கின்றன. எமது பிள்ளைகள் இல்லை என்று யாரும் கூற முடியாது. இது தொடர்பாக பன்னாட்டு விசாரணை அவசியம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (ஐ-110,ரி4)

## இராணுவத்...

ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய.

கொழும்பில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகங்கள் தர்மத்தின்படி செயற்பட வேண்டும். தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளில் அவர்கள் பக்கச்சார்பின்றி ஈடுபட வேண்டும். இலத்திரனியல் ஊடகங்கள் மிகவும் பொறுப்பாக இருத்தல் அவசியம். அரச ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எல்லையை மீறி நடந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதை ஓர் இறுதி எச்சரிக்கையாக குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் விடயத்தில் நாங்கள் சமமாகச் செயற்படுகிறோம். எங்களுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். ஊடகங்கள் முறையாக நடக்காவிட்டால் எம் மீது வழக்கு தொடுக்கப்படுமென சிலர் கூறுகின்றனர். அப்படி செய்யட்டும். சட்ட ஒழுங்கு விதிகளின்படி நாங்கள் அதனை எதிர்கொள்வோம். தவறான செய்திகளை வெளியிட்டால் பத்திரிகைகள் உரிமையாளர் ஆசிரியர் அல்லது பொறுப்பாளர்கள் அதற்கான விளைவை எதிர்கொள்ள வேண்டும். பாதிக்கப்படுவோர் நீதிமன்றம் செல்லலாம்.

தேர்தல் சட்ட திட்டங்களை ஊடகங்கள் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். வேட்பாளர்களுக்கு எப்படியான பாதுகாப்பை வழங்குவது என்பது குறித்து புலனாய்வுப் பிரிவினரே தீர்மானிக்க வேண்டும். வேட்பாளர்களுக்கு இருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கருத்தில்கொண்டு அவர்கள் அந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறி செய்யப்படும் வேலைகள் குறிப்பாக அரச இயந்திரத்தை பயன்படுத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. நிவாரணங்களை வழங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளது. அரச ஊழியர்கள் கடமை நேரத்தில் தேர்தல் வேலைகளுக்கு செல்வது, அரச வாகனங்களை பயன்படுத்துவது பல இடங்களில் கண்டறியப்பட்டது. இப்படி செய்யவேண்டாமென நான் கூற விரும்புகிறேன். உரிய நேரத்தில் அவர்களுக்கு எப்படியோ தண்டனை கிடைக்கும். நீதிமன்றம் சென்றால் சிறைத்தண்டனையும் அபராதமும் அவர்கள் மீது விதிக்கப்படும். தேர்தல் பரப்புரை விளம்பரத்தில் தற்போதைய இராணுவத்தளபதி பயன்படுத்தப்பட்டமை தவறானது. அந்தக் கட்சி அதிகாரிகளுக்கு இதனை அறிவித்துள்ளேன். அரச தலைவரின் செயலர், பாதுகாப்பு அமைச்சைச் சார்ந்தவர்கள் ஆகியோரிடம் விளக்கம் கேட்டுள்ளேன்- என்றார். (ம)

## யாழ்...

நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியது.

யாழ் குடாநாட்டிற்கான குடிதண்ணீர்த் திட்டங்கள் பல முன்மொழியப்பட்ட போதும், இறுதியில் ஆளுநர் மாற்று குடிதண்ணீர்த் திட்டமென்ற பெயரில் வல்லை குடிதண்ணீர்த் திட்டத்தை உருவாக்கினார். வல்லை நீரேரியில் மழை நீரை சேமித்து, அருகில் அமைக்கப்படும் யாழ்ப்பாணத்தின் பெரிய குளத்துக்குள் தண்ணீரைச் சேமித்து, குடாநாட்டு நீர் விநியோகத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

'யாழ்ப்பாணத்துக்கான ஒரு நதி' என்ற தலைப்பிலான இந்த திட்டத்தின் மூலம் வடமராட்சியை சுற்றியுள்ள பகுதிகளின் உவர்த்தன்மையை குறைத்து, விவசாய உற்பத்தி அதகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவலி அபிவிருத்தி அமைச்சரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதற்கான அமைச்சரவை பத்திரத்தைத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினைத் தீர்வுக்காக தயாரிக்கப்பட்டுள்ள மாற்றுக் குடிதண்ணீர்த் திட்டப் பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளார். கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்து இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவடைய வேண்டிய இந்தத் திட்டம் வனஉயிரிகள் திணைக்களத்தின் முட்டுக் கட்டையால் ஓராண்டு தாமதமாக ஆரம்பிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் குடிதண்ணீர்ப் பிரச்சினை நீண்ட காலமாக பேசப்பட்டு வருகின்றது. அதற்குப் பல்வேறு தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன. இரணைமடுவிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவருதல், வடமராட்சி கிழக்கிலிருந்து கடல் நீரை நன்னீராக்குதல் என்று பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டபோதும், அதிலுள்ள அரசியல் இழுபறிகள் காரணமாக எந்தவொரு திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் 'மாற்றுக் குடிநீர்த் திட்டம்' என்ற பெயரில், வடமராட்சி நீரேரியில் உள்ள நீரை குளத்தில் தேக்கி விநியோகிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது.

சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் ஆறாவது மைல் கல்லுக்கும் ஒன்பதாவது மைல் கல்லுக்கும் இடையிலான பிரதேசத்தில், உப்பாறு நீரேரியில், கப்பூதுவெளி அந்தணத் திடல் பகுதியில் மிகப்பெரிய குளம் அமைக்கப்படவுள்ளது. இந்தக் குளம் 6 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாகவும், 7.5 மீற்றர் உயரம் உடையதாகவும், குளத்தின் அணைக்கட்டு 4 மீற்றர் அகலம் உடையதாகவும் இருக்கும்.

வடமராட்சி நீரேரியிலிருந்து மழை காலத்தில் கடலுக்குச் செல்லும் நீர், சாவகச்சேரி பருத்தித்துறை வீதிக்கும், வல்லை வெளிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வடமராட்சி நீரேரியில், அணை அமைக்கப்பட்டு புதிய துருசு நிறுவப்பட்டு அங்கு தடுக்கப்பட்டு, குழாய்கள் மூலமாக அந்தணத் திடல் பகுதியிலுள்ள குளத்துக்கு நீர் இறைக்கப்படும்.

குளத்தில் 4.5 மீற்றர் உயரத்துக்கே இயந்திரம் ஊடாக இறைக்கப்பட்டு நீர் தேக்கப்படும். குளத்துக்கு நேரடியாகக் கிடைக்கும் மழை நீரும் அதனுள் தேக்கப்படும். குளத்தில் சராசரியாக ஆண்டுக்கு 24 எம்.சி.எம். நீர் சேமித்து வைக்கப்படும்.

வடமராட்சி நீரேரியில் மழை நீர் சேகரிக்கப்பட்டு எதிர்காலத்தில் அந்த நீரேரி நன்னீர் நீரேரியாக மாறும் வகையில் திட்டம் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனால் நாகர்கோவில் பிரதேசத்தில் மங்குரோஸ் தாவரங்கள் அழிவடையும் எனத் தெரிவித்து வனஉயிரிகள் திணைக்களம் அனுமதி வழங்காமல் இழுத்தடித்திருந்தது. தற்போது நீரேரி ஊடாக கடலுக்குச் செல்லும் மேலதிக நீரையே குளத்துக்கு இறைக்கும் வகையில் திட்டம் மாற்றப்பட்டுள்ளது. இதனால் நீரேரியில் உள்ள நீர் வழமைபோன்றே இருக்கும்.

இந்தத் திட்டத்துக்கான அலுவலகம் சரசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை எதிர்வரும் 29ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்திஷ்கள் மீதான தாக்குதல் விவகாரத்தில்

# அமெ.வின் கோரிக்கையை நிராகரித்தது துருக்கி!

அங்காரா,ஒக்.17
சிரியாவின் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி மேற்கொண்டு வருகின்ற தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்த நிலையில் துருக்கி அதை நிராகரித்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
துருக்கி - சிரியா எல்லையை ஒட்டிய சிரியாவின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நிலை கொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் தமது எல்லையோரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்று கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்திவருகிறது துருக்கி. குர்திஷ் ஆயுததாரிகளுக்கு ஆதரவாக அங்கிருந்து செயற்பட்ட தனது படைகளை அமெரிக்கா திரும்பப் பெற்றவுடன் துருக்கி தாக்குதலை ஆரம்பித்தது. துருக்கியின் இந்தத் தாக்குதல் காரணமாக சுமார் 4 லட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர். இதில் 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் குழந்தைகள். துருக்கியின் தாக்குதலால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டது. சிரியாவில், துருக்கி நடத்தும் தாக்குதலை நிறுத்துமாறு அமெரிக்கா வலியுறுத்தியது. அங்கு போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறும் அழைப்பு விடுத்தது. அதைத் துருக்கி நிராகரித்துள்ளது.



சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது தாக்குதல் நடத்துவதைத் துருக்கி நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா, ரஷ்யா, ஈரான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# துருக்கியின் தாக்குதலை தடுப்போம்

## ரஷ்யா தெரிவிப்பு

மொஸ்கோ,ஒக்.17
சிரியாவின் வடக்குப் பகுதியில் துருக்கி நடத்தி வருகின்ற இராணுவ தாக்குதல்களையும், துருக்கிக்கும், சிரியாவுக்கும் இடையில் மோதல்கள் நடப்பதையும் தடுக்கப் போவதாக ரஷ்யா தெரிவித்தது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை அனுமதிக்கக் கூடாது முடியாது என்று சிரியாவுக்கான ரஷ்யாவின் சிறப்புத் தூதர் அலெக்ஸாண்டர் லாவ்ரென்ட்யேவ்ப் தெரிவித்தார்.

**பின்னணி**
சிரியாவின் வடக்குப் பகுதியில் செல்வாக்கு செலுத்தி வருகின்ற குர்திஷ் ஆயுதக் குழுவை அழித்து அந்தப் பகுதியைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் துருக்கி இந்த தாக்குதலைத் தொடுக்கிறது. ஐ.எஸ். படையினரை அழிக்கும் போரில் குர்திஷ் படையினர் உதவியைப் பெற்றுவந்த அமெரிக்கா இந்த தாக்குதலுக்கு முன்னதாகத் தனது படையைத் திரும்பப் பெற்றிருந்தது. இந்த நிலையில் துருக்கியின் தாக்குதல்களை எதிர்ப்பதற்காகச் சிரியாவின் அரச படைகளுடன் சமரசம் செய்து கொள்வதற்கு முயல்கிறது குர்திஷ் குழு.



சிரியாவிலுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது தாக்குதல் தொடுத்து வருகின்றனர் துருக்கியச் சிப்பாய்கள். குர்திஷ்களுக்கு ஆதரவளித்துவந்த அமெரிக்கப் படையினர் அங்கிருந்து வெளியேறியதும் இந்தத் தாக்குதல்கள் ஆரம்பித்தன. அமெரிக்கத் தயாரிப்பான எம் 60 டாங்கிகளுடன் சிரியாவின் வட பகுதியில் மன்பிஜ் நகருக்கு வடக்கே உள்ள துக்கார் நகரின் வழியாகச் செல்கின்றனர் துருக்கியச் சிப்பாய்கள்.

# துருக்கியின் தாக்குதலில் 595 குர்திஷ்கள் சாவு!

வோஷிங்டன்,ஒக்.17
சிரியாவில் உள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி இராணுவம் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 595 பேர் கொல்லப்பட்டுள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த பகுதியில் குர்திஷ் ஆயுததாரிகளுடன் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படைகளை திரும்பப்பெறுவதாக ட்ரம்ப் அறிவித்ததையடுத்து துருக்கி சிரியாவுக்குள் அத்துமீறி நுழைந்து குர்திஷ்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. துருக்கி நடத்திவருகின்ற இந்தத் தாக்குதலில் இதுவரை 595 குர்திஷ் ஆயுததாரிகள் கொல்லப்பட்டதாக துருக்கி இராணுவம் தெரிவித்தது.

இதற்கிடையில், தங்கள் நாட்டு எல்லைக்குள் புகுந்து குர்திஷ்கள் மீது துருக்கி நடத்தும் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாகச் சிரிய அரச படைகள் எல்லைப் பகுதிக்கு விரைந்துள்ளன. இதனால் சிரியா மற்றும் துருக்கி இடையே போர்ப் பதற்றம் நிலவி வருகிறது.

# துருக்கியை ஆதரிக்கிறது கட்டார்!

டோஹா,ஒக்.17
சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது தாக்குதல் நடத்தும் விடயத்தில் துருக்கிக்குப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இதற்கு மாறாகத் துருக்கிக்குக் கட்டார் ஆதரவு தெரிவித்தது.

துருக்கி எல்லையையொட்டிய சிரியாவிலுள்ள குர்திஷ் ஆயுததாரிகளால் தமது எல்லையோரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்திவருகிறது துருக்கி. துருக்கி மேற்கொண்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கைக்குப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. துருக்கி மீது தடை விதித்தது அமெரிக்கா. இதுகுறித்துக் கட்டார் அயலுறவுத்துறை அமைச்சர் முகமது பின் அப்துல் ரஹ்மான் தெரிவிக்கும்போது, சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது தாக்குதல் நடத்த வேண்டிய தேவை துருக்கிக்கு உள்ளது. அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதால் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் துருக்கிக்கு உண்டு. இது துருக்கியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை -என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொங்கொங்கில் 2,200 பேர் கைது

ஹொங்கொங், ஒக்.17

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இன்றுவரை 2ஆயிரத்து 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லொம் தெரிவித்தார்.




இதுகுறித்துக் கேரி லொம் மேலும் தெரிவித்ததாவது:

ஹொங்கொங்கில் கடந்த 4 மாதங்களில் கிட்டத்தட்ட 400 வரையிலான போராட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் போராட்டங்கள் காரணமாக ஆயிரத்து 100 பேர் காயம் அடைந்துள்ளனர். 2ஆயிரத்து 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஹொங்கொங்கில் குழப்பத்தையும், அச்சத்தையும் பரப்பி மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்கின்றனர்.

ஹொங்கொங் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புமா என்று மக்கள் கேட்கிறார்கள் ஹொங்கொங் இன்னும் மக்கள் அமைதியாக வாழ்வதற்கான இடமாக இருக்கிறதா - என்றார்.





வடகொரியா - சீனா எல்லையில் உள்ள மலைப்பிராந்தியத்தில் வாடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் குதிரைச் சவாரியில் ஈடுபட்டார். பொது வெளியில் அதிகம் உலாவாத கிம்மின் இந்தச் செயல் பலரையும் ஈர்த்தது.

## ஹொங்கொங் விடயத்தில் அமெரிக்கா நடவடிக்கை?

வோஷிங்டன். ஒக்.17

ஹொங்கொங்கில் கடந்த 4 மாதங்களாக இடம்பெற்றுவரும் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமெரிக்கா தீர்க்கமான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் இந்த விவகாரத்தில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் சகல கட்சிகளும் ஒருமித்து ஆதரவளித்துள்ளன என்றும் வெள்ளை மாளிகை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த விடயத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் காத்திரமான நிலைப்பட்டை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தங்களுடைய உள்நாட்டு விவகாரம் எனவும், இதில் அமெரிக்கா தலையிடக்கூடாது என்றும் சீனா கூறிவரும் நிலையிலும், சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வர்த்தகப் போர் இருந்துவரும் நிலையிலும் இந்த நடவடிக்கை வலியுறுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# விவசாயம் செய்வதற்கு ரோபோக்கள் ஜப்பானின் செயற்றிட்டம் ஆரம்பம்

டோக்கியோ, ஒக்.17

ஜப்பானில் ஆள்கள் பற்றாக்குறையும், விவசாய நிலங்களின் பற்றாக்குறையும் இருப்பதால் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபடுகின்ற முயற்சிகள் நடந்து வருகின்றன.



2050ஆம் ஆண்டுக்குள் மக்கள் தொகை அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், உணவுகளைத் தயாரிக்கும் வர்த்தக வாய்ப்புகளுக்குப் பன்னாட்டு அளவில் தேவை ஏற்படும் வாய்ப்புள்ளது. மேலும் இயந்திரங்களின் தேவையும் அதிகரிக்கக்கூடும்.

எனவே விவசாயத்தில் விதைகளைத் தூவுவதில் இருந்து அறுவடை செய்வது வரையான வேலைகளைச் செய்வதற்கு 20 வகையான ரோபோக்களை உருவாக்குவதற்கு ஜப்பான் அரசு முன்வந்துள்ளது. இதன் முதற்படியாக, இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனமான யான்மர், ஜப்பானின் ஹொக்கைடோ பல்கலைக்கழகத்துடன் இணைந்து ரோபோ உழவு இயந்திரம் ஒன்றை வடிவமைத்து வயலில் சோதனை செய்தது. அத்தோடு நிசான் நிறுவனம் 'ஜி.பி.எஸ்' மற்றும் 'வைவ்பை' கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் ரோபோக்களை உருவாக்கியுள்ளது. இதனால் எதிர்வரும் காலத்தில் அங்கு விவசாயிகளாக ரோபோக்களே விளங்கும் என்று





# இன்றைய நாள்

**மேடம்:** நண்பரின் உதவியால் பெருமை கொள்வீர்கள். செயலில் புதிய பரிமளிப்பும் உருவாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள். இனிய அணுகுமுறை யால் பணவரவு சீராகும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**இடபம்:** மனதில் இனம் புரியாத சஞ்சலம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். முக்கிய தேவைக்கு எதிர்பார்த்த பணம் ஓரளவு கிடைக்கும்.

**மிதுனம்:** பணிகளில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். சேமிக்கும் வகையில் தாராள பணவரவு உண்டு.

**கடகம்:** திறமைகளை வளர்த்து கொள்வீர்கள். நம்பிக்கை இழக்க வைத்த செயல் வெற்றி பெறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து வளரும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** முக்கிய பணி நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் முழு ஈடுபாடு அவசியம். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும்.

**கன்னி:** சிலர் சொல்லும் அறிவுரை சங்கடம் உருவாக்கும். புதிய முயற்சிகளை பின்னொரு அனுகூல நாளில் துவங்கலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணவரவு முக்கிய செலவுக்கு பயன்படும்.

**துலாம்:** உண்மை, நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். துவங்குகிற பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெறும்.

**விருச்சிகம்:** நிகழ்வுகளை உணர்ந்து செயல்படுவீர்கள். அவமதித்தவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணியை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** கருணை மனம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். மன உறுதியுடன் பணிபுரிவது நல்லது. பண செலவில் சிக்கனம் இருக்கும்.

**மகரம்:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வர். சமயோசித செயல் நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற அதிகம் பணி புரிய நேரிடலாம்.

**கும்பம்:** பணிகளை திறம்பட செய்வதால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.

**மீனம்:** உங்களிடம் உதவி பெற்று நன்றி மறந்தவரை மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கடின உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி. இந்துக் கல்லூரி கபடி அணிக்கு கல்லூரிச் சமூகத்தால் மதிப்பளிப்பு



யாழ்ப்பாணம், ஒக.17
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி கபடி அணியினர் கல்லூரிச் சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்றுப் புதன் கிழமை இடம் பெற்றது. முன்னதாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி கபடி அணியினர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி நுழைவாயிலிருந்து முதன்மை மண்டபம் வரை கல்லூரி பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு கல்லூரி அதிபர் விக்னராஜா தலைமையில் மதிப்பளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவி பணிப்பளர் கந்தச் செல்வன், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்களான பவானந்தன். சுகுமார், மகா தேவா சைவச் சிறுவர் இல்லத்தலைவர் பொன். நித்தியானந்தன், வன்னிப்பட்டறை இயக்குனர், யோகேஸ்வரன், சிவன் பவுண்டேசன் நிறுவனர் கணேஸ்வரன் வேலாயுதம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (23)

# யூனியன் வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக்.17
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றஅரையிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சம நிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.17
மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கால் பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் கால்ப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது .

இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தி ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஒக்.17
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.17
பருத்தித்துறை லீக்கின் அனுமதியோடு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக யங்கம்பன்ஸ் வீரர் ஆகாஷ் தெரிவு செய்யப்பட்டார்.

கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும், கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கலைமதி விளையாட்டுக் கழக அணி வீரர் அபி தெரிவு செய்யப்பட்டார்.

இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணிக்கும், கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டமானது சமநிலையில் முடிவடைந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் விமல் தெரிவு செய்யப்பட்டார். (23)

## பூப்பந்தாட்டத் தொடர்:
# வவு. தமிழ் மத்.ம.வி. அணி காலிறுதியுடன் வெளியேற்றம்

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி காலிறுதியாட்டத்துடன் தொடரில் இருந்து வெளியேறியது.

நேற்று புதன் கிழமை கண்டி மாநகர சபை உள்ளகரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி மோதியது. இதில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றதால் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி காலிறுதியாட்டத்துடன் தொடரில் இருந்து வெளியேறியது. (23)

## பளு தூக்கல் போட்டியில்
# வட மாகாணத்துக்கு தங்கம், வெள்ளி

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம். மகிழினி தங்கப் பதக்கத்தையும், பாசையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த அ. விஜிதா வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டி பொலநறுவை றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 40 கிலோ எடைப் பிரிவில் எம். மகிழினி சினெச் முறையில் 38 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 45 கிலோ பளுவையும் ஒட்டு மொத்தமாக 83 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், பாசையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அ. விஜிதா சினெச் முறையில் 35 கிலோ பளுவையும் கிளின் அன் ஜக் முறையில் 48 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 83 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரதன் போட்டி வேறு இடத்துக்கு மாற்ற முடிவு

ஒலிம்பிக் போட்டி அடுத்த வருடம் ஜப்பானில் உள்ள டோக்கியோ நகரில் இடம்பெறவுள்ளது. போட்டிகளை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜப்பான் செய்து வருகிறது.
ஒலிம்பிக் போட்டி அடுத்த ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை இடம்பெறவுள்ளது. இந்தக் காலப் பகுதியில் ஜப்பானில் கடும் வெப்பம் நிலவும் என்று கருதப்படுகின்றது.
இதனால் மரதன், நடை பயணம் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது.
சமீபத்தில் தோஹாவில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப்பில் மரதன் மற்றும் நடை பயண போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகள் முழுமையான தூரத்தை கடக்க முடியாது மயங்கி வீழ்ந்தனர்.
இதேபோல் ஒலிம்பிக் தொடரிலும் நடந்தவிடக்கூடாது என்பதால், மரதன் மற்றும் நடை பயணம் ஆகிய பந்தயங்களை டோக்கியோவில்இருந்து800கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சப்போரோ நகருக்கு மாற்ற பரிசீலனை நடைபெற்று வருகிறது.
சப்போரோவில் 1972 ஆம் ஆண்டு குளிர் கால ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. டோக்கியோவை விட இங்கு வெப்பம் குறைவாக இருக்கும்.



# சிம்பாப்வேயின் தடை நீங்கியது

சிம்பாப்வே மற்றும் நேபாள கிரிக்கெட் அணிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கியது ஐ.சி.சி. சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு காரணமாக கடந்த ஜூன் 22 ஆம் திகதி சிம்பாப்வே கிரிக்கெட் சபையை ஐ.சி.சி கலைத்தது.
அதன் பின்னர் சிம்பாப்வே அணியை நிர்வகிக்க இடைக்கால நிர்வாக குழுவை சிம்பாப்வே அரசு அமைத்தது. இதுகுறித்து விவாதித்த ஐ.சி.சி. விதிகளை மீறி செயல்பட்ட சிம்பாப்வே அணிக்கு கடந்த ஜூலை மாதம் தடை விதித்தது.
இதே காரணத்துக்காக 2016 ஆம் ஆண்டு நேபாள அணிக்கும் தடை விதிக்கப்பட்டது. தற்போது அந்தத் தடை நீக்கப்பட்டது.
இது குறித்து ஐ.சி.சி., தலைவரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது;
ஐ.சி.சி., விதிகளை நிபந்தனை இன்றி ஏற்றுக் கொண்ட சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் மீண்டும் நிரந்தர உறுப்பினராக ஏற்கப்பட்டது. இதேபோல நேபாள கிரிக்கெட் சங்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அடுத்து. இதன் மீதான தடையும் விலக்கிக் கொள்ளப்படும் - என்றார்.

## ஆப்கானுக்கு எதிரான மே.இ.தீவுகள் அணி அறிவிப்பு

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் டாரன் பிராவோ நீக்கப்பட்டுள்ளார்.
மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி ஆப்கானிஸ்தானுடன் மூன்று ரி-20, 3 ஒரு நாள் போட்டி மற்றும் ஓர் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளது. இதற்கான மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
இதில் டெஸ்ட் அணியில் இருந்து டாரன் பிராவோ நீக்கப்பட்டுள்ளார். காயம் அடைந்த கேப்ரியலுக்கு பதிலாக அல்ஜாரி ஜோசப் இணைக்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத்தீவுகள் டெஸ்ட் அணி வருமாறு:
ஹோல்டர் (அணித் தலைவர்), ஹோப், கேம்ப்பெல், பிராத்வெயிட், ஹெட்மயர், புரூகஸ், ரோஸ்டன் சேஸ், டவ்ரிச் சுனில் அம்பரிஸ், ஜோமல் வாரிகன், கார்ன்வெல், கேமர்ரோச், கீமோ பவுல், அல்ஜாரி ஜோசப்.

## வோட்சனின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆபாச படங்கள்

தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆபாசப் படங்கள் பதிவேற்றப்பட்டமைக்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோட்சன் மன்னிப்புக் கேட்டுள்ளார்.
சில நாட்களுக்கு முன்பு வோட்சனின் ருவிற்றர் பக்கம் ஹேக் செய்யப்பட்டது. இந்த நிலையில் தற்போது அவரது இன்ஸ்டாகிராம் கணக்கும் ஹேக் செய்யப்பட்டுள்ளது.
அவரது இன்ஸ்டாகிராம் கணக்கில் சில ஆபாச படங்கள் பதிவேற்றப்பட்டு இருந்தன. இதுகுறித்து ஷேன் வோட்சன் விளக்கமும் மன்னிப்பும் கோரியுள்ளார்.
இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர்,
எனது இன்ஸ்டாகிராம் கணக்கில் வெளியிடப்பட்ட சட்டவிரோத புகைப்படங்களுக்காக அனைவரும் என்னை மன்னித்துவிடுங்கள். முதலில் எனது ருவிற்றர் கணக்கு ஹேக் செய்யப்பட்டது.
இப்போது இன்ஸ்டாகிராம் பக்கமும் ஹேக் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற விடயங்கள் நடக்கும் போது இன்ஸ்டாகிராம் மிக விரைவாக உதவ வேண்டும். ஆனால் நீண்ட நேரம் எடுத்துக்கொள்கிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.




## ரி– 10 ஒலிம்பிக்: இடம்பிடிக்க காத்திருக்கும் அந்த்ரே ரஸல்

10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் முறை ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டியை இடம்பெற வைக்க உதவிகரமாக இருக்கும் என அந்த்ரே ரஸல் தெரிவித்துள்ளார்.
மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சு சகலதுறை ஆட்டக்காரர் அந்த்ரே ரஸல் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் உலகளவில் நடைபெறும் பெரும்பாலான ரி-20 லீக்கில் விளையாடி வருகிறார். பந்தை எல்லைக் கோட்டுக்கு அப்பால் அடிக்கடி அனுப்பும் திறமைப்படைத்த இவர் டுபாயில் நடைபெறும் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட 'ரி-10' லீக்கில் விளையாடி வருகிறார்.
உலகின் மிகப்பெரிய தொடராக கருதப்படும் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டு இடம் பெறாமல் இருக்கிறது. உலகில் உள்ள கிரிக்கெட் அணிகள் அனைத்தும் பங்கேற்றால் நீண்ட நாட்கள் ஆகும் என்பதும் இடம் பெறாததற்கு ஒரு காரணமாக இருந்தது.
இந்த நிலையில் பிரபலமாகி வரும் 'ரி-10' ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம் பிடிக்க உதவியாக இருக்கும் என அந்த்ரே ரஸல் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து ரஸல் தெரிவிக்கையில்;
ஒலிம்பிக் விளையாட்டில் கிரிக்கெட் இடம்பெறுவது மிகவும் சிறப்பான அம்சமாகும். ஒலிம்பிக்கில் ஒவ்வொரு வீரர்களும் அவர்களது சொந்த நாட்டின் பிரதிநிதியாக கலந்து கொள்ள விரும்புவார்கள் என்பது எனக்குத் தெரியும்.
ரி-20 கிரிக்கெட்டை விட ரி-10 மிகவும் குறுகிய கால போட்டி. துடுப்பாட்ட வீரர்கள் குறுகிய நேரத்தில் விரைவாக விளையாட வேண்டும். முதல் பந்தில் இருந்தே அடித்து விளையாடலாம் - என்றார்.



### டென்மார்க் பகிரங்க பூப்பந்தாட்டத் தொடர்

# சாய்னாவை வெளியேற்றினார் ஜப்பான் வீராங்கனை தகாஹாஷி




டென்மார்க் பகிரங்க பூப்பந்தாட்ட இந்திய வீராங்கனை சாய்னா நேவால் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்தார்.

டென்மார்க் பகிரங்க பூப்பந்தாட்டம் ஒடேன்ஸ் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான சாய்னா நேவால் முதல் ஜப்பானைச் சேர்ந்த சயாகா தகாஹாஷியை எதிர்கொண்டார்.
இதில் சாய்னா 15:21, 21:23 என்ற நேர்செற் கணக்கில் தோல்வியடைந்தார்.
முதல் செற்றில் சாய்னாவும் ஜப்பான் வீராங்கனையும் ஒரு கட்டத்தில் 7:7 என சமநிலையில் இருந்தனர். அதன் பின் ஜப்பான் வீராங்கனை தகாஹாஷி 11:8 என முன்னிலை பெற்றார். இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியதும் தகாஹாஷி சாய்னாவுக்கு கடும் நெருக்கடி கொடுத்தார். அவரது நெருக்கடியை சாய்னாவால் எதிர்கொள்ள முடியவில்லை. இதனால் தகாஹாஷி 20:13 என முன்னிலை பெற்று, அதன்பின் 21:15 என முதல் செற்றை கைப்பற்றினார்.
2ஆவது செற்றிலும் தகாஹாஷி 11:9, 15:10, 15:13, 20:20 23:21 என்ற கணக்கில் கைப்பற்றி வெற்றி பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம், உணர்ச்சிகளை எனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பேன்

## டோனி ருசிகரம்



நானும் சில நேரங்களில் கோபம் அடைவேன். எனினும் அதிலிருந்து விரைவில் மீண்டுவிடுவேன் என இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

இவர் இந்திய அணியின் கூல் கப்டன் என எல்லோராலும் அழைக்கப்படுபவர். உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவில்லை. டோனி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு பின்பு பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவிப்பார் என பலர் கருத்து தெரிவித்து வந்தனர். எனினும் உலகக் கிண்ணத் தொடருக்கு பின் இவர் நிகழ்ச்சிகள் எதிலும் பங்கேற்கவும் இல்லை.

இந்நிலையில் உலகக் கிண்ணத் தொடருக்கு பின்பு முதல் முறையாக தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் டோனி கருத்துத் தெரிவிக்கையில்;

நானும் எல்லோரையும் போல ஒரு சாதாரண மனிதன் தான். எனக்கும் கோபம் வரும். ஆனால் மற்றவர்களை விட கோபத்தை கட்டுபடுத்துவதில் சிறப்பாக இருப்பதால், எனது கோபம் வெளியே தெரியவதில்லை.

நானும் சில நேரங்களில் கோபம் அடைவேன். எனினும் அதிலிருந்து விரைவில் மீண்டுவிடுவேன். ஒரு பிரச்சினையை ஆராய்வதைவிட அதற்கான தீர்வை தேடுவதையே நான் நினைப்பேன். அதுவே எனது உணர்ச்சிகளை கட்டுபடுத்துவதற்கான சிறப்பான வழியாக நான் கையாள்கிறேன்.

இந்தியர்கள் எப்போதும் அதிகம் உணர்ச்சி வசப்படுவார்கள். ஆனால், நான் எனது உணர்ச்சிகளை கட்டுப்பாட்டில் வைக்க நினைப்பேன். ஏனென்றால் என்னுடைய உணர்ச்சிகள் கட்டுப்பாட்டில் இருந்தால் தான் என்னால் நல்ல முடிவுக்கான பாதையை அடைய முடியும். முடிவை நினைத்து பணியாற்றினால் அது அதிக நெருக்கடியை தரும்.

ஆகவே நான் முடிவை நினைத்து செயற்பட மாட்டேன். என்னைப் பொறுத்தவரை ஒரு அணியின் தலைவர் என்பவர் மிகவும் நேர்மையானவராக இருக்கவேண்டும் - என்றார்.




## தமிழ் என் தாய் மொழி பதில் கொடுத்த மிதலிராஜ்

இந்திய மகளிர் அணித் தலைவி மிதலி ராஜிற்கு தமிழ் தெரியாது ஏனைய மொழிகள் மாத்திரம் தெரியும் என ருவிற்றரில் கேலி செய்தவர்களுக்கு அவர் தமிழில் பதில் அளித்துள்ளதுடன் தமிழ் என் தாய் மொழி என குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்க பெண்கள் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை இந்திய பெண்கள் அணி கைப்பற்றினர்.

மேலும் பெண்கள் கிரிக்கெட் உலகில் 20 வருடங்கள் பூர்த்தி செய்த ஒரேயொரு வீராங்கனை என்ற சாதனையையும் மித்தாலி ராஜ் நிகழ்த்தியுள்ளார்.

மிதலி ராஜின் இந்த சாதனையை சச்சின் ருவிற்றரில் பாராட்டியிருந்தார்.

சச்சினின் இந்த ருவிற்றுக்கு பதிலளித்திருந்த மிதலி ராஜ் ஆங்கிலத்தில் நான் எனது வாழ்க்கை முழுவதும் உதாரணமாக கொண்ட நபர் ஒருவரால் பாரட்டுப்பெறுவது மிகவும் சிறப்பான விடயம் என தெரிவித்துள்ளார்.

இவரின் இந்தக் கருத்து தெரிவித்த பலர் அவருக்கு தமிழ் தெரியாதா என கேள்வி எழுப்பினர்.

அவருக்கு தமிழ் தெரியாது,அவருக்கு ஆங்கிலம் தெரியாது,தெலுங்கு இந்தி தெரியும் என கேலி செய்திருந்தனர்.

இதற்கு பதிலளித்துள்ள மிதலி ராஜ் தமிழ் என் தாய்மொழி நான் நன்றாக தமிழ்பேசுவேன் தமிழனாய் வாழ்வது எனக்கு பெருமை என குறிப்பிட்டுள்ளார்.

**மரண அறிவித்தல்**

பிறப்பு 28 . 08 . 1959



இறப்பு 16 . 10 . 2019

**வேலன் தர்மகுலசிங்கம் (பயில்வான்)**

அறிவாலயம், இமையாணன், உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் சர்வோதய வீதி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட **வேலன் தர்மகுலசிங்கம் (பயில்வான்)** நேற்று **(16.10.2019)** காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன்-நாகம்மா தம்பதிகளின் மகனும் இளையதம்பி காலஞ்சென்ற பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் சாந்தி அவர்களின் அன்புக்கணவரும் இந்துஜா, யாதவன், நிஹாசினி, நிஹாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பூரணம் மற்றும் அம்பிகா, பவளம், மலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தியாகராசா, தேவன் (பட்டு), பரஞ்சோதி, நற்குணம், ரஞ்சிதலோஜினி, பவானந்தராசா, ரதீஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் சந்தனகுமார், அன்பரசி, அருணா ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(17.10.2019)** வியாழக்கிழமை மு.ப **10.00** மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர்
T.P No:- 076 871 2788

## மெஸ்சிக்கு 6ஆவது முறையாக தங்கக் காலணி விருது

பார்சிலோனா கால்பந்து அணித் தலைவரும், நட்சத்திர வீரருமான மெஸ்சி 6ஆவது முறையாக ஐரோப்பியன் தங்க காலணியை கைப்பற்றியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் கால்பந்து லீக்கில் யார் அதிக எண்ணிக்கையில் கோல் அடிக்கிறார்களோ, அவர்களுக்கு ஆண்டுதோறும் ஐரோப்பியன் தங்க காலணி வழங்கப்படும்.



2018-19ஆம் ஆண்ட பருவ காலத்தில் லா லிகாவில் பார்சிலோனா அணிக்காக விளையாடி வரும் மெஸ்சி 34 கோல்கள் அடித்து முதல் இடம் பிடித்தார். இதனால் அவருக்கு தங்க காலணி வழங்கப்பட்டது. அத்துடன் மெஸ்சி 6ஆவது முறை தங்க காலணி விருதை வென்று சாதனை படைத்துள்ளார். மேலும், தொடர்ச்சியாக மூன்று முறை வென்றுள்ளார். கிறிஸ்டியானோ றொனால்டோ ஒட்டுமொத்தமாக நான்கு முறை தங்க காலணியை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SLAS கருத்தரங்கு 17
P.கமல்தாசன் மற்றும் வளவாளர்கள்
19.10.2019 சனி
நாடறிந்த வளவாளர்கள்
A.M றியாஸ்
C. அமல்ராஜ்
A.K கீர்த்திராஜன்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
077 111 6739
076 166 1986

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org